739

28 JAN 1935

கொ...
டாசோ...
பிராட்காள...
மாஸ்டர் வாய்...
இவைகளில் பிரபல
...கள்
பாடிய
கிராமபோன்

GOVT. SENIOR TRANSLATOR'S OFFICE
8 APR 1935
MADRAS

புதிய பிளேட் சங்கீதம்

(100 பாகங்கள்)

அடங்கியது.

விலை ரூ 1-0-0

V. கருப்பண பிள்ளை,



NR21
N35
184448

உ

சிவமயம்.

கிருமபோன்

புதிய பிளேட் சங்கீதம்.

பாட்டு நிர்.

1. (கோவலன், பேசும்படக்காக்ஷியில் பாடியது).

சங்கீத வித்வான்

மிஸ்டர் V. A. செல்லப்பா அய்யர்

(கோவலன் மாதவியை வேண்டல்)

பல்லவி

ஜீவசிந்தாமணியே எந்தன் தெய்வநாயகி
உனை தினமும் நினைந்து உருகினேன்
அருள் செய்வாய் தாயகி (ஜீவ)

அநுபல்லவி

மனமகிழ்ந்தேன் னருகினில் வாடி
மலர்வாயினால் ஒருமுத்தம் தாடி
பாருகனிவுடன் என்கலி தீரடி
காருண்யமாகக் கண் பாரடி (ஜீவ)

சரணம்

அருகினில் வந்து அன்பு மிகுந்து
மனமுவந்து ஒரு முத்தம் தருவாய்
மதன் கணைகளைந்து மருவிச்சேருவாய்

புகழ்புவன சுந்தரநாயகி
பொறிஅரவணை துயிலும்விதாயகி
பாருகனிவுடன் என்கலிதீரடி
காருண்யமாகக் கண்பாரடி (ஜீவ)

---

2. (கோவலன் பேசும்படக்காக்ஷியில் பாடியது)

சினிமா ராணி

மிஸ். T. P. ராஜலெக்ஷிமி (மாதவி)

(மாதவி, கோவலனை அழைத்தல்)

வாராய் அழகுதுரை மாரா மலரணையில்
சீரா யினிக்க நித்தமே
செவ்விதழ் ரசம் தாராய் இனிக்க நித்தமே

(தொகையறு)

மைவிழிகள் சொருகு தெந்தன்
கைவளை கழலுதே—கனிமொழி
உளருதே அம்மாரன் எய்
கணைக்கிப் பயந்தேன் இழக்கப்பட்டு
தந்தருள்வீர் நீர்

(பாட்டு)

மேலாகிய கொக்கோக நூலாய்ந்திடும்
சற்குண சீலா சிங்காரத் தேசிகனே
தேவேந்திரனைப்போலாக வாழும் போகனே (வா)

---

3. (ஷையார் பாடிய விருத்தம்)

கலவையும் புனுகுசாந்து கமழ்தர மெய்யிற்பூசி
முலேமிசை ஹாரம்பூண்டு நல்லமுல்லே மல்லிகைசூடி
இலகித மாதரோடு எழிலிசை யாழுமேந்தி என்கணவரோடு
நிலவினிற் கெதிரேசென்று நிற்குநாள் எந்தநாளோ.

4. (கோவலன் பேசும்படக்காக்ஷியில் பாடியது)

T. P. ராஜலெக்ஷிமி.

(மாதவி கோவலனே பிரிந்து துயருறுதல்)

(பாட்டு)

உய்வகை யறியேன்—எந்தன்
உத்தமர் சென்ற இடம் தெரியேன்
தெய்வமே வேறொன்றுமே புரியேன்—இந்த
தீவினைக்கே ஆவியைத் தரியேன்
சேயிழை நானே மெலிந்தேனே
சிந்தை நொந்தேனே
நாயகன் தன்னேப் பிரிந்திட்டேனே
காசாசை பிடித்தேன்—எந்தன்
கண்ணுன காதலனே வெறுத்தேன்
நேசானு கூலனேயே விடுத்தேன்—பலர்
நிந்தனைக் காளாகவே ஜெனித்தேன்
நீ நிலமீது நெரிதவாது
வாணிபம் புரியும் நேயன் சென்றதால்
துயர் மிகுத்தேன் (உய்)

5. (டாக்கீஸ் கோவலனில் பாடியது)

V. A. செல்லப்பா { T. P. ராஜலெக்ஷிமி } தர்க்கம்.
கோவலன். மாதவி.

பாட்டு.

மாதவி:—போய்வருவேன் சபையோரே போய்வருவேன் நான்
கோவலன்:—பூவையேநீ என்னைவிட்டு போகலாமோதான்
மா:—ஞாயமில்லை என்று முன்னம் நீர்சொல்லியதேன்
கோ:—நானெப்போது சொன்னேனடி நாரிபொய்யுமேன்
மா:—நாட்டிலுள்ளோர் ஏசுவார்கள் கூட்டிநான்போகேன்
கோ:—வாட்டுதடி மாரன்கணை கோட்டியானேன் நான்
மா:—என்னை வம்பு செய்யாதே
கோ:—காலில் கும்பிட்டேன் மாதே
மா:—இது தெம்பு சொல்தானே
கோ:—எனக்கின்பம் நீ தானே

---

6. (டாக்கீஸ் பவளக்கொடியில் பாடியது)

சங்கீத வித்வான்

M.K. தியாகராஜ பாகவதர்—அர்ச்சுனன்

(காந்திலண்டன் சேர்ந்தார் மெட்டு)

(இராகம் காம்போதி—தாளம் ஆதி.)

தாளேன் மனஸ்தாபம் தயவே இல்லையா
இல்லையா, இல்லையா, இல்லையா, (தாளே)

ஆளன் உனைமனந்த அர்ஞுனன் நானல்லவோ
மூளும் துயர் நான் சொல்லவோ
சொல்லவோ, சொல்லவோ, சொல்லவோ,(தாளே)

பாண்டியற்குப் பிறந்த பாவையே உந்தன்சொந்த
காண்டீபன் வந்தேன் காணடி
காணடி, காணடி, காணடி, (தாளே)

---

7. (சுபத்திரையிடம் அர்ச்சுனன் விடை கேட்கல்)

ஷையார் பாடிய விருத்தம்.

சத்தியமே நெறியாய்க் கொண்ட தர்மபூபதிதனக்கே
இத்தினம் பாக்கு சொக்கியதால் எனையவர் முகத்தில் [விழிக்க
சித்தமாய் தூதர் பறையடித்தென்னை தெருவெல்லாம் [தேடுகின்றார்

---

8. (டாக்கீஸ் பவளக்கொடியில் பாடியது).

ஸ்ரீவை S. D. சுப்புலக்ஷிமி—அல்லி.

விருத்தம்.

சண்டாளமூர்க்கன் தருதலைமடையன்
தடித்தனமுடையதோர் பொடியன்
கண்டோர்கள்சொல்லைக் கேட்டாலும்
பதுமைக்கற்களை அலங்கரித்திருந்தாலும்

பெண்டாடுமெனவும் பிதற்றிடும்பேரினை
உரைக்கிலுன் நாவை
துண்டாகநறுக்கு நெருப்பினிலிட்டு
சுருக்கினில் கருக்குவேன் விடடி.

---

9. (ஷியார் ஷி சினிமாவில் பாடியது)

விருத்தம்.

உன்னதமுடைய அண்ணு உரைத்தது வாஸ்தவந்தான்
என்னிறு மிவரின் சேதி எவருக்கு மனங்கொள்ளாது
மன்னவர் குலத்துதித்து மனைவிமைந்தர் மேலன்பு
தன்னையும் விடுத்தாரோடு சரசிக்க நியாயமுண்டோ

(ஷியார் பாடியது)

பாட்டு.

போனல் போகுது உட்காருங்கோ---ஓ மன்னு (போனல்)
ஆனாலும் அண்ணன் முகத்துக்காக—இப்போ (போனல்)

---

10. (டாக்கீஸ் சகுந்தலாவில் பாடியது)

L. நாருயண ருவ்.

(நந்தவனத்திலோர் ஆண்டி மெட்டு)

வேட்டையில் நான்பட்ட பாடு — அதை
வெளியிலே சொல்லவென்ருல் — வெட்கக்கேடு

காட்டைக் கலைத்திடும் போது — எந்தன்
கர்ப்பங் கலங்கித் தவித்தேனே — தீரு
பாட்டை யெல்லாம் புலி யானை — நாலு
பக்கத்திலும் சிங்கம் பன்றியின் — சேனை
வேடப்பட்டி மக்கள் சத்தம் — அண்டம்
வெடித்துக் காதுரெண்டும் கடுத்ததே— நித்தம்
சரியான சாப்பாடும் இல்லை — தலை
சாய்ந்து படுக்கவோ கூடாத — தொல்லை
மகாராஜாவும் வரக்காணேன் — பெரும்
வம்பிலேதான் வந்து மாட்டிக் கொண்டேனே.

---

11. தமிழ் பேசும் படக்காக்ஷி (சகுந்தலா)வில் பாடியது

P. S. வேலுநாயர்—துஷ்யந்தன் } தர்க்கம்
T. S. வேலம்மாள்—சகுந்தலா }

கிளிக்கண்ணி—மெட்டு.

சகு—சொன்னதெல்லாம் மறந்து தோகையெனைப்பிரிந்து
நன்னகர்க் கேகிடவே துரையே
நல்லவிடை கோரினீரே

துஷ்— இன்னமும் சந்தேகமா எந்திழையே சோகமா
சொன்னசொல்லிற் துரோகமா கிளியே
சோதிப்பதும் நீதியாமா

சகு—யோகத்திருந்த என்னை மோஹத்தி லாழ்த்திவிட்டு
வேகத்துடனே சென்றால் துரையே
வேறுதுணை யாருமுண்டோ

துஷ் —வாரமொன்றிற் குள்ளுன்னை வரவேற்றுக்கொள்வேன்
நேரமாகுதென் கண்ணே கிளியே [பெண்ணே
நேரிலுண்மை கூறினேனே

12, T. S. வேலம்மாள் பாடியது.

வசந்தகாலம்.

காகூஷி கண் காகூஷியே—மெட்டு.

பல்லவி

மாலைக்காலமே மகாவஸந்த (மாலை)

அனுபல்லவி

மாருத மந்தம் மீறு சுகந்தம்
நேருத வுந்தின தாருக நந்தன (மாலை)

தொகையரு

வாலைப்பருவ வனக்கிளிகள் வசனம்
படிக்க மதுகரந்தான்
மேலைச்சுருதி தனைக்கூட்ட
விளம்புங்கூகை மத்தளந்தான்

பாட்டு.

பாலைக்கனியை தேன் அமுதை
பழிக்கக்குயில்கள் பாடுதே
சுவர்க்கமெனப் பழுத்திருக்குதே
அரும்பெரும் பாக்யம்
அடைந்திடும் யோக்யம்
ஆகுலந்தீரப்பாஸ்கரன்வாக்யம்
ஆனந்த சிலாக்யம் (மாலை)

---

13. (பேசும்படக்காக்ஷி கிருஷ்ணலீலையில் பாடியது)

மிஸ். P. S. சிவபாக்கியம்,

(இடைச்சி பாட்டு)

பாட்டு.

மந்தையிலே மாடுமேய்க்கும் மச்சானுக்கு மத்தியானம்
மொந்தையிலே சோத்தை ஊத்தி
முருங்கக்கீரை வதக்கிக்கிட்டு போரேன்
மொளகாயும் வத்தலும் பொரிச்சிக்கிட்டு போரேன் (மந்

சம்பாவரிசிகுத்தி சமயல்பொங்கி சாருவச்சி
கும்பாநிறைய போட்டு
கொண்டானுக்கு கொண்டுபோரேன் சோத்தை
என்கொழுந்தனுக்கு கூடச்சேத்து வாத்தே

கஞ்சி குடிக்கவிட்டு
கட்டுச்சுமைக் கட்டிக்கிட்டு
அஞ்சாறுபேரும்கூடி ஆட்டபாட்டத்தோடு வீட்டை தேடி
அதிசீக்கிரத்தில் போகனும் ஓடோடி (மங்)

---

14. கொலம்பியா புதிய ரிக்கார்டு.

காலம் சென்ற S.G. கிட்டப்பா பாடியது

இராகம் முகாரி.

வேடிக்கையாகவே நானும் சுமந்திரனும்
புறு விட்டு விளையாடினேம் விண்ணதனில் என்புறு
ஏதோ அதை ஒருவரும் விரட்டாதனல் வெருண்டு
நாடியே சிற்றன்னை மனையினில்
இருப்பதாய் நான் அறிந்து
தாளினை நன்ருய் மகிழ்ச்சி பெரும் என்
தாயிடத்தில் நவிலுவேன் என்னிடமே
ஓடியே செல்ல என்மேல் தொந்தரவித்தால்
உள்ளதொரு சத்திமே உண்மையாய்
உரை செய்ய என்மனம் நம்பாமல்
உவகையுடன் அங்கு சென்றேன்
அன்னை கூறும் என்ன ஜோரும்
என்னையே கொஞ்சும் பழமொழி பேசினல்
அந்த கோதை தனையே விலகி நான்
விட்டுக்கு ஓடினேன் கூறும்
என் மொழி சத்தியமே (வே)

---

15. (பிளேட் பின் பக்கம்)

காலம் சென்ற ஸ்ரீமான்

S. G. கிட்டப்பா, பாடியது.

இராகம் ஆனந்தபைரவி. தாளம் ஆதி.

தீங்கான மொழியே புகலுவதினால்
நலமும் வருமோ தெரிய உரை (தீங்)

ஓங்கும் பவமிதே பெருகுமென
உற்ற அறிவு சற்றேனும்
மறிகிலேன் பெரும் (தீங்)

நானோ நெறி தவறேன் உயிர்மீதில்
நாடிடாது அகல்வாய் விரைவினோடு (தீங்)

---

16 (கோலம்பியா புதிய பிளேட்)

காலம் சென்ற S. G. கிட்டப்பா,

ராகம்:- ஜகன் மோகினி. தாளம்:- ரூபகம்,

பல்லவி.

சோபில்லு ஸப்தஸ்வர
ஸுந்த ருல பஜிம்பவே மனஸா.

அநுபல்லவி.

நாபி ஹ்ருத் கம்ட ரஸன
நாஸாது லயந்து.

சரணம்.

தாருக்ஸா மாது ல லோ வர
காயத்ரீ ஹ்ருதயமுன
ஸுர பூ ஸுர மானஸமுன
ஸ்ரீப த்யாக ராஜுனி யெட

17 (கொலம்பியா புதிய பிளேட்)

காலம் சென்ற S. G. கிட்டப்பா

(நந்தனர்)

மார்கழிமாதம் திருவாதிரைநாள் வரப்போகுதையே
மனதைப்புண்ணாகப் பண்ணமலொருதரம் போய்வாவென்று
[சொல்லையே
கட்டையிருக்கையில்சிதம்பரம்போய்நான்காணவேணுமையே
கசடனுகிலு மாசைவிளையுதுன் காலுக்குக் கும்பிடையே
காலில்நகமுளைத்த நாள்முதலாயுமக் கடிமைக்காரனையே
காலபாசத்தால் காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில் வெள்ளெலும்பாட வோடியுழைத்தேனையே
உண்டதுமுறங்கின தன்றியில்வேறே யொன்றுங்காணிலையே
எட்டுமிரண்டு மறியாதபேதைநா னெளியேனுனையே
இன்னந்தாய்வயிற் றிடையணுகாம விடங்காட்டிடுமையே.

18 ஓடியன் புதிய பிளேட்

T V சுப்புத்தாயி (திருநெல்வேலி)

இறந்தாயோ அந்தோ எஸ். ஜி. கிட்டப்பா (இ)

நிரந்தர ஞானம் சேரும் தேவகானம்
நினைக்கு மிந்தியாவெங்கும் மனத்துயரடைய (இ

சிறந்திடுசங்கத் தொனியவதாரா
செங்கோட்டையில் வளர் செல்வக் குபேரா
அறம்வளர்த்த கன்னையா ஆருயிர்த்தீரா
ஆண்டாள் தசாவதாரம் பூண்டவேடம் மறந்தே (இ)

அரியவயதிருபத்தி யெட்டினிலே பொன்தேகம் அனலாய் வேக
பிரியமனமில்லாத பேதையரும் சோதாரும் பிறப்பால் அண
விரிவுபெறு சங்கீதநடனங்கண்டின்புறவே விண்ணுலகம்
அருமையுடனழைத்திடவே அரி அடைந்திட்டாயே

நாரதர் தும்புரு
நவவியாகரண பண்டித விசுவாசா
பாரத புவியெங்கும் பரவுமுல்லாசா (இ)
பக்தர் மனத்திலுறும் உத்தம நேசா.

ஒடியன் புதிய பிளேட்

19. (வீதியின் குழாயடியில் நடக்கும் காக்ஷி.)

(பாட்டு)

பானையெடடி பைப்பில் தண்ணி பிடிக்கனும்
தண்ணி பிடிக்கனும் பைப்பில்
தண்ணி பிடிக்கனும் பிள்ளை பறக்கப்
பறக்க அழுகும் போய் பால் குடுக்கனும் (பானை)

என்டி அக்கா, பாத்துக்கிட்டியா இந்த சிறுக்கி வம்பே நான்
எந்நேரமோ போட்ட குடத்தை எடுத்தெறிஞ்ச குறும்பே
ஆமாண்டிபோடி யுனக்கு முன்னே வந்தேனே
குழாய்க்கி வந்தேனே குடத்தைத்
தூக்கி வந்தேனே நான் அரை
மணி நேரம் வரையுங் காத்திருந்தேனே (ஆமா)

...த்தே கேட்டியா நீயும் பாத்தியா அடிபட்ட வாயாடி
... முன்னே வந்தவபோல அலேக்குரு லம்பாடி
எந்...சி எந்த நேரமாயிந்தி நேரமாயிந்தி
...டி மனக்கு
நின்னு நின்னு காலுங் கடுத்துப் போயிந்தி
நீங்க என்னடி எனக்கு முன்னே நீளுப் ...டிக்க
கையை நீட்டி நீட்டி எமே ... ...நததே சங்...
...னனு சொல்லுது நீங்க நமக்குத் தள்ளுது
குடத்தைத் தள்ளுது தண்ணிக்
குடத்தைத் தள்ளுது ஐயர்
எருமைக்காகத் தண்ணி பிடிக்கச் சொல்லுது

அம்போ எனக்குக் கோபிக்குது அக்காளும் வெளிக்குப் போனது அதுக்குத் தானே அவசரப்பட்டுத் தண்ணி பிடிக்கவும் வந்தது.

எடடி குடத்தை மானங்கெட்ட எடுபட்ட தட்டுவாணி
விடடியிவளை ஒருகைபார்க்கணும் மினுக்குருகுச்சுக்காரி
படபடவென அறுதலிமுண்டா பஜாரிநீங்க போடி
சும்மாசும்மா நம்பளேவையுது சொன்னது உங்கள்குதான்

ஏண்டி சிறுக்கி
என்னடி சிறுக்கி
நீனு சிறுக்கி
ஊரு சிறுக்கி
பல்லை உடைப்பேன்
கொண்டை யறுப்பேன்
லஞ்சா முண்டா
நீங்கதான் முண்டா
எடடி விளக்க மாத்தையிப்போ (பாணே)

(ஓடியன் புதிய பிளேட்)

20. (ரயில்வண்டி 3-ம் வகுப்பில் நடக்கும் காக்ஷி)

(ரயில், ஸ்டேஷன் ப்ளாட்பாரத்திற்கு வருகை)

(பட்டுக்கோட்டை)

முருக்கு மசால்வடை சுண்டல், ஸோதா லெமனட்டு, மோர், மோரு.

2

தமிழன்:—

பாய், கொஞ்சம் தள்ளியிருங்கோ.

பெங்காளி:—

கியாரே பாய்க்கு ? உதர் ஜாவ்

தமிழன்:—

என்னையா சொல்றே ஒன்னும் புரியலே.

பெங்காளி:—

கியாரே ஏய் தண்டாஹை உதர் ஜாவ்ரே

கிச்சு:—

அடி அம்மா வாடி சீக்கிரம்; ரயில் புறப்பட்டுது.

பாப்பாத்தியம்மாள்:—

அடே கிச்சு, முன்னாடி மூட்டையைப்பிடி சூத்ரா தொட்றுமே.

கிச்சு:—

ஓய் எட்டி உக்காருங்காணும் பொம்மனாட்டி உக்காரட்டும்.

தமிழன்:—

என்ன ஐயரே நாங்க பட்ற கஷ்டத்திலே எங்கய்யரே ஓய் எட்ரது?

பாப்பாத்தியம்மாள்:—

நன்னாருக்குது, எழுவெடுத்த தேட் கிளாசு வண்டிக்கு வந்தாலும் வந்தோம், சூத்ர கும்பல் நிரஞ்சிருக்குடியம்மா, பொம்மனாட்டியாச்சேன்னு கையகல இடந்தர்றாளோ?

தமிழன்:—

ஏ பாப்பாத்தியம்மா, என்னகூத்ரா கீத்ரான்னுபேசுறே

கிச்சு:—

ஓய் என்னுங்காணும் ஜாஸ்தி பேசுறே?

பெங்காளி:—

ஏ பொம்மன்வாலா, தும் என்னுத்குடா அவன்கூடப் பேசுது, இதர் பைட் நக்கோ ஜாவ்ரே.

பாப்பாத்தியம்மாள்:—

ஏண்டா கிச்சு, இந்தக்கட்டேலே போவான் என்னமோ சொல்லிக்கிண்டு, சாவ் சாவ் எங்குறானே.

கிச்சு:—

மொட்ட முண்டே, பேசாதிரேண்டி, சர்வ முட்டாளா உக்காந்திட்டிருக்கான்கள், அசட்டுத்தனமா உளறுதே.

தமிழன்:—

டே பாப்பான், ஆரேடா முட்டாளிங்கிறே பல்லே உடைச்சுடுவேன்.

பாப்பாத்தியம்மாள்:—

டே அசட்டுக் கட்டலே போவான், ஆரேடா சொல்றே? டே கிச்சு பேசாதேயிரு. பாழும் ரயில்லே ஏறிப் பட்ற சிரமம் போரும், போரும்.

பிச்சைக்காரன்:—

வேளவா எண்ணே ஆலாயித்தருணம் (வேள)

அம்மா கையில்லாத நொண்டிங்க ஒரு காலணுக் குடுங் கம்மா.

பாப்பாத்தியம்மாள்:—

பாட்டும் நீயும் பத்திஎரியுது, எத்திப்போடா அங் தண்டே.

பிச்சைக்காரன்:—

காலங்கலிகாலமாச்சுதே வடிவேலையா
காப்பி ஒட்டல் அதிகமாச்சுதே.

ஐயா, நீங்களாவது ஒரு காசு குடுங்கையா.

பெங்காளி:—

அரே இஸ் கியாரே திவாணு பைஸாபி நை, குஜ்பீ நை.

நாட்டுப்பெண்:—

ஏ பாப்பாத்தியம்மா கொஞ்சம் எட்டுங்கோ
பக்கமே நிக்கிறே னேநேரம்
கொஞ்சந்தான் தூரம் வந்ததும் போரோம். (பாப்)

பாப்பாத்தியம்மாள்:—

இந்நேரம் பட்டபாடும் போதாதா
எட்டடி மட்டியே இடமேது
இங்கு கிடையாது ஒன்றும் முடியாது. (அடி இந்)

தமிழன்:—பெண்ணோடு பெண்பிள்ளை யுட்காரவே
பேசுறாய் ஏசுறாய் பேய் போலே வெறி
நாய்போல சரியாய் மேலே (அம்மா பெண்)

பெங்காளி:—

என்னுடா சைத்தான்கோ நம்பகிட்டே
இப்படிக் கடுபுடு கர்த்தாஹே
அந்தர் ஜாத்தாஹேதம் மார்த்தாஹே (அடே இன்)

கிச்சு:—

ஏங்காணும் சாஹேப்பு நீங்களெல்லாம்
எங்கம்மா கூடவே எதிர்வாதங் கொண்ட
பிடிவாதம் சண்டை சரிபோதும். (ஓய் எங்)

பெங்காளி:—

என்னுடா நம்பள்கிகூட ஜூட் பாத்

தமிழன்:—

(அடே) வாய் பேசாதே கொடுத்திரப்போறேன்.

தமிழச்சி:—

இந்தப் பாப்பான் பாப்பாத்திக்கி என்ன வாயோ

பாப்பாத்தியம்மாள்:—

பாப்பாரு பல்லில் விழுந்தால் நாசம்.

கிச்சு:—

அதோ போலீஸ்காரன் வாரானிருங்கோ.

பெங்காளி:—

ஜாவ் ஜாவ் அஜாடி.

தமிழன்:—

மஹா வாயாடி

தமிழச்சி:—

ஆமா லம்பாடி.

பாப்பாத்தியம்மாள்:—

கேட்பார் யாருமில்லையாடி.

எல்லோரும்:—

அம்மா அடிக்கிறான், அதோ மிதிக்கிறான், இதோ உதைக்கிறான், கையையொடிக்கிறான், காதைக்கடிக்கிறான்

பாப்பாத்தியம்மாள்:—

ஐயையோ அப்பப்பா அம்மம்மா கூப்பிடு போலிஸை.

போலிஸ்:—

டே, அடிதடி நிறுத்து. நீங்க அத்தனை பேரும் சார்ஜு இறங்கு கீழே, இறங்கு கீழே.

---

21. (கொலம்பியா புதிய பிளேட்)

மிஸ் M. K. சீதாலக்ஷிமி (மதுரை)

(காமிக் பாட்டு.)

வசனம்.

ஏ! அய்த்தை மகனே என் புருஷன் எனக்கு பிடிக்கவே பிடிக்கலே பாத்துக்கொங்க அவக எங்கேயோ போய்ட்டாங்க இன்னும் வரக்காணோம்.

(பாட்டு.)

ஐந்து மூணும் கூட்டிவிட்டால் ஆகுமே யெட்டு
கணக்கானது மட்டு நான மானத்தை விட்டு
இந்த அத்தை மகளின் கழுத்தில் தாலியை கட்டு
கட்டு தாலியை கட்டு நீயும் தாலியைகட்டு

(வசனம்).

ஏ மச்சான் அவனுக்கு கட்டுற தாலியை அத்துப் போடு சொல்லுறேன் நீ புதுசா கட்டுங்றேன் தாலியை ஆனல் இவன் எப்ப போனுன் தெரியுமா.

(பாட்டு.)

காவலுக்கு போன மச்சான் வந்து சேரட்டும்
நேற்று காவலுக்கு போன மச்சான் வந்து சேரட்டும்
காசுக்கென்ன செய்யட்டும்
ராஜா வந்து சேரட்டும் பிரபு வந்து சேரட்டும்
ஐயோ காலணுவுக்கு கிழிவாங்கி தாணுய் போடட்டும்
பொடி காலணுவுக்கு கிழிவாங்கி தாணுய் போடட்டும்

(வசனம்.)

ஏ மச்சான் நேத்து ஆத்துத்தண்ணியிலே போயி பச்சைத்தண்ணியிலே விழுந்துட்டேன் பாரு மூக்கு கோண கோணண்ணுட்டே பேசிட்டு இருக்கு நீ புதுஷா சேலே எடுத்து தாரேங்கிரேயே என் புருஷன் என்ன சேலே எடுத்து தந்தான் தெரியுமா சொல்லுறேன் கேளு.

(பாட்டு.)

போன தை பொங்கலுக்கு என் புருஷனும் வாங்கி
தந்த புதுசு கண்டாங்கி திட்டாய் போனதால் ஏங்கி
வெளுக்கப்போட்டேன் தந்தால் இல்லே வண்ணாத்திக்
கென்னராங்கி

(வசனம்.)

பாரு போனவருஷம் பொங்கலுக்கு எடுத்துக்கொடுத்த சேலேயோடே திட்டாய் போய்ட்டேன் வண்ணாத்திக்கு போட்டேன் வண்ணாத்தி ராங்கியா, கொண்டுவந்து கொடுக்கிறேன்னு சொல்ரூங்க பாத்துக்கொங்க (ஐந்து)

---

22. (கோலம்பியா புதிய பிளேட்)

மிஸ் M. K. சீதாலக்ஷிமி (மதுரை)

(குலேபகாவலி சரித்திரம்)

தாசி வசனம்.

மாமா இவர்கள் சூதாடி தோற்று இருக்கிறூர்களே இவர்களுக்கு என்ன வேலே செய்யவேண்டும் தெரிவியுங்கள்.

மாமா வசனம்:—

உனக்கு என்ன அபிப்பிராயமோ அந்த தண்டனையைக் கொடு காரணம் என்ன என்று கேட்டால் மறுபடியும் அவர்களுக்கு தாசிவீட்டு ஞாபகமே வரக்கூடாது அப்படி தண்டனே கொடு.

(பாட்டு கும்மி)

பாணிக்கிரகம் செய்ய நினைந்தென்னை
பார்த்திரு கண்களும் பூத்தவரே
சாணம் தெளித்து வீடுதனைக்கூட்டி
சமையல் செய்வது உன் வேலை

தாசி வசனம்.

மாமா இவருக்கு நான் வேலை கொடுத்துவிட்டேன் உம்முடைய வேலை ஏதாவது இருந்தால் தெரிவியுங்கள்.

மாமா வசனம்.

சரி இப்போது சொன்னது கவனித்தியா சாணம் தெளித்துவிட்டு உடனே எனக்கு சாயந்தரம் சாயந்தரம் பொடி வாங்கிட்டு வந்து தரணும்.

கும்மி பாட்டு.

காலையிலும் உச்சி மாலையிலும் என்முன்
கைகட்டி நின்றெதிர் பேசாமலே
சேலை துவைத்து படுக்கை அலங்காரம்
செய்து வருவது உன் வேலை

தாசி வசனம்.

மாமா இவர்தான் என்னைக் கண்டமாத்திரத்தில் நான் தான் விவாகம் செய்வேன் என்பதாகத் தெரிவித்தார் ஆகையினால் இவர்க்கு சரியான வேலை கொடுத்து இருக்கிறேன் உம்முடைய வேலையைத் தெரிவியுங்கள்.

மாமா வசனம்.

அங்கே படுக்கையறையை சுத்தப்படுத்திவிட்டு உடனே எனக்கு வந்து இரண்டு நிமிஷம் பங்கா போடு ராஜா.

கும்மி பாட்டு.

அஞ்சாது முன் வந்த வஞ்சகனே
நான் நீராடப் போகின்ற சமயத்திலே
மஞ்சள் அரைத்து விளக்கெண்ணெய் தேய்த்து
மகிழத் தருவது உன் வேலை

தாசி வசனம்.

மாமா இவர்தான் என்னை விவாகம் செய்துகொள்வேன் என்பதாக முன்னமே வந்து நின்றுகொண்டிருந்தார் கொஞ் சமாவது நாணப்பட்டார் என்பதாக தெரிவிக்கின்றீர்களா எங்கே உம்முடைய வேலையைத் தெரிவியுங்கள்.

மாமா வசனம்.

சரி மஞ்சளெல்லாம் அரைத்துட்டு இனி எனக்கு என்ன செய்யனும் தெரியனுமா எனக்கு இந்த சோப்புவகை யெல்லாம் பிடிக்காது அதுக்காக கொஞ்சம் நலுங்கு மொகம் சேர்த்து கொண்டுவந்து என் எதிரேயே நின்றுட்டு இருக்க னும் எப்பபார்த்தாலும்.

தாசி வசனம்.

மாமா இவர் என்ன தெரியுமா எல்லாருக்கும் கடைசி வந்தவர் போல் தெரிகிறது ஆகையால் இவருக்குத் தான் தகுந்த வேலை கொடுக்கவேணும்.

அடியவனுன பொடிப்பயலே
சூதுஆடி யேதோற் றதினுல்எனக்கு
வெடிய வெடிய விளக்கைப் பிடித்து
விசிரி போடுவது உன் வேலே

தாசி வசனம்.

மாமா இவன் பொடிப்பயல் ஆனதால் இவனே விளக்கு பிடிப்பதற்கும் எனக்கு விசிரி போடுவதற்குமாகவே வைத்து இருக்கிறேன் உம்முடைய ஜோஸி என்ன இருக்கின்றதோ

மாமா வசனம.

ஜோஸி என்ன இந்த பையனுக்கு பார்த்தியா வயது பத்து பக்கத்துலே வாலே இதுக்குள்ளே தாசி வீட்டுக்கு வந்துட்டான் விளக்குதான் சதா பிடிச்சுட்டு இருக்கின்றதுனு ராத்திரி உன் வீட்டிலே இருக்கட்டும் பகலிலே என் வீட்டிலே வந்து விளக்கைப் பிடிச்சுட்டு இருக்கட்டும்.

தாசி வசன்ம.

மாமா இவர்களேயெல்லாம் சரியானபடிக்கு வேலே ஏவ வேண்டும் தெரியவருமா

---

23 (ஹட்சன்ஸ் புதிய பிளேட்)

மிஸ். S. S. தனுசாம்பாள்

வசனம்:—அய்யமாரே என்கிட்டே தயிருமோரெல்லாம் வாங்கி குடிச்சுபிட்டு சாடையாயிருக்கிறீர்களா கொடுத்ததை கேட்கப்போனுல் அடுத்தது பகையா சரி சரி

(பாட்டு).

அய்யாமாரே வாங்கள் ஓட்டாரம்
செய்யாதீர் நீங்கள் இந்த
தையல் கடைஞ்ச தயிருமோர் வெண்ணே
சட்டி சட்டியாக சாப்பிட்டு பின்னே
சாக்கு போக்கு சொல்லலாகுமோ ஆகுமா
தயிர் தந்தக்கடன் விட்டுப் போகுமா போகுமா

வ-ம்:—ஏ அய்யா உங்களைத்தானே முந்தானியிலே முடிச்சுபோட்டு வச்சிருக்கிறதை அவுக்கக்கூடாதா நல்ல வேலை செஞ்சுங்க.

(பாட்டு.)

சீக்கிர மெடுங்கள் பழய
பாக்கியை கொடுங்கள் இங்கே
தேடிவந்தே வெகு நாழிகை யாச்சுது
கூடைத் தயிரெல்லாம் காலியாய்ப்போச்சுது
கொடுப்பதென்றால் மனம் வல்லையா—வல்லையா
இந்த—இடைச்சி யென்மேல் தயவில்லையா—இல்லையா

வம்:—ஏனய்யா தயிறு மோரெல்லாம் வாங்கி சாப்பிடும் போது ஆசையாயிருந்ததா என்புருஷன் யாருன்னு உங்களுக்கு தெரியுமா.

(பாட்டு.)

எருமை மாட்டிடையன் என்புருஷன்
இதங்கெட்ட மடையன் அவன்

எங்கே பணமென்றெடுப்பான் குண்டாந்தடி
மங்களநாதனை சாட்சி சொல்லும்படி
வட்டிப்போட்டு வாங்கி விடுவேன் விடுவேன் கோர்ட்டு
சட்டப்படி வசூல்புரிவேன் புரிவேன் அதி சீக்கிரம்

---

24 ஹட்ஸன்ஸ் புதிய பிளேட்

மிஸ். S. S. தனுசாம்பாள்

(பல்லவி).

தயிருமோரு பாலுவாங்குங்க ஓ அய்யாமாரே
வெயிலுக்கேற்ற மோருபாருங்க—பசுந்—தயிரு

(அனுபல்லவி.)

சுயமான பசுமாட்டு தயிருதனை வாங்கிபோட்டு
சாப்பிட்டு பார்த்துப் பின்னாலே
என்கையில் காசை தந்திடுங்க சாமி தன்னாலே
தயிரோ—தயிரோ—தயிரோ—நான்
சாமத்திலே கடைஞ்செடுத்த தங்கமான தயிரு
சின்னச் சட்டித் தயிரு எட்டுகாசு தாரேன்
கொஞ்சங் கொசுறு பசும்-தயிறு

வம்:—வ! ஆத்தே. என்னத்தை சொல்லப்போரேன்
இடையன் இடைச்சிகதான் தயிறு மோறு விக்கிறுகன்னு
இப்போ யாரோ புதுசு புதுசால்லாம் வந்து எங்க பிழைப்

யை கெடுக்கிருக இருக்கட்டும் எங்க பரம்பரையை சொல்லி வாரேன் கொஞ்சம் கேட்கிறீர்களா.

(பாட்டு.)

மாட்டுகோனர் மகள் நான்
ஆட்டுக்கோன் மருமகள் நான்
வண்ணமணி சிற்றிடைச்சி நான். எனதாசை நேச
மயிலக்கோனர் பெண்டாட்டி நான்—எங்கள்
வீட்டை விட்டுவரும் போதெந்த—விடியாமுஞ்சி
மின்னுக்கு வந்ததோ
ஆட்டுப்பாலு தயிரு மோரெல்லாம்
அப்படியே அசையாமலிருக்குது
அடுத்த வீட்டிலும் பக்கத்து வீட்டிலும்
கொடுத்த கடனைக் கேட்கப்போனல்
எட்டுக்குட்டியும் பெட்டை நாயும்
கட்டுப்படாமல் கடிக்க வருது—அய்யோ இனி
வந்தது வரட்டும் அந்திபொழுதுக்குள்
சந்தைக்கு போகணும் சாமான் வாங்கணும்
மந்தையிலிருந்து வந்த சிவலே
மாட்டைக் காட்டணும் சாட்டித்தட்டணும்
காட்டுக்குள்ளே டுர்யோ வென்று
ஆட்டை மேய்க்கும் அத்தானுக்கு
சோறு காச்சி சாறுவச்சி
சுறுக்காய் போடணும்—நயங்

கூறு மங்கள நாதன் செந்தமிழ்
கொஞ்சிப்பாடனும்—பசுந்—தயிரு.

---

25. (ஒடியன் புதிய பிளேட் & டாக்கீஸ்)
பி. எஸ். சிவபாக்கியம், பரமக்குடி.

தேச உடையைத் தரிப்போம் சிறந்திடும் நம் (தேச)

பேசும் விலைகுறைவு பிழைப்புக்கும் ஆதரவு
காசுக்குமில்லை யழிவு கருதியகம் (தேச)

மனையாளை விட்டுமே வேசையைத் தொழுகின்ற
மார்த்தரைப் போலில்லாது
கனமான ராட்டினக் கதராடை ஏந்தியே
காப்போம் வெருக்கொளாது
காரணக் காந்தி காட்டிய சாந்தி
சீறுடன் கரமேந்தி சிறந்திடும்நம் (தேச)

கைதொழுகிறேன் (நான்) இருகாலைப்பிடிக்கிறேன்
கற் குடியை வேராறுப்பீர்
பை அறவ நஞ்சிலும் கொடிதாகும போதையை
பகிஷ்கரித்திட உரைப்பீர்
குடித்தவர் வீடு குப்பையின் மேடு
குடும்பம் எதற்காகும் ஈடு சகோதரரே (தேச)

புதிய பிளேட் சங்கீதம் 100 பாகம் 1—0—0

தென்னங்கதம் பை பல சேர்ந்திடில் திறமான
தேர்வடம் ஆகுதில்லையோ
தன்னலங் கருதாது ஒற்றுமையாகிடில் நாம்
சாதிப்பதென்ன தொல்லையோ
தண்டமிழ்கீத சுந்தரனேதும் பண்டு நாகரீகத்தையே
பலப்படுத்தும் (தேச)

---

26. (ஓடியன் புதிய பிளேட் & டாக்கீஸ்)

P. S. சிவபாக்கியம்,

பாடுபட்ட சட்டாம்பிள்ளை பார்ப்பானை நம்பியதால்
கேடுகெட்ட கிருக்குப்பயல் (அடியே) அக்காடி
கேவலமாய்ப் பேசுறாண்டி.

சொன்னதெல்லாம் சொல்லிக்கொண்டு தூக்கு தூக்கும்
கேனப்பயல் என்னென்னமோ பேசுகிறான் (அடியே) அக்காடி
இதுவும் கேழ்க்கக் காலம்தானே

அரிசி விலை ஏறினாலும் அவிசாரி மலிந்திட்டாலும் (இந்தப்)
பொருக்கும் பிச்சைக்காரனுக்கு (அடியே) அக்காடி
பொருள்சேதம் ஏதுமுண்டோ.

பொங்குங் கிணர் வெட்டவே பூதமொன்று வந்ததைப்போல்
சங்கை இல்லாத் தூக்கு தூக்கி (அடியே) அக்காடி
சனியன்போலே வந்தானடி.

ஓட்டுப் பொருக்கித்தின்னும் உடல் வளர்த்த தூக்குத் தூக்கி
சுட்டிச் சுட்டி சொல்லுகிறான் (அடியே) அக்காடி
சோரத்தனக்காரனடி.

27. (ஓடியன் புதிய பிளேட்)

T. M. ஜெகதாம்பாள், மதுரை.

லலிதாங்கி:—மடத்தாச்சி பாட்டு.

ஆச்சி:—

சங்கரா சங்கரா சம்போ—சிவ
சாம்ப சதாசிவ சங்கரா சம்போ (சங்)
ஜெய் சங்கர் பிரக்யானம் பிரம்மம்—

சேவகன்:—

லொடக் சங்கர் பம்பம் மஹாதேவ்

ஆச்சி:—

யாரப்பா பாராவிலிங்கே அப்பா உன
தாசனுக் கடியாளின் வரவைச் சொல்லங்கே (சங்)

சேவகன்:—

சங்கர், நான் இந்த அரண்மனை சேவகன். உங்களைப் பார்த்தால் எல்லாவற்றையும் துறந்துவிட்ட சங்கர் போல் இருக்கின்றதே. தாங்கள் இவ்வாறு புறப்பட்டு வந்த காரணம் என்ன சங்கர்.

ஆச்சி:—

தரும காரியத்தை வேண்டி—அப்பா, நான்
தனிப்பா முத்தனுய் வந்தேனே—ஆண்டி
(வந்தேனே ஆண்டி) (சங்)

சேவகன்:—

அப்படியா சங்கர். உங்களைப் பார்த்தால் ஆணாகவும் இல்லை, பெண்ணாகவும் இல்லை. தாங்கள் சங்கரா அல்லது சங்கரியா, சங்கர்.

ஆச்சி:—

ஆணென்றும் பெண்ணென்றுமேது—அப்பா
சிவன் அடியார்கள் உலகை வெறுத்திட்டபோது.
(சங்)

சேவகன்:—

போகட்டும் சங்கர் தாங்கள் இருப்பது எந்த ஊர், தங்களுடைய நாமதேயம் என்ன சங்கர்.

ஆச்சி:—

மடத்தாச்சி யென்பதென் பேரு—அப்பா, நான்
வசிப்பது வடக்கே வெகு தூரம் பாரு. (சங்)

சேவகன்:—

அடடா! நீங்கள் உலகத்தை வெறுத்த சன்யாசிகளா தங்களுக்கு கலியாணம் ஆகிவிட்டதா சங்கர்.

ஆச்சி:—

மாயப்ரபஞ்சம் இவ்வாழ்க்கை—அப்பா
தன்னை மனதிற் பதியாது நிற்பதே சேர்க்கை. (மாய

சேவகன்:—

அடடா தங்களுக்கு கலியாணம் தான் கிடையாது குழந்தை குட்டிகள் ஏதாவது உண்டா சங்கர்.

ஆச்சி:—

காயம் பொய்யாகுமே ஆக்கை—அப்பா, அதைக்
கண்டு தெரிந்தவர்க்குண்டே செல்வாக்கே. (சங்)

---

28. (ஓடியன் புதிய பிளேட்)

டி. எம். ஜெகதாம்பாள், (மதுரை)

நாகரீகப் பாட்டு.

நாகரீக உலகத்துக்கே நாவிதரே முக்கியஸ்தர்
ஆகையினாலவர்களையே அம்பட்ட ஜாதியென்றே
அழைக்கவே பிறந்தார் தேசம் செழிக்கவே பிறந்தார்,
ஆறு குளம் கரையோரம் அடுத்துக் குடிசை போட்டு
சீருடனே தினந்தினமும் சிரசு முதல் சுத்தம் செய்யத்
தீட்டிய கத்தித் தொழில் பிறக்கவே கத்தி,
டேபிள் கண்ணாடி குஷின் செய்ர் ஸ்பிரிங் நாற்காலியும்
மார்பிள் ஸ்டோன் மேஜையோடு மதிப்பாக வுல் ஷூட்டு
மாப்பிள்ளை போலே சலூன் ஷாப்புக்குள் மேலே [மாட்டி
எலக்ட்ரிக் பங்காவைப் போட்டு யெல்லோரையும் கூப்பிட்டு
பல்புகளை மாட்டிவிட்டு பட்டப்பகல் போல் பகட்ட
பவுடரைப் பூசி முகத்தில் பாலீஷை காட்டும்
விதவிதமாய் கிருப்பு சீபும் விட்டல் கிருப்புகளும்
அதிசயமாய் பலருமெச்ச அமெரிக்கன் கிருப்பு வெட்டும்
அழகாகச் செய்வார் பெவற்கும் அடங்கியே நடப்பார்.
இப்படியே நாகரீகம் இவர்களாலே பரவி வரச்

சப்ரேட்டாய் வீடுதோரும் தானே கத்தி கல்லும் வைத்து
தனிப்பட்டவேலே செய்யத் தலைப்பட்டதாலே—இப்போது
பெண்களெல்லாம் க்ஷவரம் செய்யும் பெருத்த கலிகாலமாச்சு
கண்கவரும் முகத்தைகண்டு காசை வீசி யெரிவதாலே
கௌரவம் போச்சு இவர்கள் கதையு மீதாச்சு(நாகரீக)

---

29. (ஓடியன் புதிய பிளேட்)

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ் "ஜிப்ஸி பார்டி"

காளிக்கு பூஜையிடுதல்.

காளிமகமாயியே தாயே கம்பளத்து வீராயியே
ஏழை யெங்களை நீயே தாயே எப்போதும் காப்பாயம்மா.
மாரியாத்தா பேச்சியாத்தா எங்க வம்சமெல்லாங் காத்தவளே
கோரும் வரந்தரவே உன்னைக் கூத்தாடிக் கும்பிட்டோமே.
வடபத்ர காளியடி தாயே வரங்கொடுக்குஞ் செல்வியடி
கொடுங்கலூரு மாரித்தாயே—உன்னைக் கொண்டாடிக்
[கும்பிட்டோமே.

(பறையடித்து கோம்பு ஊதுதல்)

சாமுண்டி நல்ல மாடா செஞ்சடையா கருப்பா வாடா
மாமுண்டி முனியாண்டியே அந்த பிலேயேறு மிருளாண்டியே.
காத்தவராயா கருப்பா எங்க கள்ளச்சக்தி வீரப்பாவே
தாத்தா நொண்டிவீரப்பா அப்பா சன்யாசி கண்பாரப்பா.
எல்லைப் பிடாரியானே—ஐயா எட்டாதசங்கிலியே
செல்ல முத்துக்கருப்பா—சோணைச் சித்தா காட்டேரியப்பா.

(பறையடித்து கொம்பு ஊதுதல்)

ஆட்டுக்கிடா ரெண்டு அடக்கமாகக் கொண்டு
வீட்டக்கது ரெண்டு வெடைக் கோழியுமுண்டு
வெட்டிப் பலியிட்டு முட்டை பொறிச்சிட்டு
கச்சக் கருவாடு கள்ளுக் குடமெட்டு வச்சுப்படைச்சிடுவோம்
சாராயப் புட்டி வாங்கி வச்சுக் கும்பிடுவோம்.

(சாமி வருதல்).

காளி:—அடே நான் யாரு தெரியுமா?

பூசாரி:—ஆயா ஆருன்னு தெரியல்லியே ஆத்தா

காளி:—நான் தாண்டா உங்கவீட்டு குலதெய்வம்.

பூசாரி:—ஆத்தா இந்த வருஷம் நல்ல மழைபேஞ்சு, நல்ல பயிரெல்லாம் வெளஞ்சு நாங்க நல்லாயிருந்தா தாயே உனக்கு பூசை மேலே பூசை போட்ரோம் எங்க ஆத்தா.

காளி:—அடே! நான் பெத்தமக்களா, நீங்கள் கவலைப்படாதீங்கடா, இந்தமாதம் மழை பெய்யுமடா உங்க ஏரிக் கரை உடையுமடா கதிர் அருங்கடா கதிர் அருங்கடா நான் மலையேறி போரேண்டா, அடே (சாமி மலையேறுதல்).

பூசாரி:—

இத்தனை பூசைகளும் நீங்க ஏத்துக் கொண்டெங்களுக்கு
சுத்தகுலத் தெய்வங்களா இப்போ துணையாயிருக்க
[வேணும்,

30. (ஓடியன் புதிய பிளேட்)

காயனபடு கீர்த்தனபடு **ஸி. ஸரஸ்வதி பாய்,**

ராகம்—ஸாரடி. தாளம்—ரூபகம்.

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
வைத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணை நல்லூரருட்
[டுரையுள்
அத்தா உனக்காளாயினி யல்லே னெனலாமே.

மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
பொன்னே மணிதானே வயிரம்மேபொருந்துந்தி
மின்னார் பெண்ணை தென்பால் வெண்ணை நல்லூரருட்
[டுரையுள்
அன்னே உனக்காளாயினி யல்லே னெனலாமே.

ஊனாயுயிரானா யுடலானா யுலகானாய்
வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்
தேனார் பெண்ணை தென்பால் வெண்ணை நல்லூரருட்டுரையுள்
ஆனா யுனக்காளாயினி யல்லே னெனலாமே.

---

31. (பிளேட் பின் பக்கம்)

ராகம்—ஸிம்மேந்திரமத்யமம். தாளம்—ஆதி.

இகபரமெனு மிருவுலகிலும் பரசுக
முதவும் ஸாகுணசீலா, (இகபர)

குஹா சரவணபவா சிவபாலா,
சிவகுருவெனும் புகழ்பெறும் வடிவேலா,
அசுருரு மவுணர்கள் குலகாலா, அமரருலகு
மகில உயிரும் வளர அருள் க்ருபாலவாலா. (இகபர)

தயைநிறைந்த திருவிழிகள் பனிரெண்டும்
தவழ்ந்த முருவல்வதன மாரும் புயகராஜ
னெனத்திகழ்ந்த பன்னிரு புயங்களும்
அகல மணிபணியும் மயலொடுமிருபா மிருமாதர்
மருவநன் மயில்மிசை வருவாயே
பயவிஜபதவினை தருவாயே
பவ கடர் கரை கடக்க அருள்
மரக்கலம் கொடுக்கும். (இகபர)

---

32. (ஓடியன் புதிய பிளேட்)

கோவலன் பிளேட்டில் பாடிய

N. B. அப்துல் காதர், மதுரை.

நாயகமே எங்கள் ஞானக்ருபாகரமே (நாய)

நாயகமே எங்கள் நாயகமே நபி நாயகமே
எங்கள் ஞானக்ருபாகரமே. (நாய

தாயகமான ஹதீஜா மருவும் மோகனரே
ஹாவியளிக்காக நகர் சாருமயில் வாகனரே

சரவமிகும் இஸ்லாமியம் தான் தழைக்கலானவரே
தாரணியெல்லாம் புகழத் தாங்குமதப் போதகரே
சாதகரே ஆதிதூதராய் நீயே எங்கள் (நாய)

கஸ்தூரி வாசமது காதவழி தான் மணக்கும்
கண்ணுன மதிஞவெனச் சொன்னுலும் வாய் மணக்கும்
விஸ்தாரரே உம்மையே வேண்டினேர்க்கெல்லாம் [செழிக்கும்
நிஷ்டூரம் யாவும் உம்மை நினைந்திடிலோ பறக்கும்
மேகம் தன்னை குடையாகப் பிடித்த நபி (நாய)

மக்கநகர் மீதிலொரு மகுலியத்தாய் வந்தவரே
மாசிலா மதியை அமாவாசையி லழைத்தவரே
துக்கமற்ற வாழ்வையிஸ்லாம் சேர்தார்க்கே தந்தவரே
ஹக்கனருள் வீசுமெளிர் ஆதித்தூராய் நின்றவரே
தூயகரே ஆதிதூதராய் எங்கள் நபி (நாய)

மோனதிரு வாயமர்ந்த முதியோர் சம்மதிபெருக
முத்து நவரெத்தின முகம்மது வென்றே தொழுக
ஞானகுருவே அரபு நாட்டிலுள்ளோர் கேட்டுருக
வானப்பதியான் மகிழும் வள்ளலிற சூல்வருக
வண்டலரும் தேன் பொழி வாய்க்க
சுந்தரன் துதி நாயகமே. (நாய)

33. (பிளேட் பின் பக்கம்)

தொலியே வரவேண்டும் ஹமீதொலியே வரவேண்டும் ·
ஷாவுல் ஹமீதொலியே வரவேண்டும்
ஓதும் உண்மை வேண்டும் ஹமீதொலியே வரவேண்டும்.
கலியுக நாகூர்மீரா கப்பல்துறைக் காதாரா
காரணஞான சமாதியிலே உயர்
பூரணமோன தயாபரமே. (ஹமீதொலி)

கந்தமிகுஞ் சந்தனமும், புதுமலர்
சிந்திடவும் சந்ததமும் கமழ்.
கனவிலு முமதிருபத மதுவழிபடு
நினைவொடு வருபவர் துணையென அருள். (ஹமீ)

கனிந்து வந்துன் சேவையை நாடி
தினந்துதிப் பண்பாடினே னருள் (ஹமீதொலி

தஞ்சை துலங்கும் போஜன்
சரபோஜி மகா ராஜன்
சம்பத்தாகிய துதிபெறு மழகிய
சிந்தைக் கோவிலிலங்கிட வரும். (ஹமீதொலி)

---

34 (கொலம்பியா புதிய பிளேட்)

மிஸ். எம். கே. சீதாலக்ஷ்மி

அபார விருந்து செய்தேன் பாரும்
பாத்தியமுள்ள சொந்த நாத்தி வந்தாளென (அபார)
பக்ஷணங்களில் லக்ஷம் தினுசுகள்
பகாவடாசியன் பாங்கான தேன்குழல்

பருப்பு மசால்வடை பக்கா உளுந்துவடை
உஜ்ஜித மெதுவடை, தயிர்வடை
பால்வடை தாளிச்சவடை
எள்ளுவடை முழு முளகுவடை
நல்லக் காராவடைகள், பஜ்ஜீ தினுசுகள்
கத்தரிக்கா பஜ்ஜி கருணைக்கிழங்கு பஜ்ஜி
வாழைக்கா பஜ்ஜி தேங்காயில் பஜ்ஜீ
மாங்காயில் பஜ்ஜி கிளாக்காயில் பஜ்ஜி
பலாக்காயில் பஜ்ஜி காராப்பூந்தி கலந்த ஓமப்பொடி
குஞ்சாலாடு, கோதுமை லாடு
கற்கண்டுலாடு, கசகசாலாடு, இந்திரலாடு
சந்திரலாடு, சோமாஸ் போளி சுகந்த ஜாங்கரி
கேசரி பாத், ராவாகிச்சடி சொஜ்ஜியப்பம்
நல்ல ருசியப்பமும், பாதுமை அல்வா பசுநெய் அல்வா
மோகன அல்வா, முந்திரி அல்வா,
சாலாமிசரி, பதர்பேணி நெய் மைசூர்ப்பாகு
ஜீனி அதிரஸம் திக்குப் பாயாசம்
சேமியா பாயாசம் புளியோதரை
நல் எள்ளோதரை எலுமிச்சோதரை
நல்ல தித்தியன்னமுடன் சர்க்கரைப் பொங்கல்
நெய்ப்பொங்கல் நெய்ப்பருப்புப் பொங்கல்
பச்சடி பொங்கல் கிச்சடி பொங்கல்
ஜீரகசாதம், மோதகம், கொழுக்கட்டை
எள்ளுருண்டை நல்ல இட்லி தோசை
ரொட்டி பிஸ்கத் முறுக்கு சீடை அவிச்ச ஆடை
நற்சுண்டல் நன்றாய் பொரிச்ச சுண்டல்

செவ்வாழைப்பழம் பெரும் வாழைப்பழம்
மொந்தன் பேயன், கொம்பன் பூவன்
ஒட்டு மாம்பழம், கட்டு மாம்பலம்
ஆபீஸ் மாம்பலம் அமீர்பசுந்து தில்பசுந்து
மோர்பசுந்து ஆப்பில் கமலா ஆரஞ்சி எட்டா
சீமை அத்திப்பழம் சீமை நாகப்பழம் கொடி
முந்திரிப்பழம் பேரிக்காய் நல்ல பீர்க்கங்காய்
நல்ல கத்திரிக்காய் நல்ல பீர்க்கங்காய்
நல்ல கத்திரிக்காய் நல்ல பிலாச்சுளை
நல்ல நாரத்தஞ்சொளை பெப்பர்மென்ட் ஐஸ்கட்டி
சோடாவாடர் லேம்ஜூஸ் சுட சுட வென்னீர்
சுகந்த பன்னீர் பலவிதமான கனிவர்க்கமுடன் (அபா)

---

35 (ஓடியன் புதிய பிளேட்)

மதுரை V. M. ராமசாமி பிள்ளை &
K. S. வெங்கட்டருமய்யர்

(சாவித்திரி—சத்தியவான் எமதர்மராஜன் தர்பார்).

எமதூதர்கள்:—

ஹா. ஹா. ஹா.

எமன்:—

விண்டலமும் மண்டலமு மென்டிசை யடங்களும்
விளங்கு நீதி மார்க்கமடுப்பேன்
வேதவிதிப்படி தானே நடப்போரை
மேலுகம் விடுப்பேன்—நெறி

விட்ட துஷ்டர்களைக் கட்டிவந்து நர
    கத்தினிலே விடுப்பேன்—உயிர்
வேதனை மிகவும் கொடுப்பேன்—துண்டாய்
    வெட்டியுடல் கொடுப்பேன்—இன்னும்
மேலும் மேலும் பாவிகளைக் காணக் கோபமாகி
    வெவ்வேறுக்கணைகள் செய்யத் தொடுப்பேன்.

(விண்)

எமதூதர்கள்:—

தர்மராஜப் பிரபோ நமஸ்கரிக்கின்றோம்.

எமன்:—

நாடு மிரு நாலுதிசை யாளுகிற பாலர்களில்
நானொருவனாக வெனையே
நச்சுக் சடைக் கடவுள் தெற்குத் திசைக்கரசு
நத்திக் கொடுத்த படியே
நீடு திரி சூலமொடு பாசமுயர் வானகெதை
நேருபடை யாவுமெதிரே
நீட்டிச் சுழற்றி உடல் வீட்டிப் பதைக்க உயிர்
நீக்கி பிணித்திடுவேனே.

ஏ தூதர்காள், அனுதினமும் நான்முகனால் சிருஷ்டிக் கப்பட்ட ஒன்றே கால்லக்ஷம் ஜீவராசிகளின் உயிரைக் கவர்ந்து, சம்ஹாரக் கர்த்தனாகிய சிவபெருமான் எனக் கிட்ட கட்டளைப்படி நல்வினை தீவினைக்கொப்ப சுவர்க்க நரக பதவிகளைத் தந்து எனது ராஜ்யத்தை நீதியோடு பரிபாலித்து வருகிறேன். சிறிதேனும் நீதி தவறுவே னாயின் ரோமத்தாற் கட்டித்தொங்கும் பருவதம்

அறுந்து என் சிரசில் வீழ்ந்து, என் ஆசனத்தின் கீழ் தகத்தாகாயமாய் விளங்கும் அக்கினியாற்றில் அமிழ்ந்தி விடுவேனென்பது நிச்சயம்.

வக்ரதந்தா உக்ரசண்டா
விக்ரதண்டா எங்கே சித்ரகுப்தன் ?

எமதூதர்கள் :—

மஹாராஜ், இதோ வந்துவிட்டார்.

சித்ரகுப்தன் :—

தேவா, நமஸ்காரம்.

எமன் :—

ஏ சித்ரகுப்தா, இன்று நம் விசாரணைக்கு வரவேண்டிய ஜீவாத்மாக்களைக் கொண்டுவா.

சித்ரகுப்தன் :—

ப்ரபோ, எல்லோரையும் கொண்டு வந்திருக்கிறேன். இவன் அன்னிய ஸ்திரீகளைப் பலவந்தப் புணர்ச்சி செய்த மஹாபாதகன்.

எமன் :—

இந்த, நீசப்பயலை யோசிக்காமல்
பாசக்குழியில் தள்ளிவிடு.

சித்ரகுப்தன் :—

இவள், கொண்ட புருஷனிருக்கச் சோரனைச் சுகித்த துன்மார்க்கி.

எமன் :—

கூசாதிவனை யிரும்புக் கம்பிக்
கொழுவைக் காய்ச்சி யணையவிடு.

சித்ரகுப்தன் :—

இவன் பெண்ணுக்குப் பணம் வாங்கிக் கல்யாணஞ் செய்த காதகன்.

எமன் :—

கண்டிப்பாயிவ் வண்டப் பயலைக்
கட்டியுருட்டி வெட்டிவிடு

சித்ரகுப்தன் :—

இவன் லஞ்சம் வாங்கிக்கொண்டு பொய்ச் சாட்சி சொன்ன புறட்டன்.

எமன் :—

தயவேயின்றி முள்ளுப்பீப்பாய்
தனிலேயிவனை யுருட்டிவிடு

சித்ரகுப்தன் :—

இவன், குருத்ரோகஞ் செய்த கொடிய சண்டாளன்

எமன், —

இந்த வீணப்பயலை மீளாநரக
வேதனையுறவே செய்துவிடு

சித்ரகுப்தன் :—

இவன், கூட்டிக்கொடுத்துக் குடியைக்கெடுத்த கும்ப கோணம் டாபர் மாமா,

எமன்:—

இந்த டாபர் பயலைக் அக்கினிக் குண்ட
நரகத்தினிலே தள்ளிவிடு.

சித்ரகுப்தன்:—

இவன், ஓட்டுக்குப் பணம் வாங்கிக்கொண்டு ஓரவஞ்சகஞ் செய்த ஒட்டாண்டி.

எமன்:—

காதகனிவனைப் பாதகமின்றிக் கண்டாரக்
கோடாரியால் வெட்டிவிடு

சித்ரகுப்தன்:—

மஹாராஜா, இவனும் இவளும், நாடகத்தில் எடுத்த துக்கெல்லாம், ஸ்வரம்பாடி நடிப்பைக் கெடுத்த நாசக்காரர்கள்,

எமன்:—

அடே சித்ரகுப்தா, இச்சண்டாளர்களைத்தான் வெகு நாளாக எதிர்பார்த்தேன்: முன்னமே இவர்களைக் கொண்டுவருவதற்கென்ன, இவர்களை என் முன் நிறுத்தாதே கண் கூசுகிறது.

நாடக உலகத்தைக் கெடுத்த ஞான சூரியர்களை
என்றும் மீளா நரகத்தில் அமித்திவிடு.

சித்ரகுப்தன்:—

பிரபோ, இவர் ஏழைகளுக்குதவி செய்த மஹா புண்ய புருஷர்.

எமன் :—

அவரை ஏனிங்கே அழைத்து வந்தாய், சுவர்க்கத்துக் கனுப்பு சீக்கிரம்.

இனி இன்று வரவேண்டியது யார்.

சித்ரகுப்தன் :—

தேவா, பூலோகத்தில் துயுமத்சேனன் புத்திரன் சத்தியவான் இன்னும் ஒரு முகூர்த்தத்தில் இங்கு வந்து சேரவேண்டும்.

எமன் :—

அப்படியா, தூதர்காள்..................சீக்கிரம் சத்தியவா னுயிரைக் கொண்டு வாருங்கள்.

எமதூதர்கள்:—

இதோ கொண்டு வருகிறோம்

முக்கிய கவனிப்பு.

எங்களிடம் தற்காலம் வரக்கூடிய டாக்கி சினிமா புஸ்தகங்களும் புதிய பாடல்கள் அடங்கிய கிருமபோன் பிளேட் புஸ்தகங்களும் விலை சகாயமாகவும், வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

விலாசம்:—

V. கருப்பண பிள்ளை,

புக்ஸேல்லர், புதுமண்டபம்,

மதுரை.

(ஓடியன் புதிய பிளேட்)

V. M. இராமசாமி பிள்ளை.

36. (பிளேட் பின் பக்கம்)

பாகம் 2.

சித்ரகுப்தன்:—

பிரபோ, சந்நிதானத்தை நாடி நாரதர் வந்திருக்கிறார்.

எமன்:—

நாரதரா—சுவாமி நஸ்காரம்.

நாரதர்:—

மங்களமுண்டாகுக.

ஏ, தருமராஜா, ஏன் மாறுபட்ட முகத்தோடிருக்கிறாய்.

எமன்:—

முனிபுங்கவா, பூலோகத்துள்ள துயுமத்சேனன் புத்திரன் சத்யவானுயிரைக் கொண்டுவரச் சென்ற தூதர்கள் இன்னும் வாரததே காரணமாகும்.

நாரதர்:—

சத்யவானுயிரை அவசியம் கொண்டுவரத்தான் வேண்டுமோ.

எமன்:—

ஏன்! அதிலென்ன சந்தேகம்.

நாரதர்:—

ஏ தர்மா, சாவித்திரி மஹா பதிவிரதை. பூலோகத்தில் பதிவிரதா தர்மமோங்க சத்யவானுயிருடனிருந்தால் உலகம் சுபிக்ஷமடையும்; அதனால்தான் சொன்னேன்.

முனீஸ்வரா ஞானிகளைத் தவிர மற்றவர் யாராயிருந்தாலும் விதி முடிந்தால் விடேன்.

ப்ரம்ம தீபா பேருறும் ப்ரதாபா. (பிர்)

கர்மா வினை கடந்தோனை நானும்
கனவிலு மெண்ணேன்
அவன்பாலும் நண்ணேன். (பிர்)

நாரதர்:—

தர்மாதிபா—சண்டனே ப்ரதாபா. (தர்)

நிர்மோகமா நெறி பக்தன்மீது
நிஷ்டூரமாகாது விட்டிடுமிப்போது. (தர்)

எமன்:—

சத்யவானுயிரைக் கவராது விட்டுவிடவா சுவாமி. கொஞ்ச நேரத்துக்குள் எனது தூதர்கள் உயிரைக் கொண்டு வந்துவிடுவார்கள், தாங்களும் பார்க்கலாம்.

நாரதர்:—

தர்மா, தூதர்கள்கொண்டு வருவார்களா? யார் உயிரை? சத்யவானுயிரையா? உன்னாலும் முடியாது, இது நிச்சயம்!

எமன்:—

என்ன? என்ன?

நீர் தாமா சும்மா நில்லும் நில்லும் என்னை வெல்ல (நீர்)

நீடிய செங்கோலாட்சி முறைப்படி
கூடிய நாயேன் யெனைத் தொலைத்திட. (நீர்)

நாரதரே, சத்யவானுயிரை கொண்டு வரமுடியாதென்று சபதமா போடுகிறீர் ?

நாரதர்:—

ஆம், நான் அணிந்திருப்பது யக்ஞோபவீதமானால் சத்யவானுயிரைக் காப்பாற்றாமல் விடேன். நான் சென்று வருகிறேன்.

எமன்:—

(சிரிப்புடன் நாரதரைப் பார்த்து] போய் வாரும்.

எமதூதர்கள்:—

மஹாராஜா சத்யவானுயிரைக் கொண்டு வரமுடியவில்லை.

சாவித்ரியின் கற்புத்தீயானது எங்களை நெருங்கவிடவில்லை.

எமன்:—

என்ன ? என்ன ? சத்யவானிடம் நெருங்க முடியவில்லையா ? மடையர்காள் ! கொண்டு வா வாகனத்தை நானே செல்கிறேன்.

எமதூதர்கள்:—

உத்தரவு.

எமன்:—

நாரதர் சபதமும் தூதர்கள் சொல்வதும் ஆச்சர்யமாயிருக்கிறதே.

எமதூதர்கள்:—

மஹாராஜா வாகனம் மண்டிபோட்டு விட்டது.

எமன்:—

என்ன ?

“ வாகனம் மண்டிபோட்டு வருவதர்கஞ்சினுலும்
தேகமே சிலிர்த்திட்டாலும் சித்தம் சஞ்சலித்திட்டாலும்
சாக நாள்து வந்துற்ற சத்யவானுயிரையின்று
வேகமாய்ச் சென்று பற்றி விரைவினில் வருகுவேனே”

நாரதர்:—

எமதர்மன் சத்யவானுயிரைக் கவருது விடான். ஆகையால் நான் இப்பொழுதே ப்ரம்மலோகம் சென்று, கருணைதேவி மூலம் எமனுக்கு சாவித்ரி மீது சாந்தமுண்டாகும்படி செய்து, சத்யவானுயிர் பெரும்படி ஏற்பாடு செய்கிறேன்.

---

37 (கொலம்பியா புதிய பிளேட்)

மிஸ்டர் கருவூர் கன்னையா பாடிய

வண்ணான்வண்ணாத்தி தர்க்கப்பாட்டு

(வண்ணான் வந்தானே என்ற மெட்டு.)

1 காவேரீ கரைமேலே வண்ணானும் வண்ணாத்தீ
கழுதை மேய்க்கையிலே
அங்கு காத்துமழை இடிகலந்துவந்ததுங்
காவேரீ ஆறுகோ வெள்ளம்போனதுங்
கரையின்மேல் மேய்ந்த என்கழுதையை காணேண்டி
என்கழுதை எங்கேயோடி வண்ணாத்தீ
வண்ணாத்தீ வண்ணாத்தீ வண்ணாத்தீ

2 நான்நாட்டுபுரத்திலே வீட்டுதுணிகளை
மூட்டைமூட்டை கட்டிபோட்டு
கழுதைமேலே நான் வாட்டமுடனே
ஓட்டிவருகும் என் கழுதை எங்கேயோடி
வண்ணாத்தீ வண்ணாத்தீ வண்ணாத்தீ
என் கழுதை எங்கேயோடி

3 நான் வாலிப திசையிலே
கழுதையைவாங்கி வளர்த்தேனடி
அதுகாலபஞ்சத்திலே உழைத்தகழுதை
கபடுகளில்லாமல் உழைத்தகழுதை
காவேரிகரைமேலே காணாமல்போச்சுது
என்கழுதை எங்கேயோடி
வண்ணாத்தீ வண்ணாத்தீ வண்ணாத்தீ
என்கழுதை எங்கேயோடி

4 உன்னைமாலை யிடாமுன்னே
கழுதையைமகிழ்ந்து வாங்கினேண்டி
உன்னை மாலையிட்டதும் நீமக்களைபெற்றதும்
காலபஞ்சத்தாலே காவேரிகரைமேல்
கட்டிமேயவிட்ட கழுதையைகாணேண்டி
என்கழுதை எங்கேயோடி
வண்ணாத்தீ வண்ணாத்தீ வண்ணாத்தீ

5 கழுதைக்கிருக்கும்புத்தி வண்ணாத்தீ
உன்கருத்திலிருக்காது அதை
பின்னங்காலைகட்டி மேயவிட்டாலும்
என்னையும்விட்டது எங்கேயும்போகாது

உன்னைகட்டிநானும் கொண்டசுகதுக்கம்
உள்ளதுநாள்மட்டும் கண்ணீர்பெருகுது
என்கழுதை எங்கேயோடி
வண்ணாத்தீ வண்ணாத்தீ வண்ணாத்தி
என்கழுதை எங்கேயோடி

6 கைகண்ட சகுணமாம்
என்கழுதை கத்தினாலே குணமாம்
அதைநாடோர்கள்மதிப்பார் நல்லகழுதைஎன்று
ஜாதிவண்ணாரிட பிழைப்புகள்போச்சுது
சலவைகம்பெனிக ளதிகமாய் ஆச்சுது
கருமம்பெருத்தது கலியுகமாச்சுது
காவேரிகரைமேலே என் கழுதையும்போச்சுது
என்கழுதை எங்கோயோடி
வண்ணாத்தீ வண்ணாத்தீ வண்ணாத்தீ
என்கழுதை எங்கேயோடி

7 என்னேரம்பார்த்தாலும் வண்ணாத்தீ
எட்டிபோட்டி போடுறாய்என்னை
தள்ளாதகிழவனென மதித்து நீ
தாறுமாராக நீ பேசாதேபெண்ணே
கருமம்பெருத்தது கலியுகமாச்சுது
காவேரிகரைமேலே என்கழுதையும்போச்சுது
என்கழுதை எங்கேயோடி
வண்ணாத்தீ வண்ணாத்தீ வண்ணாத்தீ
என்கழுதை எங்கேயோடி

8 கருவூருகன்னையன் செந்தமிழை கனமாய்பாடுரேன்
மனதினில்குணமாய் நாடுரேன்
என்கழுதையும்போச்சுது என்கைபலமும்போச்சுது
என்வாலிபபெண்டாட்டி வண்ணாத்தியாலே
தலைவிதிவசத்தால் தனிமரமானேன்
கலங்கி நிற்குரேண்டி
வண்ணாத்தி வண்ணாத்தி வண்ணாத்தி
என்கழுதை எங்கேயோடி

---

38 (ஹட்சன்ஸ் புதிய பிளேட்)

மிஸ். N. S. ரத்னும்பாள், V. M. பெரியசாமி

மாங்காய் தோப்பு பாட்டு.

(டோமா பாட்டு) மங்கையிலே என்ற மெட்டு. (தர்க்கம்)
மட்டா மருக்கொழுந்தே மாடுமேய்க்கும் சின்னதம்பி
நீமேய்க்கும் மாடுகளெல்லாம் மலையேறிபோனதடா டோமா
நான் தொழுதுகொண்டேன் ரத்னும்பாள் நானே
மலையேறி போனலென்ன மஞ்சள் பில்லு மேஞ்சாலென்ன
நீகுளிக்கும் மஞ்சளுக்கு நின்று தவம் செய்குரேண்டி டோமா
நான் தொழுதுகொண்டேன் பெரியசாமி நானே
நின்று தவம் செய்தே னென்று கண்ணைமூடி பேசாதடா
அண்ணாந்து பார்த்தாயானல் உன்னுக்கைபிடிங்கிடுவேன்
[டோமா
நான் தொழுது கொண்டேன் ரத்னும்பாள் நானே
உன்னுக்கை பிடுங்குவேனென்று உறுதிகூறும் பெண்
[மயிலே

இக்நேரம் வரையிலும் நீ எந்த இடம் சென்றிருந்தாய் [டோமா
நான் தொழுது கொண்டேன் பெரியசாமி நானே
எல்லோரும் போனபோலே நானும் போனேன் மாங்காத் [தோப்பு
மாங்காயை திருடியல்லோ மாட்டிகின்னான் பெரியசாமி [டோமா
நான் தொழுது கொண்டேன் ரத்தினம்பாள் நானே
மாங்காயை திருடவில்லை மடியிலே நான் வைக்கவில்லை
ஆங்காரம் பேசாதடி ஐசாலங்கடி மேட்டுக்காரி டோமா
நான் தொழுது கொண்டேன் பெரியசாமி நானே
பைசா அகல பொட்டுக்காரா கைசாக நீ பாட்டுக்காரா
கைசாக வேலைமேலே இஷ்டம் போலிருப்பியோடா டோமா
நான் தொழுது கொண்டேன் ரத்தினம்பாள் நானே.

---

39 (கொலம்பியா புதிய பிளேட்)

முசிரி. சுப்பிரமணிய அய்யர்.

ராகம், காம்போதி—ஆதி தாளம்.

பல்லவி.

திருவடி சரணமென்றிங்கு நான் நம்பிவந்தேன்
தேவாதி தேவா உன் (திரு)

அநுபல்லவி.

மறுபடியும் கருவடையும் குழியில்தள்ளி
வருத்தப்படுத்தவேண்டாம் பொன்னம்பலவா (திரு)

சரணம்.

எடுத்தஜனனம் கணக்கெழுதத்துலையாது
இரங்கிமகிழ்ந்து தேவரீர்வேணுமென்று
கொடுத்த மனிதஜென்மம் வீணாச்சுது ஒரு
குறையும் தீர்ந்தபாடுமில்லையே
அடுத்துவந்தனின்னே உன்னை
அடுத்துவந்தவன் தள்ளலாகாது ஹா ஹா
வென்றொருதரம் சொன்னாலும்போதும்
தடுத்தாட்கொள்ள இதுசமயம் கோபாலகிருஷணன்
ஸந்ததமும்பணுந்து அவர்மஹிமை (திரு)

40. (ஓடியன் புதிய பிளேட்)

கே. எஸ். சுந்தரி & ஆர். வி. கோவிந்தசாமி, சம்பாஷணை.

டாக்கீஸில்

T. P. ராஜலெக்ஷிமியும், பாடியது.

(வள்ளி திருமணம்).

வளையல்காரன்:—

வளையல் வாங்கலையோ—அம்மம்மா
வளையல் வாங்கலையோ—நல்ல
வாலீபப் பெண்ணுக்குத் தாலியே கட்ட
வரிசைக் கங்கணம் கையிலேபூட்ட (வளை)

பெண்:—

இங்கு வாருஞ் செட்டியாரே—வளையல்
வகையுரைப்பீரே

வஜ்ஜிரப்பச்சை கறுப்பு சிகப்பு
வங்கிவளை செங்கை கங்கணக்காப்பு
வகையிருக்கிறதா—மேகவர்ண
தினுசிருக்கிறதா.

வளையல்காரன்:—

வங்கிவளை கங்கணமிதோ, இதோ, கை
வாங்கிப்பாரு தங்கமிதுதான்—இதுதான்
வஜ்ஜிரமுத்துக்கள் பச்சையிழைத்த
மெச்சிய ரெத்தினக் கச்சிதமானது
கொஞ்சமில்லைதானே வஞ்சியே
குறத்தி நீதானே.

பெண்:—

இன்னுமென்ன வளையல்—செட்டியாரே
இப்போதுன் தோளில்லையா
பொன்னுங்கின் காப்புப் புதியதினுசு
புத்திக்குமெச்சிய சித்திரக்கொலுசு (இன்னு)

வளையல்காரன்:—

பச்சைவளையல்பொன் லக்ஷ்மிவிலைபெறும்
பருவப்பெண்களின் மனதைக்கவரும்
பத்தினியே சித்தமகிழ்வாய், மகிழ்வாய்—கையில்
பாங்கியே நீ போட்டமுகுபார்—புகழ்பார்.

பெண்:—

உள்ளவிலை சொல்லுமையா நீர்—நேர்—நீர் உம் இங்கு
ஒழிச்சுப் பொய்யேபேசுகிறீர்—ஆ! ஆ! ஆ!

கள்ளக்கபடனே கம்பளிச்செட்டி
காரியமில்லாது பேசுறீர் கிட்டி
வள்ளிவனந்தானே—வீண்வார்த்தை
வளர்க்குறீர் வீணே.

வளையல்காரன்:—

கள்ளமில்லையம்மா கன்னி[illegible]பாயே
கானகம்வந்த வி[illegible]
சன்னல்[illegible]ரஸமே—சிங்காரக்
[illegible]மரகசியமே.

பெண்:—

என்னையா செட்டியாரே யிந்தப்பேச்சு
ஏளன வார்த்தையில் கேலியுண்டாச்சு
சொன்னவாயை மூடிக்கொண்டுபோம்—வெளிப்
[போம்
சூதுச்செட்டியென நாங்களறிந்தோம்—அறிந்தோம்

வளையல்காரன்:—

செட்டிமகன் நானே—கஸ்தூரிப்
பொட்டிமகன் நானே
கட்டியணைத்திடக் குட்டியே யுன்னை
விட்டிடமாட்டேனே அட்டி சொல்லாதே
கழுகுமலைக் கந்தன்செட்டி நானடி நான்—மேகக்
கறுப்பன்செட்டி மருமகனுந்தான் தான் நான்தான்

41. (பிளேட் பின் பக்கம்)

பெண்:—

பாக்கு வெத்திலையாம்—மச்சான்
கேக்க வெக்கமடா—சுருளுப் (பாக்கு)

சோக்குக்கே நீயிருக்க
நாக்குச்சு தாணிருக்க
ராத்திரிக்குப் வந்திருக்க
டிருக்கப் (பாக்கு)

ஆண்:—

அடி செக்கச்சிவந்த நாக்கு
சிங்காரம் பூத்திருக்க
கைக்கார மச்சானுக்கு
காசு செலவாயிருக்க
வெக்கம்பக்கடி குட்டி அக்கம்பக்கமடி (அடி வெக்)

பெண்:—

அத்தானே உங்ககூட
அன்பாக நானிருந்து
வித்தார மாகப்பேசி
விடிய விடியக் கூத்துப் பாக்கப் (பாக்கு)

ஆண்:—

காட்டுக்குப் போகவேணும்
கானங்கம்பு தேடவேணும்
வீட்டுக்குத் திரும்பும்போது
வெத்திலைபாக்கு வாங்கவேணும்
வெக்கம்பக்கடி குட்டி அக்கம்பக்கமடி (அடி வெக்)

பெண்:—

மஞ்சமலேக் காட்டுக்குள்ளே
மச்சினிச்சி வீட்டுக்குள்ளே
அஞ்சுநாளாய் வந்துபோன
ஆசைக்கான அக்காளுக்குப் (பாக்கு)

ஆண்:—

பாடுபட்டுத் தேடிவச்ச
பணங்காசெல்லாந் தொலச்சு
கேடுகெட்ட மச்சினிச்சி
கேவலமாய் பேசலாச்சு
வெக்கம்பக்கமடி குட்டி அக்கம்பக்கமடி (அடி வெக்)

பெண்:—

வெக்கத்தை விட்டு விட்டு
வேலேக்குப் பயந்துகிட்டு
செக்குமாடு போலேசுத்தி
திரிஞ்சலேஞ்ச கொழுந்தனுக்குப் (பாக்கு)

ஆண்:—

அடி, கஞ்சி குடிக்குமுன்னே
களே யெடுக்கப் போகுமுன்னே
மிஞ்சிமிஞ்சிப் பேசாதடி
மினுக்குக்காரத் தளுக்குத்தங்கம்
வெக்கம்பக்கமடி குட்டி அக்கம்பக்கமடி (அடி வெக்)

(ஹட்ஸன்ஸ் புதிய பிளேட்)

மிஸ் K. R. கமலாபாய் (மதுரை)

42 (காமிக்)

திருப்பத்தூர் மாமா— உங்கள்
தரிசனம் காணலாமா— வாங்கோ (திரு)

என் விருப்பம் வீணாய்ப்போமா—நீங்கள்
வெறுத்திட ஆமா— வாங்கோ (திரு)

நீர் உறிதாய்ப்பேசி யுன்னுடலுமுயிரும்
எண்ணுதாண்டி யென்கண்ணே— என்று
உண்மையாக வார்த்தையாடி தேடிநீரே முன்னே
இப்போ சிறிச்சிச் சிறிச்சி குடியைக் கெடுக்க சிவச்சி
லிச்சினு வுன்னை
அடி தேனே கோமளமானே என்ற உன்ஜெயம்
பலியாது சொன்னேன்
முன்னங்கருத்த சேலை வாங்கித் தாரேன் காதுக்
கோலை வாங்கித்தாரேன்
பொருத்துக் கொள்ளடி குயிலே என்று முன் புழுகின
தல்லாம் போரும் (திரு)

மாடிவீடு சீடிவைத்து மகிழ்வாய் கட்டித்தாறேன்-அடி
மாதே நீயும் நானுமாக வாழ்க்திடநித்தம்வாரேன்—
யின்று
காடி ஒன்று காரு ஒன்று கட்டாயம் வாங்கித்தாரேன்-
அதில்
ஜோடியாய் நாம் இரண்டுபேரும சுற்றிப் பார்க்க
வாரேன்—என்று
சொல்லிச் சொல்லி பல்லைக் காட்டி ஷோக்கை
நினைத்து பாரேன்.
சும்மாவந்தா அம்மாதிட்டுவா துட்டும் வேண்டாம்
கட்டு பொட்டணம் (திரு)

43 (டாசோ போன் புதிய பிளேட்)

சங்கீத வித்வான்

K.S. வெங்கட்ராமய்யர் (குன்னக்குடி)

இராகம் பைரவி—தாளம் ஆதி.

பல்லவி.

வந்துகந்தனைச் சொந்தமாகவே
னைந்துனைந்து கலந்திடச் சொல்லடி (வ)

அ. பல்லவி.

செந்திரு மோங்கிய செந்தில் நகர்தனில்
இந்த உலகம் புகழ்ந்திடமேவிய
விந்தையாக மகிழ்ந்து மாமலர்
கந்தஸாமியை யிந்த க்ஷணந்தனில் (வ)

சரணம்.

பக்குவமாகிய மைக்குழலேமதன்
மிக்கமலர்தொடுத்தானடி யெனை
சத்யம்செய்திப்போ பூரிக்கச்செய்யும் துரை
கைக்குள்ளே சிக்கிக்கொண்டேனடி
இக்குமொழிமட மானே யென்மேல்
சொக்குப்பொடி தூவினுனே
மயக்கமாகி தியக்கமேவி
இருக்கிறேன் சற்றுறக்கமுமில்லையே (வ)

44 (பிளேட் பின்பக்கம்)

ராகம் பியாகடை—தாளம் ஆதி.

பல்லவி.

தைத்த தினுலென்னடி
தனத்தில் நகம் (தை)

அநுபல்லவி.

உத்திர கோசமங்கை
மங்களேச்வரி பாதம்
உறுதியுடன் பணிந்தனுதினமும்
கிருபையோங்கு முத்திருளப்வேந்திரன் நகம் (தை)

சரணம்.

கணவன்செய் தொழில்தானடி
கொங்கைக் குறியைக்கண்டு பிரமிப்பதென்னடி
வணிமேடை தனிமேல வங்கணமாய் மேவையில்முத்து
வடத்தை யனிதன தடத்தை நீபிடி கொடுத்தபோதவர்
பிடித்ததில் நகம் (தை)

இப்படிச்சொல்லலாகுமோ—புருஷர் மீதில்
இன்பம் பெண்கட்கு நோகுமோ
மற்புயன் மார்பிலுன் சேயமுலே யதனே
வைத்தழுத்தியொரு முத்தமிட்டணே சுகத்தில் மெய்
பரவசத்தில் சற்றுசற்று நகம் (தை)

45. (டாசோபோன் புதிய பிளேட்)

கோகிலகான. மிஸ் T. S. கமலம்.

காந்திமகா னேந்திய கைராட்டு—தேச
கக்ஷிதரும் பக்ஷமுள்ள ரோட்டு—இதைக்
காவலரும் பாவலரும் ஆவலுடனேயுலாவிக்
காப்பார் பஞ்சு நூற்பார்.

ஊழியத்தை காலிசெய்யும் ராட்டு—பேசும்
ஒத்துழையாப் பாட்டுத்தருஞ் சீட்டு—இதில்
ஓது தந்த்ர வேதமந்த்ர கீத வந்தேமாதரந்தான்
உண்டு ஜெயங் கொண்டு.

நாலிரண்டும் கால்வகுத்த ராட்டு—இது
நாணயங்கள் வாணிபத்தின் ரோட்டு—புது
நாகரீகமே கொடுத்து ராஜரீகமே மிகுத்து
நாட்டும் கலி ஓட்டும்.

நேசமிகும் தேசீயக்கை ராட்டு—பூர்வ
நீதிமுறை ஜாதிமதப் பூட்டு—இது
நித்தநித்தம் இந்தியரின் ரத்தசுத்த வெள்ளம்வந்து
நீட்டும் தாகம் ஓட்டும்.

கோடிமுகம் கூடியதோர் ராட்டு—கவிக்
குஞ்சரத்தின் செந்தமிழின் பாட்டு—ரெண்டும்
கூடுவதால் தேசியமும் நாடுவதிலே கதரை
கொள்வோம் ஜெயம் கொள்வோம்.

46. (பிளேட் பின் பக்கம்)

கதராடை யணிவோம் நாமே கண்யசுதேசி (கத)
கனவாழ்வுறலாம் மிகமேலே கவனம் சுதேசி (கத)
இதா தேசத்தினுடை இங்கு நமக்கேனோ பீடை
இனிச்சமுதாயமேடை எங்குமிதுவே பாஷை

(தொகையறு)

கையினல் நூற்பதும் கஞ்சியை வார்ப்பதும்
கல்விமிகு மோதிலால் கதரே
வியாபாரம் செழிப்பதும் மிதவாத மொழிப்பதும்
விஸ்தார ஜவஹர் கதரே
அயல்போன பொருளையும் அகிலதேசத்தையும்
அளிப்பதும் மாளவ்யா கதரே
சுயநலமொழிப்பதும் சுள்ளுக் கள் ஒழிப்பதும்
திரு.த்தூதர் காந்தி கதரே.

(பாட்டு)

சுகபோகம் யாவும் தந்திடு சொர்ணமயக் கதரே
சுயராஜ்யம் நல்கவந்த சுத்த சுதேசக்கதரே
இகலட்சுமணன் மெச்சும் இன்பக்கதரே பக்ஷம்
இன்னமுமேனோ அச்சம் இதுவொன்றேயாகும் லக்ஷம் (கத)

47 (டாசோபோன் புதிய பிளேட்)

சங்கீத பூஷணி

மிஸ் M. R. ஜானகி பாய்

வாய்க்காதடி இந்த வாலிபகாலம் போனால் (வா)
வாய்க்காதடி போகம் (வா)
போனால் (வா)
பருவம் (வா)
புருஷன் (வா)
அடி வனிதையே கலவியினனுபவ சுகமது (வா)

பாக்யமதில் மிகுந்த பாலனென்றுதான் சால
சிலாக்யமுடன் கொடுக்கத் தீரமொன்று மாகோல
யோக்யமுள்ள புருஷன் உத்தனுக்கெனைப்போல (வா)

உடல்பொருளாவி மூன்றும் உனக்குநான் செய்வேன் தத்தம்
தடையின்றியே கொடுக்க தையலே மனவருத்தம்
விடுவதுவோ தகுதி வித்தகி குணப்பொருத்தம் (வா)

திருவுடுமாமலை சிறக்கவந்த பொற்கிரீடி
சரபகவிதை முத்துச்சாமிசிடர் சொற்படி
தருணம்வந்தேனனை என்னைக்கூடுவாய் (வா)

---

48 (பிளேட் பின்பக்கம்)

புளியம்பட்டி மாதாரி பெண்டாட்டி
நா யெஜமா பெண்டாட்டி (நான்)
எம்—புருஷம்பேருஞ் சொல்லகில்ல
மாட்டேனுங்கோ (நா)

வெளியேவந்து வெருகோ
மாச்சுதுங்கோ காட்டு
வேலைக்கிப் போகும் புருஷன்
வெய்வானுங்கோ
வீட்டுக்குப் போவோணும்
வெந்ததையும் திங்கோணும்
காட்டுக்குப் போகோணும்
கட்டையுமொடிக்கோணும்
பூட்டையும் போடணும்
புள்ளையை எடுக்கோணும்
இத்தனையும் செய்துப்போட்டு—கொழுந்தனை
யேரிட்டுப் பார்க்கவேணும்.
பொள்ளாச்சி சந்தைக்குப்போகவேணும்
யெஜமா போகவோணும்—வீட்டுப்
பொளப்புச் சிலவுலந்த தீயவோணும்
பொருகுலொக காசு
பொவ்வாகுலுவக்காசு
செருகுலேது செல்ல
செரணிகோடி பில்ல
முருகுலா தட்டு
மொச்சலு பெல்லம் வட்டு
வருகு சோளம் ராயி
வலுத்த மூங்கிப்பாயி
முச்சூடும் வாங்கணுங்கோ—யெஜமா
மூணு ரூபா தந்திடுங்கோ
ராயம்பிலித்தண்ணி காச்சிக்கிட்டு

யெஜமா காச்சிக்கிட்டு
அவித்திரக்கிரிக் கடைஞ்செடுத்து
போட்டுக்கிட்டு
போயெம் புருஷனுக்கு ஊத்திப்போட்டு—யெஜமா
புள்ளெக்குப் பாலுங் கொடுத்துப்போட்டு
புதுக்கம்புத் தட்டே
போட்ட போருக்கிட்டே
எதுக்கிருந்திட்டே
இரண்டுமணி மட்டே
எட்டுத்துட்டு கூலிக்குத்தா—யெஜமா
இளம்பொழுது நேரம் வாரே (புளி)

(டாசோபோன் புதிய பிளேட்)

49. நாடகராணி மிஸ். K. P. ஜானகி

அடிமை வளர்தலுங் கோவிலிலே—பகுத்
தறிவு கெடுதலுங் கோவிலிலே—நம்
கடமை மறத்தலுங் கோவிலிலே—கருங்
கல்லைமதிப்பதுவுங் கோவிலிலே
சோரம் விளைவதுங் கோவிலிலே—பல
சாமி வளர்தலுங் கோவிலிலே—பிறர்
தாரம் விரும்பலுங் கோவிலிலே—பெருந்
தாசிகளுற்பத்தி கோவிலிலே
பட்டப்பகல் கொள்ளை கோவிலிலே—நம்
பணம்பறி போவதும் கோவிலிலே—நல்ல

இஷ்டர் தொடாத்திரை கோவிலிலே—தொட்டால்
இறந்து படுஞ்சாமி கோவிலிலே
பார்ப்பனர் ஆக்ஷியும் கோவிலிலே—அவர்
பாபச்செயல்களும் கோவிலிலே—நம்மை
ஏய்த்தவர் வாழ்வதுங் கோவிலிலே—நாம்
ஏமாற்றமாவதும் கோவிலிலே
சோம்பல் பழகலுங் கோவிலிலே—பார்பார்
தொந்தி பெருப்பதுங் கோவிலிலே—கெட்ட
தீம்பாலைக் கொட்டலுங் கோவிலிலே—நாம்
சிறுமையடைவதுங் கோவிலிலே
வடகலை தென்கலை கோவிலிலே—மத
வாதப் போருடுவதுங் கோவிலிலே—நல்ல
கடவுள் கல்யாணங்கள் கோவிலிலே—அவர்
காமத்திருவிழா கோவிலிலே
கொலைகள் நடப்பதுங் கோவிலிலே—பல
குடிகாரர் வாழ்வதுங் கோவிலிலே
சிலையின் திருவிழா கோவிலிலே—இந்து
தேசம் பாழானதுங் கோவிலிலே.

———

50. (பிளேட் பின்பக்கம்.)

என் புருஷன்போலே
எவர்க்குக் கிடைக்கும்—இனி
என்ன கிடைத்தாலுந்தன்
வயிற்றிலடைக்கும் (என்)
அடியே (என்)
அக்கா (என்)

வசனம்:—அடியே அம்மா! அவளே இவளே! அயிலாண்டம் என்னமோ உலகத்திலே உங்களுக்கெல்லாம் புருஷன் வாச்சுது, வாச்சாலும்.

(பாட்டு.)

என் புருஷன்போலே
எவர்க்குக் கிடைக்கும் (என்)

வசனம்:—ஆறு எங்க வீட்டுக்காரரு இருக்கிறாரே அவரு யார்கூடேயும்.

(பாட்டு.)

வம்புபேச மாட்டார்
வாதிக்கும் போகமாட்டார்—ஆனல்
கம்புச்சண்டை செய்யமட்டும்
கைசலிக்கமாட்டார் (என்)

வசனம்:—இதோடே போச்சா இன்னும் "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பார் சொல்லிழுக்கப்பட்டு" இண்ணு பெரியவா சொல்லியிருக்காங்களே அந்தமாதிரி

(பாட்டு)

சொல்லுத் தவறாத சுத்த
அரிச்சந்திரன்—ஆனல்
சல்லிக்கிரு பொய்பேசும்
சத்சங்கத் தூரந்தரன்—ஆஹா (என்)

வசனம்:— இதோடே போய்விட்டதா இந்த ராமாயணத் திலே ராமரு ஏகபத்தினி விரதமாயிருந்தாரே அந்த மாதிரி எம்புருஷன்

(பாட்டு)

என்னைவிட்டு வேறொருத்திக்
    கிச்சை கொள்ளமாட்டார்—அந்த
பொன்னிமகள் வீட்டுக்குப்
    போகாதிருக்கமாட்டார் (என்)

மாயயை வெறுக்கும் தூயபக்தசீலன்—ஆனால்
    கோவில்களைக் கண்டவுடன்
குட்டிச்சுவ ராக்குகின்ற (என்)

    நல்லகுடியாளன் நம் நாட்டினில்
தயாளன்—அந்த
    செல்லமய்யருக்குப் பிறந்த
ஜி. எஸ். பிள்ளையாங் கண்ணாளன் (என்)

---

51 கோகிலதொனி

மிஸ். T. S. ரமாமணி

மாமி—மருமகள் சண்டை.

மாமி:—

வீட்டிலே வேலைவெட்டி வெவுசாக விட்டுப்போட்டும்
பாட்டிலே வெளியேவந்து பழமைஎன்னடி அழுகுமூஞ்சி
நீட்டி பேசாதவாடி நினைவுகெட்ட நீலிமுண்டை,

மருமகள்:—

காட்டுக்குப்பழையசோத்தை கலையந்நிறைய ஊத்தியுப்பு
போட்டுத்தான் கொண்டுபோயிப் புருஷனுக்குங் கொடுக்கப்
[போனேன்
ரோட்டுமேல் தின்னுவிட்டு ரோசங்கெடப் பேசாதத்தை.

மாமி:—

அடி ரோசக்காரன் மவளே தெரியும்
ரோக்கிதி யெல்லாஞ் செத்தே

மருமகள்:—

பேசத்தெரியாம நீயும்
பிழச்சதெப்படி அத்தே

மாமி:—

(வசனம்.) ஏண்டி! என் பிழைப்புக்கென்னடி குறைச்சல். உன்னைப்போல வந்து மூணு நாலு வருஷமா ஒண்ணு மாயில்லாமயிருந்தேன் நான். புருஷனைக் கட்டினேன் புள்ளெயெப் பெத்தேன், பொருளைத் தேடினேன், வீட்டை வாங்கினேன் காட்டெ வாங்கினேன் தோட்ட மாக்கினேன். ஐம்பது ரூபாய், ஒம்பது துட்டு செலவு பண்ணி ஒன்னெயுங் கொண்டு வந்தேன். இப்போ நீ திங்கறது, உன் புருஷன் திங்கறது நான் தேடினடிது தாண்டி. பின்ன நான் பேசறதிலே என்னடி வந்தது. அகராதிக்காரன் பெண்டாட்டி.

மருமகள்:—

இந்தப்பாரு! இன்னேரவரைக்கும் என்னைப்பேசினே, எங் கப்பனைப்பேசினே பொறுத்திக்கிட்டேன், இனி அவங் களைப் பேசினே என்ன செய்வேந்தெரியுமா?

எழுவனிங்கிர கொழுவு, எட்டியாபுரத்து மிளகு, ஐந்து செல்லு, ஐந்து கல்லு, புதுவோடு, நெறிஞ்சி முள்ளு இவ்வளவுவைத்து ஒரு அரக்கு அரக்கி திருக்கு திருக்கிப் புடுவேன் தெரியுமா ஜாக்ரதை.

மாமி:— (பாட்டு)

என்மகனை நான் திட்டுறு உனக்கேண்டி கோபம்வரும்
கும்மாளம் போட்டுத் தின்னு குடிகெடுக்கிற பயமகளே.

சும்மா தான் வீசுரடி
சூரன் பெண்டாட்டிபோல (சும்)

மருமகள்:—

வீசக்கிச வுங்க வீட்டுக்குவால
வேலைவெட்டி செய்ய வேண்டியும் வரல
பேசும் பேச்சுக்கிட்டுப் பிழைக்கவரல

(வசனம்) தெரியுமா! ஆமா பாத்துக்கோ; புடித்தமில்லாட்டி புருஷம் பெண்டாட்டிக்குக் கொடுக்கிறதெல்லாம் கொடுத்து பிரிச்சிவிட்டானும்.

மாமி:-யேண்டி ! யாருதேடின முதலுக்கு யாரு பங்காளிடி.

(பாட்டு.)

அசட்டுச் சிறுக்கி அழியும் சிறுக்கி
பசட்டுச் சிறுக்கி பசப்புச் சிறுக்கி
பனமரப்பாலைக் குடிச்ச சிறுக்கி
தென்னமரத்திலே தேஞ்ச சிறுக்கி
செவிட்டுச் சிறுக்கி முறட்டுச் சிறுக்கி
தெண்ட சோத்துக்கு வந்த சிறுக்கி

(வசனம்) ஏண்டி உனக்கு பங்கா!

மருமகள்:—இல்லே வாங்காமே விட்டுருவாக—நாளைக்கி

மாமி:— நாங்க கொடுத்திருவோ நீங்க வாங்கிகிட்டு போயிறுவெ.

மருமகள்:—எவ வேண்டாங்கிறவ, எவ கொடுக்கிறவ, எவ வரச்சொல்லரவ—அவ,

எம்புருஷன் பெண்டாட்டியோ
எனக்கு வந்த சக்களத்தியோ
கும்பரூந் திருவைப்போல
கூத்தாட்டம் மாடுறுளே

(பாட்டு.)

என் னேரம் பார்க்கிறது இருந்திருந்து கேட்கிறது
பின்னேதான் பேசிப்பாரு தங்கமே தில்லாலே.

---

52. கள்ளராஜா மிஸஸ்.

V. M. மீனாக்ஷி சுந்தராம்பாள்.

சாராயபுட்டியுண்டு
ஜாதிக்கோழி முட்டையுண்டு
சீரான ரொட்டியுண்டு
ஜில் ஐஸ் கட்டியுண்டு—சதாரம்
கணக்கா—சதாரம்
ஜோக்கா—சதாரம்
பலபல்—சதாரம்
வாடிவாடி—சதாரம்

ஆக்கிவச்ச சோறிருக்கு
கூட்டிவச்ச கொழம்பிருக்கு
ஆட்டுக்கறி வருத்திருக்கு
போட்டுத்திங்கலாம் வீட்டுக்குள்ளே—சதாரம்

கணக்கா—சதாரம்
ஜோக்கா—சதாரம்
பலபல்—சதாரம்
வாடி வாடி—சதாரம்

சண்டையது போட்டுக்கிட்டு
ஜாலம் பண்ணினுக்கத்தான்
மண்டைய் ரெண்டாய் உடஞ்சுபோகும்
மாமனுக்கு மருமகனே

மயிலம்பாடி சந்தைக்குப் போவோம்
வாடி முன்னலே—கூட
வழியைப் பார்த்து நடந்துவாடி
எனக்குப் பின்னலே—கண்ணே

மூலமுடுக்கோரம்
மூலனூரு ரோட்டோரம்
முதலில்லா வியாபாரம்
மும்மரமாய் செய்திடுவேன்
உனக்கேத்த புருஷன்னனே
உடுமலைப்பேட்டை—கவி
தனைப்பாடி கேள்க்கமட்டும்
நான்விட மாட்டேன்

53. (பிளேட் பின்பக்கம்.)

செல்வமுத்துமாரி—வண்டூரு
தெப்பக்குளத்துக்காரி—ஒய்யாரி (செல்)

சுடலைமுத்து மாரி—வேப்பலை
சூடுகின்ற மாரி—மணிக்குடல்
பிடுங்கும் சூலமாரி—பேயாட
பிரியமுள்ள மாரி—ஓங்காரி (செல்)

பத்மராகம் வைடூர்யம் பச்சை
பதக்க மாலைகள் தங்கசெச்சை

பாடகங்கள் கொலுசு—ஒட்டியானம்
பாஜிபந்து தினுசு—வைர
மோதிரங்கள் கொப்பு—காதோலை
மூக்குத்திகள் வைப்பு—பலேபல் (செல்)

கோழி திருடவேணும்—தேவாலய
ளையடிக்கவேணும்—உனக்கு
லு குத்தி—பொங்கலு
காரேன்—அருள்செய் (செல்)

வேணும்—ஊராரின்
ம்—நாமும்
வேணும்—ஜில்
பலேபல் (செல்)

54. மிஸ்டர். பாகவதர்

வேதநாயக சாஸ்திரியார்.

செஞ்சுருட்டி] [ஏகதாளம்.

பல்லவி.

அந்தக்கோனே ஆதிந்தக்கோனே
ஆனந்தத்திருவிளையாட்டுக் கோனே (அ)

அனுபல்லவி.

சொந்தத்தில் வந்த பிரபந்தக்கோனே
தூங்காமல் தூங்கும் ஆனந்தக்கோனே (அ)

சரணங்கள்.

1. ஆதியிலே இருந்த வார்த்தைக்கோனுன்
அப்பனுர் மடியிலே சாய்ந்திருக்க
ஏதேன் வனத்திருந்த இரண்டாடும்
ஈரந்தி நேரத்திலே ஓடிப்போச்சு
பூதலத்தைச் சிருஷ்டித்தப் பின்னுளில்
பொங்கிவந்த வெள்ளப் பிரவாகத்திலே
சேதப்பட்டாடெல்லாம் மாண்டபோது
சேர்த்தெட்டை கரைசேர்த்த திவ்வியகோனே (அ)

2. ஜாதியும் பாஷையும் ஒன்ருக
சீராய் வழங்கிவந்த காலத்திலே

வாதுகள் கூறியோர் ஊர்தனையும்
வானத்தை எட்டுமோர் ஒருகோபுரத்தையும்
பூதலக்கிடாய்க் குலங்கள் கட்டும்போது
புட்பக்கரத்தில் நின்று தாறுமாறாய்
சேதப்படத்துறத்தி பூமியெங்கும்
சிதறோட்டி வைத்தத்திரு தீர்வைக்கோனே (அ)

3. எட்டாட்டு மந்தை மேய்த்திருக்கையிலே
ஏராளமாயதுகள் குட்டிபோட்டு
வட்டாரம் ஒரெட்டுங்கொள்ளாமல்
மந்தை மந்தையாய் வருத்தித்தபோது
கட்டாயமாய் ஒரு மலட்டுக்கோனுனை
கல்தேயர் நட்டைக் கடத்திவந்து
ஒட்டாரமாககானுன் தேசத்தையே
உம்பிழிக்கையாய்க் கொடுத்த ஒற்றைக்கோனே (அ)

4. கண்கெட்ட கோனுக்குப் பெண்தேடி
கடிகு எறியேசர் வந்தபோது
தண்ணீருக்குப் போனவளைக் கூட்டிவந்து
தம்பதிகள் வளம்பெற அருள்புரிய (அ)

55. (பிளேட் பின்பக்கம்.)

சங்கராபரணம்] [ஆதிதாளம்.

பல்லவி.

பரமகுருவே மா பாவிகளின் உறவே

சரணங்கள்.

1. பெத்தலேப்பதியில் வந்தபோதா—உல
கத்தை மீட்கவந்த குருநாதா—எமை
மெத்தகரி சித்ததிருப்பாதா—திரு
ரத்தஞ்சிந்தின பரமநீத (பரம)

2. திறமுள்ள நல்ல உபகாரி—வல்ல
சுரர்நரர் போற்று மதிகாரி—பவ
இருளற நீக்கிடும் ஆசாரி—மனு
உருவெடுத்தீரே எமைக் கோரி (பரம)

3. வக்கிலும் செய்கையிலும் வல்லவரே—உயர்
தீர்க்கெனெனவும் பெயர்பெற்றவரே—விணை
தாக்கியே கண்ணோக்கி ரட்சிப்பவரே—மெய்
பாக்கிய மளித்திடும் ஆண்டறரே (பரம)

4. இயேசு வென்பதுந்தன் திருநாமம்—அதை
பேசினுல் வருமே சுபேக்ஷமம்—பர
தேசிகளெமெக்குண்டதிலேமம்—இக்
காசினிதனிலதுவே தாமம் (பரம)

5. காயமிது மெய்யல்லவே தேவா—ஐங்
காயமடைக்கலந்தந்து காவா—நற்சு
காயங்கொடுத்தாளும் எமை யேவா—வேத
நாயகனேதுங் கிறிஸ்து பாவா (பரம)

(டாசோபோன் புதிய பிளேட்)

56. கவிப்பிரசங்கம்

D. A. ஆர்தர் பாகவதர்.

தேவாரப்பண்.

தீக்கொழுத்தி முனிவருட தீரமதைச் செப்பிடுவோம்
எக்கமுடன் கேட்டிடுவீர் எம்பெருமான் தாசர்களே.

பஞ்சம்வரும் பேதைகளே பாரினிலே ஓர்சமயம்
கஞ்சி நீ ராகாரப் பஞ்சம் கடும் பஞ்சமொன்றுமில்லை.

வாக்குமனமெட்டாத மகத்துவனார் திருவசனம்
கேட்க கிடையாதபஞ்சங் கிட்டுதுகாண் கிறிஸ்துவரே.

ஆழிசூழு மகிலமதின் அட்டதிசை முழுவதிலும்
பாழுலகி லலைந்தாலும் பார்ப்பீரோ பக்தியதை.

சிறியவரும் பெரியவரும் வறியவரும் வலியவரும்
முறையுடனே வேதமதை யோதுவதைச் செவிமடுப்பீர்.

இவ்விதமா யியம்புகின்ற யின்பக்கவி யாருதரும்
ஒவ்வியிதை யுரைத்து வைத்தான் உணர்ந்துகொள்வீர்
[உத்தமரே.

---

57. (பிளேட் பின் பக்கம்)

இராகம் செஞ்சுருட்டி] [தாளம் சாப்பு.

பல்லவி.

பெத்தலையிற் பசுக்கள் நிறைந்தவோர் தொழு
விற் பிறந்தன ரேசு.

அநுபல்லவி.

இத்தரையிலின்பம் என்றும் நிகழ
ஜெயச் சிலுவைக் கொடி வீசு.

சரணங்கள்.

மூக்தியிலும் தூதர் மத்தியிலும் நின்று
மங்களம் பாடினாரன்று
எத்திசையுமுள்ள எல்லா ஜனங்களும்
இன்பக் கீதங்கேட்டார் சென்று.

வானில் விடிவெள்ளியாலே மூவர்வந்து
வேதமுறைப்படி தோண—அந்த
வீராதிவீரனுங் கந்தையாடையுடன்
வீற்றிருந்தையுங் காண
விண்ணில் மகிமையும் பூவிற் சந்துஷ்டியும்
உண்டாகவென்ற முழக்கம்—இந்த
மண்ணிலிருந்த மாபாவிகளின் வினை
தீர நூதன விளக்கம்.

கண்டுபிடில் வீணை தம்புரு தபேலா
வோடு ஆருதரும் பாட
கண்டு வானோர் கும்பல் கும்பலாகவந்து
கூடியே நடனமாட.

---

58 (ஹட்ஸன்வ்ஸ் புதிய பிளேட்)

மிஸ். N. S. ரத்னம்பாள்.

நல்லதங்காள்

வசனம்.

கண்மணிகாள்—வரும்விதி வழியிற்றங்காது. ஏன் விசனிக்கிறீர்கள்.

பாட்டு.

பாழடைந்த காட்டிற்குள் மக்களா
பாங்காய் செல்வோம் வாரீர் மக்களா
ஏங்கியழாதீர்கள் மக்களா
ஈசன் நம்மையே காப்பார் மக்களா
அண்ணன் வீட்டுக்குச்சென்று மக்களா
அன்னமளிக்குறேண்டா மக்களா
வாரும் சிலதூரம் மக்களா
வரிசையாய் என்பிறகே மக்களா
காலகதியினாலே மக்களா
கடும்பசியாலே போகிறோம் மக்களா
தெரியுது அண்ணன் வீடு மக்களா
தீவிரமாய் நடப்பீர்கள் மக்களா
தலைவிதிக்கென்ன செய்வோம் மக்களா
தாயுடன் கூட வாரும் மக்களா

---

59 (ஹட்ஸன்ஸ் புதிய பிளேட்)

மிஸ் N. P. ருக்மணி (குறத்தி பாட்டு)

பச்சை குத்தி கொள்வாருண்டோ இந்த நாட்டிலே
பாசி வாங்கிக் கொள்வாருண்டோ
தன தனன தன தனன தனதான பச்சை

(வ-ம்) ஏன் ஐயா நான் என்னென்ன பச்சைகுத்துவேன் கேட்டீங்களா,

நல்ல நல்ல பாம்பு பச்சை
நல்ல நல்ல தேள் பச்சை
நல்ல நல்ல பூரான் பச்சை
நல்ல நல்ல கொக்கு பச்சை
நல்ல நல்ல கோழி பச்சை
நல்ல நல்ல புரு பச்சை
உங்கள் பேரைப்போலெ பச்சை
தஞ்சா வூரைப்போலெ பச்சை
பச்சைக்குத்திக்கொள்வாருண்டோ

இந்த நாட்டிலே பாசிவாங்கிக் கொள்வாருண்டோ
தன தனன தன தனன தனன தானு

(வ-ம்) ஏன் ஐயா நான் என்னென்ன ஊரிலே எப்படி பச்சை குத்தினேன் கேட்டீங்களா.

நாகப்பட்டணம் ஜில்லாவிலே நடந்துகுத்தினேன் [கேட்டுக்கோங்கோ
சென்னைப்பட்டணம் ஜில்லாவிலே சேர்ந்துகுத்தினேன் [கேட்டுக்கோங்கோ
கோயமுத்தூர் ஜில்லாவிலே ஜோராய் குத்தினேன் [கேட்டுக்கோங்கோ
அங்கே குத்தினேன் கேட்டுக்கோங்கோ
இங்கே குத்தினேன் கேட்டுக்கோங்கோ
அவருக்கும் குத்தினேன் கேட்டுக்கோங்கோ
இவருக்கும் குத்தினேன் கேட்டுக்கோங்கோ
பச்சைக்குத்திக் கொள்வாருண்டோ
இந்த நாட்டிலே பாசி வாங்கிக் கொள்வாருண்டோ
தன தனன தன தனன தனன தானு

60. (ஓடியன் புதிய பிளேட்)

ஆர். பிரஹதாம்பாள், மதருஸ்.

ராகம் — ராகமாலிகை.

(ராமலிங்கஸ்வாமி பாடல்)

(பைரவி.)

உடுக்கவோ ஒரு கந்தைக்குமேயில்லை
உண்ணவோ உணவுக்கு வழியில்லை
படுக்கவோ பழம்பாயிக்கும் கதி யில்லை
பாரினில் நல்லவர் பாற்சென்று பிச்சைதான்
எடுக்கவோ திடமுமில்லை.

(மோஹனம்)

என்பால் உனக்கு
இரக்கமென்பதுமில்லை உயிரைத்தான்
விடுக்கவோ மனமுமுல்லை யென் செய்குவேன்
வெண் பிறைச்சடை வித்தக வள்ளலே.

---

61. (பிளேட் பின்பக்கம்)

ராகம் - ஸ்ரீரஞ்சினி. தாளம் - ஆதி.

சித்தம் இறங்கவில்லையோ என்னய்யனே. (சித்த)
உத்தமனே நான் உன்னடிமை யல்லவோ
எத்தனையோ எடுத்துரைத்தும் என் மீதின்னும்

ஸா நிதாம மாக ரீக ஸரிகரிஸா மகரி நிஸரி கமத நி
ஸரிகமா கமாகரிஸ நிதநிஸரி தகரி ஸநிதரி ஸநித
மகரிஸ கரிகம (சித்த)

பாவிபடும் துயரம் பார்த்து மிறங்காவிடில்
ஆவிக்கொருதுணை யாரய்யனே கூறும்
தீவினையின் பயனோ தெய்வகுற்றமோ இது
கூவிகதரும் எந்தன் குறைகள் இன்னும் (சித்த)

---

62 (ஓடியன் புதிய பிளேட்)

டி. எம். ஜெகதாம்பாள் & பார்ட்டி
எம். ஆர். ராஜரத்தினம் &
டி. எம். ஜெகதாம்பாள்

4 பேர்கள் :—

ஏ என்னையா இது மணி ஒன்பதரையாச்சுது நாடகத்தை நடத்தப்பா.

(பொது ஜனங்கள் கூச்சலிட்டுக்கொண்டு கைதட்டி சீட்டியடிக்கிறார்கள்.)

ஸ்டேஜ்—மணியடித்தல்.

ஹார்மோனிஸ்ட் :—

சீதாராமம்பஜே சீதாராமம்பஜே.

ஜனங்களில் சிலர்:—நிறுத்தப்பா பாட்டே, ஹார்மோன்யம்.

வேறொருவர்:—சுருளிமலை பாடு

ஹார்மோனிஸ்ட்:—

சுருளிமலை மீதில்மேவும் சீலா
ஸ்தோத்தரித்தேன் சுப்ரமண்ய வேலா

சிலர்:—அக்காமகளே பாடு

ஒருவன்:—தேயிலைத் தோட்டம்

மற்ெருருவர்:—பொன் கோதண்டா பாடு

பபூன்:—ஐயா யாராவது ஒருத்தர் கேளுங்க.

ஜனங்கள்:—நீ போ உள்ளே உன்னை யாரடா கேட்டா

ஸ்திரி பார்ட் (வள்ளி):—

ஆலோலம் ஆலோலம் ஆலோலம் சோ சோ சோ

சிலர்:—ஏ் நிறுத்து வண்ணான் வந்தானே பாடு

ஸ்திரி பார்ட் (வள்ளி):—

வண்ணான் வந்தானே, வண்ணாரச் சின்னான் வந்தானே
வண்ணானும் வண்ணாத்தியும் விண்ணாரம் பேசியே
கண்ணைச் சிமிட்டியே கண்டவர் மயங்கிட (வண்)

சபையோர்:—ஒன்ஸ்மோர் (Once more)

ஸ்திரி பார்ட் (வள்ளி):— வண்ணான் வந்தானே.

மற்ெருருவர் :—பிளேட்டைத்திருப்பு.

ஸ்திரீபார்ட் (வள்ளி:)—

மதிச்சியத்திலே குடியிருக்கிறது ஏ ஐயா அந்த
மதுரையிலே மோரு விக்கிறது நான் வந்து விக்கிறது(மதிச்)

சபையோர் :—பேஷ் (அப்ளாஸ்)

ஒருவர் :—பண்டித மோதிலால்

ஸ்திரீபார்ட் (வள்ளி):—

பண்டித மோதிலால்நேரைப் பரிகொடுத்தோமே
பரிகொடுத்தோமே
நெஞ்சம் பரதவித்தோ (பண்)

ஒருவர்:—சரிபோ கதையை நடத்து.

ராஜபார்ட் (சுப்ரமண்யன்):—

வாங்க வாங்கடி லவண்டிகளா—நல்ல
வாத்தியார் சட்டாம்பிள்ளையை கண்டிங்களா
போங்க போங்களடி பெண்டுகளா
ஒரு புருஷனுக்கு ஆசைபட்டு

வேறொருவர் :—ஏ கதர்கப்பல் பாடு

ஒருவர் :—செந்தூர் வேலாண்டி

இன்னொருவர் :—ஜாதிகுலப் பிறப்பென்னும்

நான்கு பேர்களுக்குள் சண்டை:—நீ என்னடா கேக்ரது, நீ பேசாதேடா போண்டா வாயா, நீ எதுக்கடா இந்தப் பாட்டைக் கேட்டே.

பபூன்:—சபையோர்களே, எனைச்சலே குரைச்சல் செய்யுங்கள் இப்படிக் கூச்சல் போட்டால் எப்படி நாடகம் நடத்துவது.

ராஜபார்ட (வேடன்):—

காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே
மேயாத மான், புள்ளி

ஒருவர்:—சரிதாம் போ. தீண்டாமை பாடு.

மற்ருெருவர்:—ஏ ஸ்திரிபார்ட் பாடு.

ஸ்திரிபார்ட் (வள்ளி):—

ஓடிவந்த வேடுவனே கேள்,
நீ தேடிவந்த மான்புகுந்த காடிதல்லடா.

ராஜபார்ட் (வேடன்):—

ஆயலோட்டும் பெண்ணே, (ஸ்வரம் பாடுகிருன்)

வேருெருவர்:—ஏ நாடகமேடையென்று நினேச்சயா? பாட்டுக் கச்சேரின்னு நினேச்சயா?

இன்னெருவர்:—பாடகரே துட்டு வாங்கிண்டு தபாக்கிறயா, என்ன? ஏ ஸ்திரீபார்ட், கூடைமுறம் கட்டரது பாடு.

மற்ருெருவர்:—ஏ அது பாடாதே டிரியோ பாடு.

ஸ்திரிபார்ட (வள்ளி:—

டிரியோ டேயன்ன டேயன்ன.

பபூன்:—சபையோர்களே இந்நாடகம் இத்துடன் முடிவு பெற்றது.

(கைதட்டுதல்)

ராஜபார்ட், ஸ்திரிபார்ட், ஹார்மோனிஸ்ட், பபூன்:—

ரகுபதி நந்தன ராஜாராம்
பதித பாவன சீதாராம்.

இருந்த இருப்பை மறந்து விட்டுமே
என்னிடஞ் சண்டையா தொடுத்தாய்
இருக்கட்டும் பயல் வரட்டும்—சந்தி
சிரிக்கட்டும் மானங் கெடட்டும்
எண்டியக்கா இவன் பேசினது
எல்லோருக்கும் காது கேட்டுச்சா
இவனைக்கட்டி மாறடிச்சு
என்குடும்பம் வாழ்ந்திச்சா

மருமகள்:—

அருமை மாமி பெருமை குறைய
அப்படி என்ன செய்தேன்—உங்கள்
ஆக்கினைக்கி மீரி யாரிடத்திலே வைதேன்
ஆத்தா அப்பன் மீது வீணாய்
ஆருமோ கோபம்—என்னை
அடித்தாலும் வைதாலுஞ்சரி
அதிலில்லை மனஸ்தாபம்
அப்படியிப்படிப் பேச்சு—நீங்க
செப்பிட என்விதியாச்சு

மாமி:—

வீட்டு வேலை பார்க்காமலே

---

64 (கொலம்பியா புதிய பிளேட்)

காலம் சென்ற ஸ்ரீமான் S. G. கிட்டப்பா

காண்டீபன் மைத்துனை காளிங்க நர்த்தனை
கருணைக்கினிய வர்த்தனை நற்கோவர்தனை

தூண்டிலில் பட்டான்போல் துடிக்குது மந்தையில்
ஆண்டிபோலாக்கி உன்னை யடித்தாய் உன் தந்தை தன்னை

உலகம் புகழும் நல்ல உத்தம பெண்மணி
உயர்ந்த குணங்களெல்லாம் அமைந்திடும் கண்மணி
இலகிய கௌரவ சரச சிங்காரி
இனிய ஸங்கீத ஸ்வராக விசாரி

---

65. (கொலம்பியா புதிய பிளேட்)

T. சௌடய்யா—பிடில்.

பல்லவி.

சேஸிநதெல்ல மறசிதிவோ ஓ ராம ராம

அனுபல்லவி

ஆஸிகொந் நட்டி நந்நலயிம் சுடகு மனு

சரணம்.

ஆலு நீ கைந பக்துராலநுசு நாடு
பாலு மாலக ரவி பாலு நி செலிமியு
பாஷதப்பக விபீஷணுநி கொரகாதி
ஸேஷுடைகு தம்முநி போஷிம் சமநி ராஜு
ராமாத்யாக ராஜ ப்ரேமாவதார ஸீதா
பரம மாடலு தெல்ப பீமாஞ்ஜ நேய ப்ரஹ்ம.

---

66 (கொலம்பியா புதிய பிளேட்)

மிஸ். சந்தான லெக்ஷிமி

முன்பின் தெரியாது மோசம் போனேனே
மோசம் போனேனே இப்போ
முற்றும் விபரீதத்திற்குள்ளானேனே
அவலே நினைத்து உரலிடித்தது போலாச்சு—இப்போ
அகப்பட்டு நல்ல சுகங்கெட்டு வீணிலே போச்சு
மன்மத குரங்கென்ப திவர்தானு
மாப்பிள்ளையை ஏற்கவெனக்குச் சம்மதம்தானு
வாய்நாற்ற மடிக்குதே வெகுதூரம் இந்த
வாழ்வைவிடத் தாழ்வொன்றிலே விகாரம்
பாக்கு கடிக்கப் பல்லொன்றேனு மிருக்குமோ
இந்தப்பழுத்த கிழட்டுச்சவத்துக்கு மெனக்கும்பொருத்தமா
வாயிலூறி வடியுதே யுமிழ்நீரு
இந்த மாப்பிள்ளையை வைத்து சுகிப்பதாரு

---

67 (கொலம்பியா புதிய பிளேட்)

ராமச்சந்திர ராவ்

இராகம்—பைரவி. தாளம்—சாப்பு.

பல்லவி.

இனிமேல் அவருக்கும் எனக்கும்—ஒருபோதும்
இணங்காதடி போடி

அநுபல்லவி.

கனிவளரும் கண்டலே சூளும் சிகண்டி மலேக்
கந்தசாமி வலிய வந்து சொன்னுலும்—இனிமேல்

சரணம்.

ஏதடி ஒருபோதும் மறக்குமோ—பாரில்
இனிமேல் இப்படிக்கு பெண் பிறக்குமோ—கொண்ட
காதல் மனதை மிஞ்சி பறக்குமோ—சொல்லாய்
கறந்தபால் திரும்பிப்போய் சுரக்குமோ—சொல்லாய்
சூதுக்காறிகள் மித்ரபேதத்தை நிஜமென்று
காதல்கொண்டேன் மனதை சோதித்தறிந்தமட்டும்.

---

68 (ஓடியன் புதிய பிளேட்)

M. B. ராஜேஸ்வரி & S. S. ராஜாமணி

மதுரை.

தெய்வீக சக்தியே சிறந்திலங்கும்
எங்கள் காந்தி தேசபக்தியே தேசீய விர்த்தியே
சித்திரக் கைராட்டினக் கதர் ப்ரசித்தியே
க்ஷேம லாப மாகும். (தெய்)

வாழ்வே யுண்டாகுமே மதுக்குடிக்கிடங்
கொடாச் சிறப்புண்டாகுமே மண்மீ தன்பாகுமே
மங்களந் ததும்புகின்ற வாழ்க்கையாகுமே
மாதர்கா ளிந் நாளே. (தெய்)

தீண்டாமை போக்குமே தினந்தினம்
ஜெயக்கொடிச் சிறப்புண்டாகுமே ஜெயமுண்டாகுமே
செப்பும் நமது தேசந்தனது மானங்காக்குமே
கீர்த்தி யெங்கும் பொங்கும். (தெய்)

அன்பாய் நிரந்தரம் அகங்கனிந்தெல்
லோரும் செப்பும் வந்தேமாதரம் அதுதான் சுதந்தரம்
அற்புதச்சுயராஜ்யவெற்றிக்கான மந்திரம்
ஆசி கூறி வாழ்வோம். (தெய்)

69. (பிளேட் பின் பக்கம்)

வந்தேமாதரம் அல்லாஹு அக்பர் மஹாத்மா
காந்திக்கு ஜே ஜே ஜே
சந்தோஷத்துடன் கொண்டாடத்தகும்
சாத்மீகத்துக்கும் ஜே ஜே ஜே
மண்டலமெங்கும் சுயராஜ்ய விதையிட்ட
வள்ளல் திலகர்க்கும் ஜே ஜே ஜே
பண்டிதமோதிலால் நேரு விபின்சந்த்ர
பானர்ஜி பாபுக்கும் ஜே ஜே ஜே
நாகிலம் போற்றும் கவிச்சக்ரவர்த்தி
ரவீந்திர நாதுக்கும் ஜே ஜே ஜே
த்யான சுதந்தரக் கோக்கலே வங்காளச் சிங்கத்துக்கும்
தினம் ஜே ஜே ஜே
அஞ்சாத வூக்கத்தியாகி நௌரோஜிக்கும்
அன்சாரிக்கும் தினம் ஜே ஜே ஜே
மிஞ்சுஞ் சுதந்திரத்தாக வெறிகொண்ட
வீரன் லாலாஜீக்கும் ஜே ஜே ஜே
தாயின் மணிக்கொடி யேந்தும் ஜவஹர்லால்
தம்பதிக்கும் தினம் ஜே ஜே ஜே
மாயப்பிரபஞ்சத்தின் எல்லைப்புறக் காந்தி
வம்சத்துக்கும் தினம் ஜே ஜே ஜே
தாயகமாம் பெண்கள் நாயகமான
ஸரோஜனி தேவிக்கும் ஜே ஜே ஜே
தூயமனத்தோடு தொண்டுபுரியுங்
கஸ்தூரி பாய் அம்மைக்கும் ஜே ஜே ஜே
சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரிக்கும்
தண்டமிழ் தொண்டர்க்கும் ஜே ஜே ஜே
தக்களிக் கத்தர் விருத்தி பெறவே
தழைக்குங் கைராட்டுக்கும் ஜே ஜே ஜே (வந்தே)

70 (ஓடியன் புதிய பிளேட்)

டாக்டர் T.S. சிவராமகிருஷ்ண அய்யர்

ராகம்—காபி.

நாற்பதுவேலி பூமி நடவுநட்டாகவில்லை, நீ
பார்ப்பதுமில்லை பறையா நீ சைவப் பழமது
தின்றுப் பண்ணை
காற்பதுமில்லையுன்னைக் கைவிட மனதுவல்லை
சேர்ப்பதாலாவதில்லை நீ சேரியிற்றுலைந்துபோடா.

---

71 (பிளேட் பின்பக்கம்)

ராகம்—மோஹனம்.

பேராதரிக்கு அடியவர் தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமானென்றும் பேராளா
சேரா நிருதா குலகலகா
சேவற்கொடியாய் திருச்செந்தூர்
தேவா, தேவற் சிறைமீட்ட
செல்வா வென்றுனைப் போற்ற
பாரா மகிழ்ந்து மூலைத் தாயார்
பரவிப் புகழ்ந்து விருப்புடன் என்னப்பா
வா வா வென்றுனைப் போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்

வாராதிருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருக
வளரும் களபக் குரும்பமுலை
வள்ளிக் கணவா வருக.

---

72 (ஓடியன் புதிய பிளேட்)

K. சங்கரி அம்மாள், மதுரை.

ராகம்—அடாணு. தாளம்—மிஸ்ரம்.

பல்லவி.

சரியாய் வந்துபேசவும் நீதரமா
நறுந்தாதவிழ் பூங்குழல் மாதர்தம் வீதியில் (ச)

அநுபல்லவி

அரியாஸ நந்தீச்வரி பாலனென்
னகத்தினிடம் மிகுத்துவரவிருக்
கயினி லெனதிடமிது (ச)

சரணம்.

கொட்டி யளந்தாலும் குருணி பதக்
காமோ கூறுதே வாய்வீச்சு
பாணம் ஒரு கொஞ்சமும் நெஞ்
சினில் அஞ்ஜிக்கை யில்லாமல்
கொழிக்குறுய் பகுபாணம்
மட்டியின் சேதியெல்லா மறிவேன்
நானும் வம்புத் தொடுத்தால் நீ

யெம்மாத்திரம் காணும்
பட்டப் பகலில் மொட்டை கோபுரம்
தானும் பறிபோனதோர் கதை பேசு
வாது போலவே யெனதிட மிது (ச)

---

73 (டாசோபோன் புதிய பிளேட்)

மிஸ். T. S. கமலம், K. P. ஜானகி,

(இரண்டு பெண்களுக்கும் தர்க்கம்)

சுப்பாத்தா;—(வ-ம்) அடியே அலமேலு
அலமேலு:—(வ-ம்) ஏண்டி சுப்பாத்தா
சு:—(வ:—ஒரு சங்கதி,
அ:—என்ன அது?
சு:—அதை

பாட்டு.

வெளியே சொல்ல வெட்கமாகுது எங்க
வீட்டுக்கார மனுஷன்பேச்சை (வெளி)

அ:—சும்மா சொல்லடி சுப்பத்தா
சு:—நான் சுகப்படுவது மெப்பாத்தா
அ:—(வ-ம்) ஏண்டி ! உனக்கென்னடி சுகத்துக்குக் குறைச்சல்·?

(பாட்டு)

ஆடிருக்கையில், மாடிருக்கையில், அடுக்குமெத்தை வீடிருக்கையில், காடிருக்கையில், கரையிருக்கையில், கனத்த தோப்பு தொரவிருக்கையில்,

பாடுபட்டுப் போடும் புருஷன் பலமாக பக்கமிருக்கையில்
விசனம் வந்த விதத்தைச்சொல்லடி அடியே சுப்பத்தா
விபரமாக விளக்கிச்சொல்லடி (விசனம்)

சு—விளக்கிச்சொல்ல வெட்கமாகுது—எங்க
வீட்டுக்கார மனுஷன் பேச்சை (விளக்கி)

அ:—யேண்டி ! சோத்துக்குப் பஞ்சமா ?

சு:—இல்லையே.

அ:—கட்டும் துணிக்குப் பஞ்சமா ?

சு:—இல்லையே.

அ:—காதணி சம்பத்து கைக்குவளே பத்து
மோதிரம், நாகொத்து மூணுசுத்து சுத்து,
முடிக்கும் கூந்தலில் இடிக்கும் ஊசி,
முப்பது பவுனில் அட்டிகை காசி,
மாலைக்கென்னடி மதிப்புக்கென்னடி
காலக்கொடுமை பேசுறுயே கருத்திலுள்ளதை விரித்துச்
சொல்லடி

சு:—விரித்துச் சொல்ல வெட்கமாகுது—எங்க
வீட்டுக்கார மனுஷன் பேச்சை (விரி)

அ:—செப்புக்குடங்களும் சிப்பிலித்தட்டுகள்
சில்லரைச் சாமான்களும் இருக்குதா ?

சு:—இருக்குது.

அ:—கொப்பரையண்டா குழம்புச்சட்டி
வெள்ளிக்கூஜா ஜோயிருக்குதா ?

சு:—இருக்குது.

அ:—அப்புறம் என்னடி பஞ்சம்?

சு:—அதைச்சொல்ல நோகும் நெஞ்சம்.

அ:—சுருக்கமாகச் சும்மாசொல்லடி.

(பாட்டு)

சு:—சொல்லத்தாண்டி வெட்கமாகுது—என்
சொந்த புருஷன் பேச்சை வெளியில் (சொல்)

அ:—வண்டி சோருக்க ஆளுண்டா?

சு:—உண்டு.

சு:—தோட்டம் போய் பார்க்க
பிட்டன் மோட்டார் வண்டி உண்டா?

சு:—உண்டு.

அ:—கேக்கர பண்டம் எல்லாம் வாங்கித்தாராரா?

சு:—தாரா.

அ:—அப்ப எல்லாரைப் போல் தானே நீயும் இருக்கிறே?

சு:—ஆமா இருக்கிறே.

அ:—பின்னென்னடி விசனம் அதைச் சொல்லடி?

சு:—அது சொல்லாத தெப்படி சொல்லுவே.

அ:—சொல்லாத தென்னடி சொல்லடி.

சு:—அதைத்தாண்டி

(பாட்டு)

சொல்ல வெட்கமாயிருக்குது—என்
சொந்தபுருஷன் பேச்சை எடுத்து (சொல்ல)

அ:—தூ, இவ்வளவு தானு! என்னமோ சொல்லப் பேரேண் ணல்ல இருந்தே, என்னடியம்மா நீலி, எருமையே முழுங்குது கோழிண்ண மாதிரி பேச வந்துட்டா, இதுதானு பிரமாதம், எங்கவீட்டு சங்கதியை கேட் டியனு, நீ இப்பவே இந்த உசுரே வுட்டுருவே, என்ன மோ நானிங்கப்போய் பொருத்துகிட்டே இருக்கிறே அப்படியே பொருத்துக்கிட்டிருந்தாலும், எத்தனே நாளேக்கிடி நா பொருத்துகிட்டிருப்பே, வயித்தெரிச் சல் வெளியே கேட்டியினு, வெட்கக்கேடு நா சொல் ரதை நீ கொஞ்சநேரம் கேட்டுப்பாரு அப்புறம் தெரியும்.

---

74 (பிளேட் பின்பக்கம்)

எத்தனே நாளேக்குப் பொருப்பேன்—நான்
இவனுக்குப்போட்டு தாலியறுப்பேன் (எத்)

வசனம்:— அடியே சுப்பாத்தா என் புருஷன் பொல்லாத மனுஷன் போக்கிரிப் பயல், குடிகாரன், போன மூணும் வருஷம் குடிக்க காசில்லேண்ணு:—

(பாட்டு)

பத்துபவுன்நகை முத்தண்ண செட்டியார்
பண்ணிப் போட்டதையுங் கொடுத்தேன்—வேலூர்
பால சுப்ரமண்ய சிலருமேதந்த
பதக்கந்தன்னேயுங் கொடுத்தேன்—முன்பு

செத்துப்போன சிவதீக்ஷதர் போட்டிட்ட
செம்பொற் சறப்பளி கொடுத்தேன்
சீமைக் கமலத்தோடு நாமக்கல் மிட்டாதார்
செவிக்கிட்டதையுங் கொடுத்தேன்—துஷ்டன்
இத்தனை சொத்தையும் வித்துக்குடித்து விட்
டின்றும்—போதாதென் றிங்கென்னை யதட்டுறான் (எ)

வசனம்:—அம்மட்டோட விட்டாலு போன மாசத்து சேதி தெரியாதே உனக்கு, சீட்டாட காசில்லேண்ணு என்னைப்போட்டு மிதிமிதின்னு மிதிச்சி ஒதை ஒதைன்னு ஒதைச்சு அந்த ஒதைக்குப் பயந்துகிட்டு

(பாட்டு)

குப்பஞ்செட்டி மகன் சுப்பையா பிள்ளையும்
கொடுத்த கொப்பரையண்டா—பேரூர்
அப்பணையர் பேரன் ஆண்டியப்பத் தேவர்
அளித்த பித்தளைக்குண்டா—அந்த
திப்பு சுல்தானது திண்டுக்கல் கோட்டையில்
திருடிவந்ததுங்கொண்டா—யென்று
செப்பியறைந்துமென் செல்வத்தை தீர்த்தின்னம்
செலவுக்கேதாவதுண்டா—வென்று
குப்புரத்தள்ளி குயவன் களிமண்ணை
சப்புதல் போலாக தானே மிதிப்பதை (எத்தனை)

வசனம்:—இதெல்லாங்கூட பொருத்தேண்டி என்ன அந்த மாயாவுதாரன் கிருபையாலே கருகப்பிலே கொத்து மாதிரி ஒரு புள்ளே கொடுத்திருக்கிறுன். அதுக்கு

நான் இங்கே சம்பாதித்து பிய் பித்தாளை மணி செய்து போட்டிருந்தேன். அது பொருக்கலேடி, அந்த சண்டாளப்பாவிக்கு:—

(பாட்டு)

கள்ளுக்கடைக்காக பிள்ளைக்கணிந்திட்ட
வெள்ளிக்கொடி காலு தண்டை—தனை
கள்ளத்தனமாக மெள்ளக் கழற்றையில்—கண்டு
கேட்டதற்கு சண்டை—யிட்டு
கொள்ளிக்கட்டைகொண்டு கோபித்துச்
சுட்டதில் குலைந்துபோச்சுதென் கொண்டை—பின்னும்
தள்ளிக் கழுதைபோல் தாக்கியுதைத்ததால்
தகர்ந்து போச்சுதென் மண்டை—இந்த
பள்ளப்பயலுக்கோ எள்ளத்தனை என்மேல்
பக்ஷமில்லை யேதும் மிச்சமில்லை வீட்டில் (எத்தனை)

---

75 (டாசோபோன் புதிய பிளேட்)

கோகிலதொனி, மிஸ்.

T. S. ரமாமணி.

(பாட்டு)

மச்சான் வந்தான் திரும்பி வீட்டுக்கு ஆசையுள்ள (மச்சான்)
பக்ஷமொடு ராத்திரி சாப்பாட்டுக்கு அழகுள்ள (மச்சான்)
உவம் ஆசை அன்புள்ள (மச்சான்)

வசனம்,

மனுஷன் பாருங்கோ சிகப்பிலென்ன
யானையின் சிகப்புதான்
காதென்ன யானைக்காதுதான்
பணத்திலென்ன குறைவா குபேரன்கூட
[தோத்துப்போய் விடுவான்.

பாட்டு.

அச்சிலே ஊத்தி வார்த்ததுபோல அமைந்த கருடன்மூக்கு
அழகான கையை அலங்கரிக்குது ஆறு விரல்கள் ஜோக்கு
மச்சநாக்குக்கார மனுஷன் புத்திக்கு ஜன்னிசீக்கு—ஆனால்
மற்றபடிக்கெல்லாம் ஒற்றுமையான பொருத்தமிருக்குது
டீக்கு போக்கு (மச்சான்)

வசனம்.

படிப்பிலென்ன குறைவா, மிட்டாதாரென்ன, மிராசுதாரென்ன, தண்டல்காரனென்ன, தலையாரியென்ன, இது மாத்திரமா சாயந்திரம் ஆனவுடன் காரைப்போட்டுக்கிட்டு, ஓட்டிக்கிட்டும், ஊதிக்கிட்டும், புர், புர்ரென்றும், பூக், பூக்தென்றும் ஓட்டிக்கிட்டு திரியராறு.

பாட்டு.

எட்டு, டெப்டி, முனிசீப், கலெக்டர், இன்ஸ்பெக்டரின்
[பெண்ணு
எத்தனையோ வலுவுக்கு வந்ததெனில் எதையும் வேண்டா
பாட்டன் காலந்தொட்டு பாத்தும்விடாசொந்தப் [மெண்ணு
பாவை எனை மணம் பண்ணு—மென்று
பத்து மாசகாலம் பட்டினி கிடந்து பாரிலெனைக்கொண்ட
[வீரன் சாமிக்கண்ணு (மச்சான்)

76 (பிளேட் பின் பக்கம்)

பக்ஷமிருக்கவேனும் மன்னனே—என
திச்சை வெருக்கவேண்டாம் சொன்னேனே
பானுபோல் முகனே பணிந்தேன் உமை நான்
நாணம் விட்டுமே கரம் பிடித்தேனே—என்
நாளும் களிப்படைய நினைத்தேனே
இக்ஷணம் உமைநான் அனுப்பிடமனந்தான்
கஷ்டமாகுது என்று வருவீரோ—என
திஷ்டம் போலயிருந்திடுவீரோ (பக்ஷ)

---

77 (டாசோபோன் புதிய பிளேட்)

களளராஜா மிஸ்.

V. M. மீனாக்ஷிசுந்தராம்பாள் & மிஸ்டர் T. D. ரெத்தினப்பா

திருடன்:—தொட்டால் மணக்குதடி குட்டி குட்டி.

சதாரம்:—தோசி தொடாதே போடா எட்டி எட்டி.

திருடன்:—பொட்டு மினுக்குதடி

சதாரம்:—புழுத்து மடிவாயடா.

திருடன்:—கட்டியணையவாடி.

சதாரம்:—காலா‌ ‌ கைப்பேனடா.

திருடன்:—மெட்டிக் காலாலே உ‌‌ ‌‌ பட்ட சுகம் போதும் [போதும்,

சதாரம்:—சண்டிப்பயலே என்ன கேடு கேடு.

திருடன்:—சரிதான் ஒரு தில்லாலே நீ பாடு பாடு.

சதாரம்:—தண்டுமுண்டாகு மோடா.

திருடன்:—மாண்டு விழுவாயடி.

சதாரம்:—மண்டைப் புழு உனக்கு
மாண்டு விட்டதோ மூடா (தொட்டால்)

---

78 (பிளேட் பின் பக்கம்)

விருத்தம்.

கேடியான கேடியப்பா—சென்னை கேக்கே தங்கவேலனப்பா
தங்கவேலு சீடனப்பா-என துகுரு தாசன் பெரியசாமியப்பா
பெரியசாமி பேர்விளங்க டி. வி. அண்ணாமலை முன்னே
[நிற்பார்
அவருடைய சீடனப்பா—நான் அறியாத பாலனப்பா
பாலப்பிராயமப்பா—பங்கமில்லா சிங்கமப்பா
அபயோரே சபையோரே—இந்தசபைதனிலே பாடிவரும்
கள்ள எம். வி. மீனாக்ஷி என்னை ஆசீர்வதிக்க வேண்டுமையா
கனவானே பூமானே சீமானே

பாட்டு.

சென்னையிலே நான் பிறந்து
சீரும் பெற்றேனே ராஜா பேரும் பெற்றேனே
குருவை தேடிகற்றேனே எங்கள் செல்வ
பெரியசாமி கொடுத்த நெம்பர் வில்லையப்பா
டொன்டிசிக்ஸ்காரனப்பா ஜெயில்சட்டை பாருங்கப்பா

ஜெயிலுக்குள்ள போனதினுல் ஜெயக்கொடி கொடுத்தார்
. திருடர்களுக்கு எஜமானை விடுத்தார்—எந்தன் கையில்
கப்பரை கம்பளி கட்டல் தனி வீடைக்கொடுத்தார்
கைதனிலே பிரம்பதைக் கொடுத்தார்—வார்டர்களை
போவென்று தொலேத்தார்.

மறுநாள் காலேயில் வார்டர் வந்துவிட்டு
கதவைத்திறந்தார் எல்லோரையும் கொண்டுவர
வுரைத்தார் கட்ருவை லயனுக வைத்தார்
அதில் ஊத்தியிருக்கும் கஞ்சியைக் குடித்து வேலேக்கு
போகச்சொன்னுர் ஸ்டோரின் நெம்பர் குறித்துக்
வித வித சாமான்களைக் கொடுத்தார் [கொண்டார்
உடனே ஆயிரம் திருடரை நான் உதைமேலே
உதைத்து கொண்டுவந்தேன்—நடையாக
விரட்டி பகதூர்களை உருட்டி (சென்னை)

---

79 (டாசோபோன் புதிய பிளேட்)

கோகிலகான மிஸ்.

T. S. கமலம் பாடியது.

வள்ளியிடம் நாரதர் முருகனின் பெருமையைப் பற்றியும் முருகனேயே கல்யாணம் செய்துகொள்ளும் படியும் கூறல்.

வந்திருக்குது உனக்கு யோக
மாலேப்பொருத்தந்தனக்கு தனக்கு
எனக்குத் தெரியும் (வந்தி)

அந்த குமானின் கைத்தாலி கட்டிக்
கொண்டால் நீ பாக்யசாலி (குமா)

(நாரதர் வசனம்) வள்ளி உன் கலியாணத்திற்கு

பாட்டு:—பாரிஜாத மலர் பந்தல் கீழே பத்மமலர்
பன்னீர் சிந்தல் சிந்தல் (பாரிஜாத)

(வ-ம்) வள்ளி உன் கலியாணத்துக்கு மேளம் எது தெரியுமா?

பாட்டு:—தேவதுந்துபிநாதம் உன்
திருமணத்திலெப்போதும் கீதம் (தேவ)

(வ-ம்) வள்ளி உன் கலியாணத்திற்கு வந்து உன்னையும் மாப்பிள்ளை யாகிய சுப்பிரமணியனையும் கௌரவித்து ஆசீர்வதிக்க வருபவர்கள் யார் தெரியுமா ?

பாட்டு: —முப்பத்து முக்கோடி தேவர்
அரன் முதலயனறி மூவர் மூவர் (முப்)

(வ-ம்) வள்ளி இவர்கள் மட்டுமா ? இன்னும்

பாட்டு:—நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகள்
பாத நடன கந்தர்வ ஸ்திரீகள் ஸரஸிகள் (நாற்)

(வ-ம்) இதுவும் தவிர உன்னேடு இவ்வளவு நேரமாய் இங்கு நின்று பேசிக்கொண்டிருக்கிறேனே!

பாட்டு:—இந்தத் தும்புரு நாரதன் பாடல் தேவசுந்தர
மாதர்கள் ஆடல் ஆடல் (தும்பு)

(வ-ம்) இதெல்லாம் இருக்கட்டும் இன்னொரு விசேஷம் ! உன்மாப்பிள்ளையாகிய சுப்பிரமணியக் கடவுளுக்கு

மைத்துனனான அந்த மன்மதனிருக்கிறனே அவன் மனைவி ஆறைந்து இரண்டு லக்ஷணம் பொருந்திய உனக்கு முறைமையில்

பாட்டு:—நாத்தி ரதி உந்தன் தோழி—யாக
நடித்துசெய்வாள் கேலி ஜோலி (நாத்தி)

(வ-ம்) வள்ளி இதைவிட இன்னும் ஒரு பெரிய மகத்துவ மிகுந்த விஷயமிருக்கிறது அது என்ன தெரியுமா? உன் தாய் தந்தையர்கள் என்னுடைய பெண்ணை உங்கள் குமாரனுக்கு தத்தம் செய்துவிட்டோமென்று நீர் வார்ப்பவர்களல்லவா அப்போது அதை ஆமோதிக்கிறவர்கள் யார் தெரியுமா? அந்த

பாட்டு:—உமையும் சிவனும் நின்று தாரை
உனக்கு வாங்குவார் நன்று (உமை)

(வ-ம்) வள்ளி உனக்கு ஆடை ஆபரணங்கள் தான் சொல்ல வேண்டியதில்லையே இருந்தாலும் இயற்கையிற் கட்டும் சேலையைப்பற்றி மட்டும் சொல்லுகிறேன்—உனக்கு

பாட்டு:—பச்சைப் பீதாம்பரப் பட்டு கட்டி
பவனியே புறப்பட்டுச் சுற்றி (பச்)

(வ-ம்) வள்ளி இவ்வளவெல்லாம் சொன்னேன் இன்னும் அடடா உனக்கு என்னதான் யோகம் வந்துவிட்டது. ஊர்கோலம் எதின்மேல் தெரியுமா?

பாட்டு:—மயில்வாகனத்திலூர்கோலம்—சுப்பிர
மணியருடன் வரும் சிலம் சிலம் (மயில்)

(வ-ம்) வள்ளி ஆமாம் இதெல்லாம் சொல்லியாகிவிட்டது. கல்யாணம் எங்கே தெரியுமா அவையும் சொல்லி விடுகிறேன்.

பாட்டு:—அந்த கழுகுமலையில் கலியாணம்—நடக்கும்
கட்டாயம் பிரமாணம் தோணும் (அந்த)

(வ-ம்) வள்ளி! இந்த கல்யாணத்தின் வைபவத்தைப்பற்றி என் ஒரு நாவால் சொல்லமுடியாது—அதை

பாட்டு:—செப்பத்தரமல்ல மானே—கண்டு
சேவை செய்யவேணும் நானே நானே (செப்)

(வ-ம்) வள்ளி! ஆனால் நீர் ப்ரம்மபுத்திரர். அதாவது ஸரஸ்வதியின மகனுயிருந்தும் கலியாண வைபவத்தைப்பற்றி விரிவாய்ச் சொல்லுகிறீர் என்று நினைக்கலாம். அது அப்படியல்ல யார், யார் எதைச் செய்யவேண்டுமோ அவர்கள் தான் அதைச்செய்ய வேண்டும். அதற்கு தகுந்தகாலம் சமீபத்தில் வந்துவிட்டதால் தடையின்றி முருகனை

---

80 (பிளேட் பின் பக்கம்)

பாட்டு,

கல்யாணம் செய்துக்கோ கல்யாணம் செய்துக்கோ
கட்டாயம் கல்யாணம் செய்துக்கோ

கந்தனுக்கும் உந்தனுக்கும் பொருத்தந்தான்—அவனைக்
கல்யாணம் செய்யாவிட்டால் வருத்தந்தான்

அவன்—சங்கீத சாஸ்திரத்தில் சிறந்தாண்டி
அவன்—சரவணப் பொய்கையில் பிறந்தாண்டி அவனைக் (கல்)
அவன்—பிரமனைச் சிறையிலடைத்தாண்டி
அவன்—பெருத்த அசுரர்களைத் தொலைத்தாண்டி
அவனைக் (கல்)

அவன்—சிஷ்டர்களுக்கு வரம் தருவாண்டி
தமிழ்ச்சிந்து மகிழ முந்தி வருவாண்டி அவனைக் (கல்)

வேலனென்பவன் பெண்ணே யுனக்கு லோலன்தான்
வேண்டாதவர்க்கு அவன் காதல்தான் [அன்பு
முருகனென்பவன் திருமாலின் மருகன்தான்
முத்தமிட்டனைய நல்ல அருகன்தான் அவனைக் (கல்)

---

81 (டாசோபோன் புதிய பிளேட்)

மிஸ்டர் பாகவதர்

வேதநாயக சாஸ்திரியார்.

இயேசுநாதர் சிலுவையிலறையப்பட்ட கொடுமையை
வெகு உருக்கமாக பாடியிருப்பது

இராகம்-பைரவி— தாளம் ஆதி

பல்லவி.

சுவாமிக்கே னிந்தபாடு சண்டாளர் செய்தயீடு

அனுபல்லவி

பூமியிற் தேவனுன புத்ரனும் யேசுராஜா (சு)

சரணங்கள்

மதிமுக மிகவாட வலியமுன் முடிசூட
விசனமே மேனிசாட வெள்ளமாய் ரத்தம் ஓட (சு)

வலியவந்தெனக்காக மரண அவஸ்தையாக
சிலுவை மரத்தில் சாக சிநேகத்தா லுயிர்போக (சு)

மெத்தநான்தேடுங் கோவே வேதநாயகன் பாவே
சித்தம்வைத் தென்னைக் காவே திரியேக எசுதேவே. (சு)

---

82 (பிளேட் பின் பக்கம்)

தொண்டிச்சிந்து

புண்ணியவா னெங்களையும்—கூட்டிக்கொண்டு
போனான் ஒரு ஜெண்டில்மேன் வீட்டிற்கு
பெண்ணரசு துரைசானி மிஸ்டர்ஸ்
பெத்சி எலிசபெத் என்னும் உத்தமத்தாயார்
கர்னல் சிமின்சு ராஜன்—மனைவி இக்
காசினியெல்லாம் புகழும் ராஜ குமரி
வன்னமணித் திருப்புயத்தாள்—செங்கமல
வாசமணக்கும் வதன ரோசமலராள்
அன்னமெனும் சாயநடையாள்—தெய்வ பெண்ணி
திராணியோ கேதுவினி ராணி மங்கையோ
கன்னகையோ ருக்மணியோ—பாஞ்சாலை
கட்டழகியோ சொர்ணக் கட்டித் தங்கமோ
ஜானகியோ ரதிமானோ—அயோத்தி
சந்திரமதி தமிழ்சொரி சிந்தாமணியோ
கோகமிகு ஞான நகையோ—சுந்தரியோ
லக்ஷிமியோ அச்சுதேச உச்சிதத்திருவோ
பூலோக ராக்கினியோ—பஞ்சவர்ண
பொற்குயிலோ சொற்பையிலும் பாபணிப் பெண்ணோ
மேலோக ஊர்வசியோ—காசிவிசா
லாக்ஷியோ காமாக்ஷியோ மீனாக்ஷி நங்கையோ
அல்லி அரசானி மாதோ—திலோத்தமையோ
கொஞ்சிக் கிளியோ அவரஞ்சி மயிலோ

சந்திரன் துலங்கினுப்போல்—மெத்தை வீட்டில்
சற்றே உலாவிக் கற்றேருடன்
சுந்தரமிருந்த வடிவாள்—பேசிப்பேசி
சூட்சமாக நின்றதொரு காட்சிபோல் கண்டோம்
நன்மை பெருகுஞ் சோஞ்சோரா—மடித்திங்கம்
மாளுமிருக்க அவ்வேளை தனிலே
நின்று கொண்டு சலாம்பண்ணினேம்—வெரி யூ கம்
ரீ என்ருர் பிரம் சவுத் வே அம்மாள் என்றேம்
ஜெண்டில் மேன் கம் ஹியர் என்ருர்—வெல் பயிட்
சிட்டௌன் என்ருர் ஒரு ரத்தின சேர் மேல்
வாட் யூ வான்ட் சிங்கர் என்ருர்—ஐ வான்ட் மேன்
யுவர் பாவர் என்றேம் தெம்போம் மென்றேம்
குட்மார்னிங் என்று சொன்னேம்—வென் வில் யூ
கோ வென்ருர் நெக்ஸ்ட் மண்டே அம்மாள் என்றேம்
பேமஸ் பொயெட் யூ வென்ருர்—மே காட்
ப்ளீஸ் யூ வென்றேம் விரவிலத்தே சென்ருர்
சிமின்சு மிஸ்ட்ரெஸ் அம்மாள்—ஹௌவ் ஐ ஸீ
லிங் என்ருர் மே மணி ஸோங் பாடினேம்
இன்காப்பு சட்டைக் கொடுத்தார்—பொற்சரிகை
கெண்டபோட்ட தலைப்பாயில் இரண்டு கொடுத்தார்
பொன் காப்பு மோதிரம் தந்தார்—தங்கப்பூன்
போட்டப் பிரம்பொன்று தந்தார் மேட்டிமையாக
பட்டு லேஞ்சொன்று கொடுத்தார்—வங்காள
கேஸமிகு பசுமையி சால்வையுந் தந்தார்
மிஸ்ட்ரெஸ் எலிச பெத்தம்மாள்—அன்புடனே
மேன்மைமடு திக்கம்மாளும் மோனமுடனே

புத்திரமித்திர சம்பத்தாய்—ஊழிகாலல்
புங்கமுடன் வாழ்ந்திருக்க மங்களஞ் சொல்லி
சந்தோடமாக வாழ்த்தியே—மனி மச்
தாங் யூ அம்மாள் என்று சொல்லி வாங்கிக்கொண்டு தான்
சித்தாக் குலங்கள் கடந்தோம்.

---

83. (டாசோபோன் புதிய பிளேட்)

மாஸ்டர் M. V. கிருஷ்ணப்பா,

கோயம்புத்தூர்.

இராகம்—பிலஹரி
(விருத்தம்)

கண்ணுக்கு நல்ல விருந்தாக வந்த உன்கட்டழகும்
பெண்ணுக்கு பெண் இச்சைகொள்ளும் வக்கனை பேச்சழகும்
மண்ணுக்குள்ளே இணையில்லா சோபித மாமயிலே
எண்ணுக்குள் அடங்காத மையலே உண்டாக்கி இழுக்கு
[தையோ

பாட்டு.

ஆசை ஆனேனே உன்னால் மதிமோசம் போனேனே

மருடம்

அலைநத்திய, உலவுக்கடல், நிலமத்தியில், தலமுற்றிட
ஆ எனை தனியாய்விடுக்கில், அபாயமெத்தவும், மேவினோக்
[திடும்
ஏண்டி அன்னமே, சரணம் செய்தேண்டி செய்தேண்டி
[சொர்ணமே
தினமாவது, எனை நீவிட, மனமோடு உன் கனிவாய்கொடு
(ஆசை)

---

84. (பிளேட் பின் பக்கம்)

இராகம் செஞ்சுருட்டி.

பாக்குமரக் காவினிலே
பத்திரகாளி கோவிலிலே
ஏக்கமுடன் ஆந்தைரெண்டு எட்டி எட்டிபார்க்
ஏமாந்த பேர்க்கெல்லாமிது சாக்ஷி [குதையோ
காமாந்தகாரத்தால் இக்கெதியாச்சு
குண்டாற்று ஓடைக்குள்ளே கொழுப்பான காளைரெண்டு
வண்டிக்காரனில்லாமலே வச்சபாரம் இழுக்குதில்லை
வகைமோசம் வந்ததினால் வந்ததொல்லை
வையகத்தில் வேறிவர்க்கு கெதியுமில்லை
சாக்குசொல்லி போனதொரு சட்டாம்பிள்ளை அதிர்ஷ்டத்
[திலே
தூக்குதூக்கி பேருக்கல்லோ துள்ளுசீட்டு விழுந்ததையோ
தொல்லுலகில் தெய்வச்செயல் நல்லகாலம்
வந்ததுப்படிப்படியே.

---

85. (டாசோபோன் புதிய பிளேட்)

கோகிலகான மிஸ். T. S. கமலம்.

மாட்டுவண்டி ரயிலுவண்டி வகை வகையாய் குதிரைவண்டி
கூட்டுவண்டி யேறிக்கொண்டு கூடிப்போவோம் திருநாள்
ஏலம்மா என் கிளியே உன்னைத்தான் [பார்க்க
வெள்ளி விழுகுமுன்னே அந்த விடியற்காலமாகுமுன்னே
கள்ளர் விரட்டுமுன்னே கடும்பயணம் போவமிப்போ
ஏலம்மா என் கிளியே உன்னைத்தான்

ஆசைக்குகந்த மச்சான் அன்பெனக்கு தந்தமச்சான்
காசுகொடுத்த மச்சான் கைவிடாதே நிச்சயமாய்
சின்னமாடோட்டிக்கொண்டு முன்னேபோற—சின்னபையா

சின்னமாடோட்டிக்கொண்டு
மாட்டேமடக்கையிலே மருவிசுகம் தா நீ வாடா (சின்ன)

மூர்ஸிலமகர் வரும் அருமையான வேடிக்கையை
பார்த்துவருவோம் மச்சான் பாங்குடனே கூடவாரும் (சின்)

---

86. (பிளேட் பின் பக்கம்)

விருத்தம்.

காசுதரும் மாப்பிள்ளையை கைபிடித்து உள்ளழைத்து கனி வாய்பேசி, ஆசைதரும் வேசியரை அவர்பக்கம் நிறுத்தி வைத்து அச்சானென்று, பேசுதற்கு சொல்லிவைத்து பித்த மசு தலைக்கேற்றி பிரியங்காட்டும், தாசிகளின் பாதமதை தவறாது கும்பிடுவேன் டாபர்நானே.

பாட்டு:

மை நே மிஸ் டாபர் எனக்கு
டெய்லி வரும் ஆபர் நயம்
பீமேல் சீபர் நான் பெரியஷாப்கீப்பர்
மைனர் கூட்டங்கோஷ்டி
மாறாது ஜெமீன் பேட்டி
சைனாபஜார் பியூட்டி—அங்கு
தரகு வைப்பேன் காட்டி (மை நேமிஸ்)
கூட்டிக்கொடுக்கும் வேலை—நல்ல
குட்டி மாரன்யாலே—அவர்

பாட்டியபின்னாலே—மஞ்சள்
காகிதம் கைமேலே (மை நேமிஸ்)

தாசிவீடு நேசம் தவிடாது வாசம்
பெரும்மோசமே—சகவாசம்— எனக்கு
மோக்ஷமே கைலாசம் (மை நேமிஸ்)

---

87. (டாசோபோன் புதிய பிளேட்)

சங்கீதபூஷனி மிஸ். **M. R.** ஜானகிபாய்

(கோவலன்)

பல்லவி.

எது வேணுங்கேளடி என் மாதவிமானே
மாதவிமானே உனக் (கெது)

அனுபல்லவி.

இதில் யேதமே யிலாம வீகுவேனடி நானே (எது)

(தொகையரு)

திருவனிதை வளமுடைய பாரதநிலே
மதனிடையில் சின்னாளாக
வருமை யனுகின தகல எளியவர்கள்
மிகவினிது பெறவும்வேண்டி
பருவமிது தவருது பயிர்செய்து
கொண்டெடுத்தப் பருத்திப்பஞ்சை
சிறுவர் குமரிகள் கிழவி விறைவு
கொடுகர மதனில் சுழற்றும் ராட்டை

பாட்டு

நூலில் மோதிலால் தன் நாமம்
யேலவே சிறந்த—கதர்
சேலை நூறு வேணுமாடி
சாலவே யுடுக்க உனக்கு (எது)
வந்தேமாதர மென்றே கூவிடு
சந்தோஷக்காட்சி ஜேய்—ஜேய்—ஜேய்
சேரும்
நன்றே சாதிப்பெண்பால் மாணவர்
கொண்டாடுஞ் சிட்டி—ரவிக்கை (எது)
தக்கிளியால் முருக்கிய நூலில்
வக்கனைத்தாவணிக்கை
உடுமலைப்பதியார் முளக்கிடுதே
நிகர்த்திடு பாவணி படுக்கை (எது)

88. (பிளேட் பின்பக்கம்)

இராகம்—மோஹனம்.

பல்லவி.

மருவிச்சுகங் கொடுக்க வா—மனதிலன்பு
பெருகத் தினஞ்சுகிக்க வா (மரு)

அநுபல்லவி.

திருமொய்த்த முகில் வர்க்கங்
தவள் வெற்பின் நிலைபெற்ற
முருகப்பறு முருகப்ப
பழனிப்பதி கந்தப்ப (மரு)

சரணம்.

கள்ளவிருங்கடப்பங் கமழ் மணித் தோள
கானக்குறத்தி தேவயானை மணாளா
தெள்ளுதமிழ்ச் சரப சிடர் சொல்லாளா
சிறுமி யெனை மணந்த செல்வக்கண்ணாளா (மரு)
மாவுலவு குயி லிசை தருவனமதில்
மாருத நிலவி வரு நிலவதனிடை
மாதுரதிமத ன மதிருவருமென
மார்பினெடு மார்புரள மாலையிது (மரு)
காமலகிரி ம
கா கடினமிது
காலை மனமெழு
காயுருகுதுகு
காசிறிது காவிலினி காதலொடு (மரு)
தாமதஞ்செய்வ
தால் வரும்பழி
தானிலங்குமு
தாசினம்பல
தாங்கிடவு மாம்புவியில் தாங்களெனை (மரு)

---

89 (ஓடியன் புதிய பிளேட்)

T.M. ஜெகதாம்பாள் & M.B. தங்கம்

M. R. சுப்பிரமணிய முதலியார் &

M. B. தங்கம்

பிரஹலாதன் கயாது தர்க்கம்.

கயாது :—

வேண்டாமிப்பிடிவாதம்
விடுவாய்பாலா
தூண்டா மணிவிளக்கே
சொன்னேனிப்போதுனக்கே.

என் அருமைப் பிரஹலாதா ! பிடிவாதத்தை விட்டுவிடு இனியாவது உன் தந்தையின் நாமத்தைச் சொல்லி என்னைக் காபாற்றடா கண்மணி.

பிரஹலாதன் :—

தாயே நீ யறியாததோ—பகவான் செய்தி
தானேது முணராததோ
மாய பிரபஞ்சத்துள்ளே வாழ்வைச் சதமாய் நம்பும்.
தீய தந்தைபேர் சொல்லச் சேருமே வம்புந்துன்பும்.
(தாயே)

அம்மா செத்துச் செத்துப் பிறக்கும் ஜீவாத்மாவைத் துதிப்பதாலென்ன பலன். அந்த ஹரிபரந்தாமனையன்றி வேறொருவரையும் என் நாவால் சொல்லேன் அம்மா.

கயாது :—

என்னமதி கொண்டாயடா—தந்தை பேர் சொன்னால்
ஏது துன்பங்கண்டாயடா
அன்னையும் பிதாவுமே முன்னறி தெய்வமென்று
சொன்ன முதியோர் வார்த்தை பின்னமாகாது கின்று
என்ன

அடே பாலா, உன் தந்தைக்கு எதிர் பேசியதாலன்றோ இப்போது உன்னைக் கொல்லும்படியாக கட்டளையிட்டார். ஐயோ! அமிர்தம் கொடுத்து வளர்த்த கையால் விஷங் கொடுத்து கொல்லவும் நேர்ந்ததே! விஷங் கொடுக்காவிடிலோ பதிவார்த்தையை மீறிய பாவியாவேனே! என் மனம் கொஞ்சமும் துணியவில்லையே. ஏ தெய்வமே! இதற்க்கென்ன செய்வேன்! ஹா!!

(கயாது மூர்ச்சித்து விழுகிருள்).

பிரஹலாதன்:—

தாயும் மூர்ச்சையானுள். இதுவே தக்கசமயம்.
ஹரியே எனக்குத் தாய் தந்தை அல்லாதுலகில்
யாரைக்குறித்து நான் தொழுவேன்
பிறிய மிகுந்ததாயும் பேச்சின்றி மூர்ச்சையானுள்
பரிவுடன் விஷப்பாலை பானம் செய்குறேன். (ஹரி)

பல கொடுந்தண்டனைகளினின்றும் என்னைக் காப்பாற்றிய ஹே பரந்தாமா! இதோ விஷப்பாலை அருந்துகிறேன். இப்போதும் நீயே கதி!

(பாலை அருந்திவிட்டு பாத்திரத்தை எறிகிருன்.)

கயாது :—

(மூர்ச்சை தெளிந்தெழுந்து)

ஒஹோ இப்பாத்திரமென்ன இப்படி கவிழ்ந்து கிடக்கிறதே. பாலகன் விஷத்தை பானஞ்செய்து விட்டான் போலிருக்கிறது. குழந்தைக்கு யாதொரு தீங்கும் காணவில்லை. அதோ சவுக்கியமாகத்தானிருக்கிருன்.

எல்லாம் பகவத் ஸங்கல்பமே.
உத்தம பக்தியாலே விஷத்தையுண்டு
உயிர் நீ பிழைத்தாய் முன்னாலே. (உத்தம)

---

90 (பிளேட் பின் பக்கம்)

பிரஹலாதன் ஹிரண்யன் தர்க்கம்.

பிரஹலாதன்:—

நாராயண நாராயண நாராயண நாராயண
நாராயண நாராயண நாராயண நமஸ்தே.

ஹிரண்யன்:—

அடே பிரஹலாதா அந்த நாராயணன் என்ற ஹரி
எங்கிருக்கிறான்—நீ
ஏற்றிப் போற்றிச் சாற்றும் ஹரி (எங்)
என் குலத்துக் குப் பகைவன்
என்றிருக்கும் அந்தப் பயல் (எங்)

பிரஹலாதன்:—

எங்குமிருப்பான்—அவன்
இல்லாத இடம் வேறில்லை (எங்கு)
இந்தவுலகந்தரங்கம் அந்தரம் பாதாளலோகம் (எங்கு)
காட்டிலும் மேட்டிலும்—கருதும் நிலையிலும்
கலையிலும் மலையிலும்—தொழிலும் நிலையிலும்
நாட்டிலும் வீட்டிலும்—சபையின் நடுவிலும்
நத்துமவர் பக்தியிலும்—உத்தமர்கள் புத்தியிலும் (எங்கு)
தந்தையே, சர்வலோக ரக்ஷகனாகிய அந்த நாராயணன்
எங்கும் வியாபித்திருப்பான். இது சத்தியம்,

ஹிரண்யன்:—

இங்கிருப்பானா-நீ, எந்த நேரம் போற்றும் ஹரி (இங்கி)
இந்த தூணிலிருப்பானா ?

பிரஹலாதன் :—

இங்குமிருப்பான்-எங்குமே நிறைந்த மாயன் (இங்கு)
பிதாவே இத்தூணிலிமிருப்பார், துரும்பிலுமிருப்பார்.
சந்தேகமுண்டானால் சோதித்...ரும.

ஹிரண்யன் :—

இந்தக் கம்பத்திலவன் இல்லையேவின்று
எதிர்த்த யானையைச் சிங்கம் கொல்லல் போற்கொன்று
சிந்தூரத்தங் குடித்தூன் தசையையுந் தின்று
திக்கெட்டும் புகழ்பரப்பச் சித்தத்தில்நினைத்தேனிச்
காட்டுவாயடா நீ கைகுவித்த தெய்வமிங்கே (கா...
கம்பத்திலிருப்பானென்று
கும்பிட்டுச் சொன்னாயே இன்று (காட்டு)
அடே ! இதோ இந்தத்தூணை எட்டி உதைக்கிறேன் பார்
(ஹிரண்யன் தூணை உதைத்தல்,
தூண் வெடித்து நரசிம்ம ரூபம் தோன்றி கர்ச்சித்தல்)

ஹிரண்யன் :—

ஆ ! ஈதென்ன ஆச்சரியம். உடல் நரனாகவும் தலை
சிங்கமாகவும் உள்ள ஓர் ஸ்வரூபம் தோன்றுகிறதே !

பிரஹலாதன்:—

தந்தையே ! இவர் தான் என்னை ரக்ஷிக்கும் லோகநாயகன்.

நாராயண நாராயண
நாராயண நாராயண
நாராயண நாராயண
நாராயண நமஸ்தே.

---

91. (டாசோபோன் புதிய பிளேட்)

ராஜா. எம். ஜி. தண்டபாணி நாயுடு.

இராகம் நவரச கானடா — தாளம் ஆதி,

பல்லவி.

பாரதகண்ட தேசீய ஞானமே
பரவவே செய்வோமினி (பாரத)

அநுபல்லவி.

ஒருவளீன்ற சுதர் நாம் உணர்வில்லாமலே
திரியும் தீமைதனை திரும்பவே செய்திட (பாரத)

சரணம்,

அடிமை வாழ்வினி விடுநிதானமா
ரிடு பொன்னன்புமிஞ்சு இயல்புசாலவும்
உடலே நாராயணன் சொல்லுமுபாய
முடிவுரை மனமே முயற்சியிங்ஙனமே (பாரத)

---

92. (பிளேட் பின்யக்கம்)

இராகம் சாவேரி. — தாளம் ஆதி.

பல்லவி.

சந்தேகம் நம்தேகம் இதை
சதமென உலகினில் நிதமக
மும் பொலிந்தல் (சந்)

மகுடம்,

சகலநிதியும் தனதினமெனை புகல்வதும்
சுகமினிதென அகமதில் மகிழ்வதும் (சங்)

அநுபல்லவி.

விந்துரு கொண்டுவந்த விஷமலக்கேணி
ஐந்து பூதக்காணி ஆட்சிமேவுகிற சூட்சதோணி

சரணம்.

நீரின் குமிழியென நிலை யற்றதேகம்
நீலமரவிவரும் போது நாமேகம்
நாடு இருந்தாலும் ஏகம்—மெத்தை
வீடு இருந்தாலுமேகம்—நமக்கு
நஞ்சையிருந்தாலுமேகம்—தோப்பு
புஞ்சையிருந்தாலுமேகம்—பண
ரொக்கமிருந்தாலுமேகம்—மனையாள்
பக்கமிருந்தாலுமேகம்
தாயிருந்தாலும் ஏகம்—பெற்ற
சேயிருந்தாலும் ஏகம், ஏகம், ஏகம்
நீலமரவி வரும்போது நாமேகம்
பாரிலிதையறியா பாத்தையர் மோகம்
பகல்கின வாகுமே பாரனுபோகம்
பண்டு ஊழ்வினையால் பெண்டுபிள்ளையென
விண்டுமே மனது கொண்டிடாது இனி
தண்டபாணிகவி கண்டுபாருலகில்
பார்த்திடில் மனம் தேர்த்திடில் (சங்)

93. (டாசோபோன் புதிய பிளேட்)

சங்கீத வித்வான்

K. S. வெங்கட்ராமய்யர்,

குன்னக்குடி.

இராகம் ஆனந்த பைரவி—தாளம் ஆதி.

பல்லவி.

நீகே தெலியகபோதே—ராம
நேநேமிஜேயுத்ஸுரா—ஸ்ரீராம (நீகே)

அனுபல்லவி.

லோகாதாருடை வேயுநகாலோகி
ப்ராஞ்வலிம்சுஜாலி (நீகே)

சரணம்.

எந்தெந்து ஜபிஸின எந்தெந்து பலுகின
எந்தெந்து பூஜிம்சின எந்தெந்து ஸேவிம்சின
அந்தந்து நீவங் தோசுடந்துரு நீபாதார
விந்தமுலுத்யானிம் சினதெந்துகநித் தியாகராஜஸந்நுத(நீகே)

---

50 பாகம் முற்றிற்று.

இதன் தொடர்ச்சி 100 பாகம் அவசியம்
வாங்கிபார்க்கவும்.

N. S. MARIAPPA ACHARI,

South Chitrai Street, MADURA.

அமெரிக்கன் பல்கட்டுகிற ஆபீஸ்.



நான் அமெரிக்கா இங்கிலாந்திலிருந்து பற்களை வரவழைத்து தலைமுறை தத்துவமாய் இதே தொழிலை செய்துவருவதோடும் சுயபற்களைப் போலவும், முகவசீகரத்தைத்தரக்கூடியதாகவும், ரப்பர் பிளேட்டுகளினாலும், தங்க பிளேட்டுகளினாலும் பூரா செட்டாய் இருந்தாலும் சில்லரையாயிருந்தாலும் தாமதமின்றி உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும். சொந்த பற்களை மிஷினால் சுத்தம் செய்யப்படும். தங்கப் பல், அமெரிக்கன் பல், தந்தப் பல் இவைகளினாலும் பல் கட்டப்படும்.



கிராம்போன்களும் அதைச் சேர்ந்த சில்லரை ரிப்பேர் சாமான்களும், ஊசிகளும் விற்கக்கூடும்.

சார்ஜ் விபரம் நேரில்.

N.S. மாரியப்ப ஆச்சாரி,

கிராமபோன் &
பல்கட்டுகிற ஆபீஸ்,
தெற்குச்சித்திரை வீதி,

மதுரை.

94 (டாசோபோன் புதிய பிளேட்)

சங்கீத கேசரி

மாஸ்டர் S. D. சுப்பையா

இராகம் தோடி. தாளம் ஆதி.

பல்லவி.

தாமதமென்ன மையல் தாளேனடி நீ சும்மா
சாஹஸமொடு பேச தயவுடனென்னை மருவிட இனுங் (தாம)

அநுபல்லவி.

சா ர மீ தாம (தாம)

சரஸகு ணவுசித தருணியி தூஸமயம் (தாம)

தழுவணையு மொழுகு மிலகு மலாணை தனில்
தகமையுட னிருவரினி தொடுகுலவ (தாம)

சரணம்.

பாமினிவு நயனலலித பிதழுறு
பானமது பருக வுதவி யதுமிக
பாவியிலை யெனிலிதில் வருமொரு பழி
பாதகமு முனையணுகு முறுதிகினை
பாவிமதனெடு பாணமதுடவில்
பாயுத தனினு பாதைதவிர் கிருபா
பரணி சுபரு வரதிபுலவர் பகரறிய
பாமஹிமை சூடிய க பாலயதி (தாமத)

காமினியே நிலவு காய விரவுதென்றல்
கானுரை புலிபோலே—மென்மேலே
க்ஷேம மகலச்செய்யும் தீமை விலகத்தயை
சிறிதிலேயோ யென்பாலேபெண்பாலே
கோமகன் கொங்கு முத்துச்சாமி சீடர் சொல்லாலே
குளிர்ந்தயிரு செவியமைந்தவனே திரு
மணங் கொள்வெனடி சினந்து விழுகிறாய்
அணங்கே இது—முறையா
பிணங்குவது—சரியா
இணங்கிடவு—முடியாத மதமென்னடி
நீ சும்மா—ஸாகஸமொடு (தாமத)

95 (ஓடியன் புதிய பிளேட்)

காயக சிகாமணி

எல். முத்தையா பாகவதர்.

ராகம் - பரஜு. தாளம் - ஆதி.

பல்லவி.

பக்ஷம் இருக்கவேணும் போய்வாரேன் ஸாமி. (பக்ஷ)

அனுபல்லவி.

இக்ஷணமே என்னைக்கூட்டி வரும்படி
எனக்காள் வந்திருக்குது என் செய்வேன் ஸாமி. (பக்ஷ)

சரணம்.

புருஷனே கடுங்கோபி வருஷமொன்றாச்சுது
புகல் சும்மா சொல்வது தர்மமோ ஸாமி. (பக்ஷ)

கூடிக்கலந்த இன்பம் நாடியுருக்கு மென்னை
கொஞ்சமும் மறந்திடக்கூடாது ஸாமி. (பக்ஷ)

96. (பிளேட் பின்பக்கம்)

ராகம் - பியாக். தாளம் - ரூபகம்.

பல்லவி.

வாரும் வாரும் துரையே இந்த ஊர்தானு உமக்கு. (வாரும்)

அனுபல்லவி.

கார்த்திகேய கார்த்திகைப் பிறைபோலே காணுதே. (வாரும்)

சரணம்

பிரஞ்சு காசு மாலே வயிரம் பிந்துஸரம் புல்லாக்கு வாங்கி
தாரேனென்று சென்றுறு மாதம் சரியாய் ஆச்சுதே. ()
அது இது தரேனென்று சவுடால் அடித்து கலவி
முடித்துச் சென்றபின்
இதுவரைக்கும் தான் சென்றுதோ என்னை
ஏறிட்டு ஏன் காணும் பார்க்கிறீர். (வாரும்)

97. (ஓடியன் புதிய பிளேட்)

சங்கீதவித்வான்

B. S. ராஜா அய்யங்கார் மைசூர்.

ராகம் ராகமாலிகை.

கண்டு கண்டு நீ என்ன கைவிடுவரோ கிருஷ்ணு
புண்டரீகாக்ஷ புருஷோத்தம

பந்துகளு எனகில்ல பதுகினரி
ஸுகவில்ல நிந்தேயலி நொந்தெனே
நீரஜாக்ஷ பந்து பளகவு நீனே
தந்தை தாயுயு நீனே எந்தெந்திகு நின்ன
நம்பிதெனோ ஸ்ரீ பதியே (கண்டு)

க்ஷண ஒந்து யுகவாகி திருணகிந்த கடையாகி
எணிஸ ளளவல்ல ஈ பவத வெதயஸந
காதிமுனி வந்த்ய வனஜஸம்பவ ஜனக
பணிசாயி ப்ரஹ்லாத கொலித ஸ்ரீபதியே (கண்டு)

பக்தவத்ஸல நெம்பபிருது பொத்தமேலே
பக்த ராதீனனாகிர பெடவே முக்தி தாயகனே
நீ ஹொன்னூரு புரவாஸ சக்த குருபுரந்தர
விடல ஸ்ரீ கிருஷ்ண (கண்டு)

98. (ஓடியன் புதிய பிளேட்)

எம். மோகனும்பாள், மதரூஸ்.

ராகம் - இந்துஸ்தான் அஸாவேரி.

ஆண்டவன் தெரிசனமே வடபழனி ஆண்டவன் தரிசனமே

அநுபல்லவி.

வேண்டிடும் அன்பர் வினையகன்றோட
ஆண்டிவேடம் பூண்டமர்ந்தாய் செந்தில் குழந்தை. (ஆ)

சரணம்.

சுற்றிலும் சோலை உற்றதிருமாலை
பெற்ற அயனைச் சிரம் குட்டி சிறையிட்ட. (ஆ)

தொண்டர்கள்கூட தோகைமயிலாட
மண்டலத்தோர் புகழ்பாட மால் மருகன். (ஆ)
வள்ளியின் ஈசா மாதுமகிழ் நேசா
புள்ளி மயிலேறும் உல்லாசன் முருகேசன். (ஆ)

99. (பிளேட் பின்பக்கம்)

ராகம் - செஞ்சுருட்டி.

கஞ்சிமாநகர் தனில் செஞ்சுடராய் நின்ற
ஆதியே பரஞ்சோதியே குணவாரியே
வெகு ரஞ்சிதமாகவே பஞ்சப்ரேதாசனம்
யேறுவாய் அருள் கூறுவாய்
குஞ்சரத்தோன்மிக கொஞ்சிவிளையாடும்
தேவியே என்றன் ஆவியே சுகவாரியே
உனைத் தஞ்சமென்ற யென்னை அஞ்சலென்றே வந்து
போற்றுவாய் கவலை ஆற்றுவாய்
செம்பொன் மயிலேறி வந்த முருகேசன் அன்னையே
மறைக் கன்னியே யெந்தன் அன்னையே
உனை நம்புமடியாருக் கின்பமுடனருள்
கூட்டுவாய் நலம் காட்டுவாய்

100. (ஓடியன் புதிய பிளேட்)

சரஸ்வதி ஸ்டோர்ஸ்

டிராமடிக் க்ரூப் பாகம் 1-2

கோபிகள்:—

நவநீத சோர கிருஷ்ணா—எங்கள்
நாணம்பார்த்து, மானங்காப்பாயே (நவ)

கிருஷ்ணன்:—

யுவராஜ போர்கவதிகாள்
ஓடோடிவாரும் கரைமேல் (யுவ)

ஓலமிடுவ தேது அதனைச்
சீலமுடனே கூறும் விரைவில்
கோபிகளான கண்மணிகாள்—என்முன்
கொஞ்சிக் கொஞ்சிக் கொஞ்சும் ரமணிகாள் (கோ)

ஏ கோபிகாள், என் ஜலத்திலிருந்து ஓலமிடுகிறீர்கள்.

கோபிகள்:—

ஏ கிருஷ்ணு, உனக்கேனிந்த அக்ரமம், நதிக்கரையில் தானு விளையாடுவது.

ஆடையெல்லாமே தாடா
அவமாகு தேடா
ஆருமிதனைக் கேலி புரிவார்
ஜாலமுழுதும் ஞாலமறியும் (நவ)

தென்னுலிராமன்:—

நேற்றுவுன் தாயார் முன்னே
நிந்தனை சொல்லி நின்றார் (நேற்று)

வாங்கடி வாங்க, வந்து சிக்கிக்கிட்டிங்களா? அடே கிருஷ்ணு கொடுக்காதேடா புடவையை, ஞாபகமிருக்குதா ? (நேற்று)

கிருஷணன்:—

என் தாயாரிடத்திலா கோல் சொன்னீர்கள், இருங்கடி இருங்க சேலே வேண்டுமானல், எல்லோரும் இடுப்பளவு

ஜலத்துக்கு வந்து இரண்டு கைகளையும் சிரமீதுவைத்து என்னைக் கும்பிட்டால் தான் தருவேன்.

நிஜமாராமா அறிவேனறிவேன்

கோபிகாள், இருகை கூப்பி வருவீரானால்
நானினி ஆடைதருவேன் கோபிகாள்
நானினி ஆடைதருவேன் நான்
நம்பும்படியாய்க் கும்பிடுபோடுவீரே.

ராமன் :—

அடே கிருஷ்ணா அதோபாரு, அவள் ஒரு கையிட்டுக் கும்பிட்றதே, ரெண்டு கையிட்டும் கும்பிடச் சொல்லு.

கோபிகள்:—

ஆடையில்லாமல் எப்படிக் கண்ணா கும்பிடுவது. உனக்கே வெட்கமிராதா?

கும்பிடமாட்டோம் கண்ணா
கோகுலமாமணி வண்ணா
கொடடா ஆடை விடடாகேலி
அடடா ராமா எடடாசேலை (நவ)

101. (பிளேட் பின் பக்கம்)

பாகம் 2

கோபிகள்:—

ஜால விநோத வைகுந்தா இதுசரியோ
நந்தகோபா முகுந்தா. (ஜால)

கிருஷ்ணன்:—

அதெல்லாம் இனி நடவாது
நீரைவிட்டே யெழுந்தென்
நேரில்வா சேலைவாங்க.

கோபிகள்:—

நீதிதானு

கிருஷ்ணன்:—

ப்ரீதிதானே

கோபிகள்:—

சோதியாதே சோதைபாலா

ராமன்:—

பேஷ் நல்ல சமயமே கிருஷ்ணு—இந்தப்
பெண்களுக்கே வேணுந் தண்டனை

கிருஷ்ணு கொடுத்துடாதே புடவையை, நமது வேடிக்கையெல்லாம் இப்பத்தானிருக்கிறது? (கோபிகளைப்பார்த்து) வாங்கடி வாங்க, இங்கே நடந்ததையெல்லாம் உங்க வீட்டிலே போய்ச் சொல்றேன்.

கோபிகள்:—

அடே சொல்லாதேடா ராமா, நீயுமா சேர்ந்து கூத்தாடுகிறாய்

பரிகாசமாமோ ராமா
பாடாய்ப் படுத்தலாமா
பாராய் கிருஷ்ணு தாராய் சேலை
நேராய் வாரோ மேதான் சீராய் (நவ)

கிருஷ்ணன் :—

பாங்கிகள் திருவாணமாக—என்னைப்
பார்த்துச் சேவித்தாலே தருவேன்.

கோபிகள் :—

(ஒருவருக்கொருவர்) எண்டி தெரியாமலன்றோ அகப்பட்டுக்
கொண்டோம் : ஆமாண்டி ஆமாம்

தாங்காது எங்கள் மானம்
தண்டனை போதுங் த்யானம்
தாள்வணங்கினோ மிணங்கியே
யிறங்கிவாமகிழ்ந்து (ஜால)

கிருஷ்ணன் :—

தந்தேன் தந்தேன் சேலை—இனி என்
தாயாரிடம் போய்க் கோளே சொல்லாதீர்

கோபிகள் :—

இல்லை இல்லை

ராமன் :—

ஆமடா ஆமடா கிருஷ்ணா—இவர்கள்
அகம்பாவந் தானடியோடே போச்சே.
ஹ ஹா ஹ ஹா (ஆமடா)

---

102. (ஓடியன் புதிய பிளேட்)

எம்.எஸ்.ஸ்ரீனிவாசன் மாறுமதுரை.

ஆர்மோன்யம்.

ராகம் - செஞ்சுருட்டி—தாளம் - ஏகம்,

அறிதறிது மானிடராய் அவனிதனிலே பிறப்பது
அறிதாயிருந்தும் மாந்தர் அறிவிழிந்து குடிப்பதையா

ஆகாது இந்தியர்க்குப் பத்தியமே
ஆனல் நான் சொல்வதொரு சத்தியமே
கொலை களவு காமத்திற்கும் குடிப்பதுதான் காரணமே
அலைகடலில் துரும்புபோல அலையும் மாந்தர் உணரணுமே
(ஆகாது)
காந்தி மகான் கட்டளையை கைப்பிடித்தே நாம் நடந்தால்
காந்தி பையன் சீனிவாசன் சாத்திய தமிழதுபோல்(ஆகாது)

---

103. (பிளேட் பின் பக்கம்)

ராகம் - பியாக். தாளம் - ஆதி.

பல்லவி.

கோருவோம் ஸ்ரீமன் நாருயணம் பஜே குவலயமெல்லாம்-நாம்

அனுபல்லவி.

கோமளசீதாரமணு
கோதண்ட ரகுபதியெனவே (கோ)
நாருயணம் பஜே லக்ஷ்மணம் பஜே ஹனுமான் பஜே
கோவர்தனகிரி குடைபிடி மதுரித
பூமா மகிமா புனித சுகிர்தனென (கோ)

சரணம்.

நாரணு நினை நம்பிடுமடியவர்
பூரணு வெனவே யனுதினமுந்
தோரணக்கவி ஸ்ரீநிவாஸனின்
தோத்திரமே தமிழ் க்ஷேத்திரமே யெனக்
(கோ)

104. (ஓடியன் புதிய பிளேட்)

எஸ். எஸ். விஸ்வநாத தாஸ்.

ஹரிச்சந்திரா.

ஆதியிலும் பறையனல்ல ஜாதியிலும் பறையனல்ல
நீதியிலும் பறையனல்ல பாதியிலே பறையனானேனே
—தேவாதி தேவ.

வெள்ளிக் காசு கேட்பவர்க்கு
அள்ளிக் கையால் நான் கொடுத்தேன்
கொள்ளிக் காசு வாங்கலானேனே—தேவாதிதேவ
கொள்ளிக் காசு வாங்கலானேனே.
பேய்க்குறிய பந்தங்கொண்டு
பிணத்திற்கால் பணத்துண்டு
வாய்க்கரிசி வாங்கலானேனே—தேவாதி தேவ
வாய்க்கரிசி வாங்கலானேனே. (ஆதி)

---

105. (பிளேட் பின் பக்கம்)

பல்லவி.

தேசாபிமானிகளே உண்மைத் தெய்வீக ஞானிகளே—தமிழ்
பாஷாபிமானிகளே ஜென்ம பாரத த்யானிகளே. (தே)

அநுபல்லவி.

தீதற்றிடு தாதாபாய் மந்திரமீ துற்றிடுமோதார தந்திர (தே)

திலகப் பிரபுக்கருமை பணிவிடை வுலகிற் புரி
நற்பெருமைக் கென்னதடை (தே)

ஜெகத்தில் மிகுத்த சுகத்தை வகித்த
மகத்துவ மனைத்தும் பரிக்கச் சகித்த (தே)

தியாகனும் யூகமே நிரம்பிய யோகனும் கோகலே விரும்பிய (தே)

தொகையறு.

ஆசாரம் தனைவிடுத்து ஆங்கிலத்தைப் படித்தோம்
அயல் நாட்டு நடையுடையை ஆசையுடன் பிடித்தோம்
கூசாமல் மதுவகையை குடல் நிறையக் குடித்தோம்
கொடியருடன் கைகோர்த்து குளிர் நிலவில் நடித்தோம்
நேசானுகூல தெய்வ சிந்தனையை தடுத்தோம்
நெஞ்சார பொய்யுரைத்து நீதிவம்பை எதிர்த்தோம்
காசாசையால் பல துர்காரியங்கள் முடித்தோம்
கடையரென்றே நம்மில் சிலரைக் கடிந்து விழுந்தடித் [தோம்

பாட்டு.

கண்டதே காக்ஷி கொண்டதே கோலம்
என்றிது நாள் களித்தோமே
கைத்தொழில் வர்த்தகம் யுத்தமுறை
துறைகாணுமல் விழித்தோமே. (தே)

---

106. (ஹட்ஸன்வ்ஸ் புதிய பிளேட்)

மிஸ்டர் முத்துவிநாயகம் பிள்ளை

& பார்ட்டி திருநெல்வேலி.

(வில்லுப் பாட்டு).

இராமாயணம்—விருத்தம்.

நாடியபொருள் கைகூடும் ஞானமும்புகழும் உண்டாம்
வீடியல் வெளியதாக்கும் மேரிய கமலநோக்கும்
நீடியஅரக்கர்சேனை நீறுப்பட்டழியமான் கைகூடிய
சிலையில் ராமன் தோள்வலி கூறுவோர்க்கு

வசனம்.

தசரதச்சக்ரவர்த்தியானவர் அருபதினுயிரம் வருடங்களாக அயோத்தி ராஜ்யத்தை அரசாக்ஷி செய்துவந்தார். அவர் அரசாக்ஷியில் ராஜ்யம் நன்ருயிருந்தாலும் அவருக்குப்புத்திர சந்தான மென்பதே கிடையாது. அவ்விதமாக இருக்கையில் ஒருநாள் தன்னுடைய குல குருவாகிய வசிஷ்டரிடத்தில் தெரிவித்தார். அண்ணவரோ புத்திர காமேஷ்டியாகம்செய்ய வேண்டுமென்ருர். உடனே புத்திரகாமேஷ்டியாகம் செய்தார். எவ்விதமாக என்ருல் :

பாட்டு.

யக்ஞசாலே ஓமகுண்டம்-எட்டெழுத்தும் ஆறெழுத்தும்
ஈஸ்வரன் பஞ்சாக்ஷரத்தை உன்னியே-ஈஸ்வரன் பஞ்சா
க்ஷரத்தை உன்னியே
உன்னியே சமுதை, தர்ப்பை, ஹோம திரவியங்களும்
ஒன்பது நவக்கிரகமும் உச்சமாய்-ஒன்பது
கட்டிவைத்த யாகசாலே காண்பவர்க்கே கோடிலக்ஷம்
கண்ணுயிரம் படைத்தவன் உண்மையாய்-கண்ணுயிரம்
உண்மை யக்ஞ ஓமகுண்டம் ஓராயிரம்
ஓமத்தில் ஆமைப்பலகை மீதிலே வெண்மையாய் இருந்துக்
[கொண்டு
வாய்த்த கலேக்கோட்டுமுனி-வாளன்புத்திர வேள்வி
வளர்த்தார்.
வளர்த்தார் குரு வசிஷ்டர் மாதவப் புரோகிதரும்
மகா கணபதியைக் கன்னியில் நிதானித்தார்
கணபதியைக் கன்னியில் நிதானித்தார்
பாலர் பிறந்தனரே அரசர்க்கு பாலர் பிறந்தனரே.

107. (ஓடியன் புதிய பிளேட்)

T. P. தனலக்ஷ்மி, மதுரை.

தூக்குத் தூக்கி.

கல்வி கற்று தான் கொடுத்து கண்டபடி பேச வந்தீர்
நல்லதல்லவே உமக்கு சட்டாம் பிள்ளையே
நாங்களுமைச் சேரோமையா.

வேலிபயிர் கார்க்குமென்ற வேதமதைத்தான் படித்தும்
கேலி செய்யலாகுமோ தான் சட்டாம் பிள்ளையே
கேடுமக்கு நேருமின்றே

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிவந்த எங்கள் மனம்
புண்ணாக நோகுதையா சட்டாம் பிள்ளையே
போதுமுந்தன் நேசமினி.

காம வெறியே பிடித்த காமுகவிகாறப் பேயே
தாமதிக்காதேகுவாயே சட்டாம்பிள்ளையே
தந்தை கண்டால் துன்புறுவாய். (கல்வி)

---

108. (பிளேட் பின் பக்கம்)

வள்ளி.

வேள்வி மலைச்சாரலிலே ஏ வேடுவா
வெட்டுப்பட்டு போகாதேடா
வீறமிங்கு செல்லாது செல்லாது
காரியமே பொல்லாது பொல்லாது (வே)

கோடி காலம் தவமிருந்து ஏ வேடுவா
கொக்காகப் பறந்திட்டாலும்
கொஞ்சு மொழி வள்ளி வரப்போரதில்லை
கொட்டாவியிட்டு மயங்காதே தொல்லை. (வே)

கோமகள் எல்லையிலே ஏ வேடுவா
குளிர்ந்த தினைக் கொல்லையிலே
மாமன் மகன் போல வந்து வீசுகிறாய்
மானங்கெட்ட வார்த்தை பல பேசுகிறாய். (வே)

ஜாதிக்குள்ளே நீ யொருவன் ஏ வேடுவா
சட்ட திட்டம் மீறினவன்
தப்பி உயிர் தான் பிழைக்க தேடிடடா
தாண்டாதே மீண்டும் சொன்னேன் கேளிதடா ()

---

109 டாசோபோன் புதிய பிளேட்
கவிப்பிரசங்கம்

D. A. ஆர்தர் பாகவதர்

திருரத்தம்.

1. கல்வாரியிலே தோணும் சிலுவையிலே
கசிந்தோடும் ஊற்றில் ஸ்நானம் பண்ணும்
கசிந்தோடும் ஊற்றில் ஸ்நானம பண்ணும்
கசடறவொளி தருமென எண்ணும்

2. ஜென்ம கர்மப்பிணி தனையகற்றும்
சுகமான தீர்த்தமிது காணும்
சுகமான தீர்த்தமிது காணும்
மகத்தான இன்பமதில் தோணும்

3. தோம்தீமெனவே திரியேகனின் பால்
திருநாம கீர்த்தனங்கள் பாடும்
திருநாம கீர்த்தனங்கள் பாடும்
திருசேறினோன் பதத்தைத்தேடும்

4. பக்தியுடன் பரன் றிருவடியில்
பறை சாற்று மார்தர் கவிகண்டு
பறை பாற்று மார்தர் கவிகண்டு
புவியெங்கு மாற்றிடுவீர் தொண்டு.

---

110 (பிளேட் பின்பக்கம்)

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

பல்லவி.

குருசினில் மரிக்க வந்தோனே நாமும்
கருதிய எருசக்கோனே தேனே
குன்றுமெய்த்தேவ குமாரனைக்
கொண்டாடிடுவோம் அதிதீரனை (குரு)
கோதிலா மெய்யாரண நாயகன்
மீதிலே மெஞ் ஞாபக மீறுதே (குரு)
கிறுஸ்தெனும் ஜெயவீர மனோகரன்
சிறப்புடன் கல்வாரியில் மேவிய (குரு)
கண்கவருமெழில் சுந்தரரூபனைப்
பண்மலர் கொண்டெதிர் சென்றழைப்போம் ஜெயக் (குரு)

அனுபல்லவி.

பாருளோர் புகழும் பரமதயாளன்
பரிந்துகூறி நல்வரங்களளிப்பதை
விரும்பியே துதி செய்திடு வோம் ஜெயக் (குரு)

சரணம்.

யாருக்குமி ரங்கு மனந்தகல்யாணன்
ஆருதர்கனுதினந் தெரிசனந்தரும்
வாவெனக்கருள் சுரந்தரவணைத்திடும். (குரு)

---

111. (கொலம்பியா புதிய பிளேட்)

கோமளம் சகோதரிகள்

பல்லவி.

அபுரூபமான பெண்—உமக்கேர்க்கவே நடப்பாள்
அழைத்துவரட்டுமோ—ஸ்வாமி.

அனுபல்லவி.

சுபகரமாகிய—கலவிக்கதிபதியா
ஸ்வாமி வேதாசல பொன்மரை படைத்த சுகமா. (அபுரூப)

சரணங்கள்.

(1) மங்கையவள் திரண்டு—மாதமோ மூவிரண்டு
வாயிதழோ கல்கண்டு—கொங்கை மல்லிகை செண்டு
கூர்விழி கருவண்டு—கூடினல்
சிரஞ்சீவி குபேர பாக்யங்கள் உண்டு குற்ற
மில்லாதவன்—உத்தமஜாதி
உற்றது பேசுவாள்—மற்றது ஜோதி. (அபுரூப)

(2) சந்திரமுக பிரகாசி—சரஸத்தில் உல்லாசி
தயவாயும் நம்மிடம் பேசி—தானிருப்பாள் நேசி
இந்திராணிக்கிவள் வாசி—இவளோ வெகு மகராசி
என்ன பல பலமீனு—இருபேர்க்கும் ஏகராசி
இங்கிதமாகவே சங்கீதம் பாடுவாள்
பங்கமில்லாததிங்—நங்கையின் அங்கம். (அபுரூப)

112. (பிளேட் பின் பக்கம்)

(3) செந்திலமர்ந்த—வடிவேலோனே
எனவந்தருள் கந்தா—உமை பாலனே
அரிமருகா, முருகா—அறுமுக சுறபுகழ் செந்திலமர்ந்த
தந்தைதாயும் நீயே—சிந்தை தவிற்பாயே
சுந்தரி நின்சேயே—அதிவிநோதா
உனதுபாதம் தரவொணாதா பரமநாதா செந்திலமர்ந்த, (அபு)

---

113. (ஓடியன் புதிய பிளேட்)

எம். சாரதாம்பாள், தஞ்சாவூர்.

போன மச்சான் திரும்பி வந்தான் [illegible]த்தோடே
என்னை விட்டு போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே
(போன மச்சான்)
கைதாளொடிந்திங்கே னுழைந்தான்
கோமணத்தோடே - சண்டையிட்டு. (போன மச்சான்)

ஆனமட்டும் சொல்லிப் பார்த்து
ஆணை வைத்து தடுத்து பார்த்து
பூனையை கண்ட எலிபோல்
புதுசான கோபங்கொண்டு. (போன மச்சான்)

காரிக் காரித் துப்பினாலும்
காலாலெட்டி உதைத்திட்டாலும்
வேறிடம் சொல்லாதிருக்கும
வெட்கமுள்ளார் வீட்டைவிட்டு. (போன மச்சான்)

எப்போவோ நான் இரண்டு மாதம்
இவரை விட்டு சின்ன தம்பி

மச்சானோடு சென்றேனென்று
வருத்தமாக என்னை விட்டு, (போன மச்சான்)

கந்தசாமி மாமனோடு
கை கோர்த்து கடற்கரைக்கு
முந்தாநாள் சென்றதற்கு
முகம் வாடி முணுமுணுத்து, (போன மச்சான்)

---

114. (ஹட்ஸன்ஸ் புதிய பிளேட்)

மிஸ்டர் நடராஜ தம்பிரான் & கோஷ்டி

காவடிப் பாட்டு.

அடிமைக்கிரங்கியருள் — முருகையா
ஆதரிப்பார் ஆருமில்லை — முருகையா
படியிலுள்ளோர் பரவும் — முருகையா
பண்ணவர்சூழ் பழனிமலை — முருகையா
பக்திமார்க்க மறியேன் — முருகையா
பண்ணும் விதமறியேன் — முருகையா
சித்தம் வைத்தென்தனைபாராய் — முருகையா
சித்தர்தொழும் பழனிமலை — முருகையா
வெங்கலக் கோட்டைதன்னில் — முருகையா
வேம்புத்த லிருக்கின்றேன் — முருகையா
தேரைய்யா தைபூசம் — முருகையா
தேசத்தார் கொண்டாட — முருகையா
ஹரஹரா முருகையா யென்றசப்தம் முருகையா

---

115. (பிளேட் பின் பக்கம்)

சங்கு பாட்டு,

ஹர ஹரா முருகையா

அனுதினமும் முருகையா யான்மறவேன்
சிவசிவ முருகையா யென்றசப்தம்
சிந்தையிலே முருகையா யான்மறவேன்
கண்டிகையா முருகைய்யா — உந்தன் நாடு
கதிர்காமம் முருகையா — உந்தன் தேசம்
பழனி அய்யா முருகையா — உந்தன் நாடு
பாரமலே முருகையா — உந்தன் தேசம்
மலைக்கு நல்ல முருகையா — மலைநடுவே
மலையாள முருகையா — உனக்கு தேசம்
நாகமலை முருகையா — உனக்கு தோகைமலை
நாலுதிக்கும் முருகையா — உனக்கு தணிகைமலை.

---

116. (ஹட்ஸன்ஸ் புதிய பிளேட்)

மிஸ்டர் V.M. பெரியசாமி (மதுரூஸ்)

(சென்னையில் வந்தது மோசம்),

சென்னையிலே வந்ததய்யா மோசம்
யெந்த சந்துபொந்தும் பம்பாய் ஷோ
பெருத்ததய்யா வாசம்
ஷோக்குள்ளே சென்று விட்டாலே நாசம்
சூது மொச்சக்கொட்டை ஆட்டமென
போட்டாரே பிளாட் பாரம்
வளையம் போடும் ஆட்டமொன்றுகூட

வகையாய் புட்டாசேலைமாட்டி
வோடுது பங்தோட்டம்
இன்னம் ராட்டினங் களாடுதுபார் ஆட்டம்
இதற்கேற்ற யெலைக்டிரிலையிட்டு எரியிதுபார் வாட்டம்
பீர்பிராந்தி ஷாப்புகளும் உள்ளே இன்னும்
பீடிசிகரட்டு சோடாவெத்திலைபாக் பீடா
நாடககச்சேரி டான்சுண்டாச்சு இதில்
நாலாவித மேளதாள பேண்டுகளுண்டாச்சு
கள்ளருக் கொண்டாட்டமாய் போச்சு
மண்டுகள் கண்டபடி பாட்டுபாடி முட்டிகிழிக்கலாச்சு
போட்டிகளும் அதிகமாய்போச்சு சில
பொரம்போக்கு சோதாவுக்கே சவாலொன்று
குடிஜனங்கள் கண்ணீர்விடலாச்சு அவர்கள்
கொண்டுபோர காசுபணம் பணம் பம்பாய் ஷோவுக்
பெண்டாட்டி பிள்ளைகளெல்லாம் பட்னி [காச்சு
யேழை மக்களெல்லாம் வாடுகிறார் கண்ணீர்விட்டு
இதை செப்பிவந்தேன் செல்வபெரியசாமி [குண்ணி
இது எப்பொழிதொழியுமென வேண்டுகிறேனே சாமி
இதைக்கேட்ட யெந்தன் கனவான்கள்மாரே
இந்த ஷோவின் ஆசைவிட்டு நீங்கள் நல்லாயிருப்பீரே.

---

117. (கொலம்பியா புதிய பிளேட்)

மிஸ். ராதாபாய்.

ராகம் : முகாரி

பல்லவி,

உலகினை ஈன்றவளே உனை மறந்து (உலகி)
உழன்றிடலாமோம்மா.

பலகலை கற்றுணர்ந்த—பாலரை ஈன்றவளே
நலமுடன் சுதந்திரம்—நல்கிட வேணுந்தாயே.

அனுபல்லவி.

ராமன் பிறந்தநாடு—ஞானம் சிறந்தநாடு
தானம் வழங்கும்நாடு—தவங்கள் புரியும்நாடு. (உலகி)

சரணங்கள்.

1. பாரோர்கள் போற்றுகின்ற—பாரத நாடதிலே
தீராத தொல்லையுற்று—தியங்கிடலாமோம்மா.
கைத்தொழிலை மறந்தோம்—கயவர் நிலைக்காளாக
அடிமைத் தொழில்பழகி—ஆண்மை இழந்துவிட்டோம். ()

2. அலைகடல் துரும்புபோல்—அலைகிறோம் பாரதர்கள்
நிலையினைக் காணவேண்டி—நின்னை சரணடைந்தோம்
கண்ணே எம் கண்மணியே—காணர்க் கரியவளே
எண்ணமுன் மீதுகொண்டே—ஏங்கிடலாமோம்மா (உலகி)

3. அன்னையே தள்ளிவிடில் இனி—யாரை சரண்புகுவோம்
உன்னர்க் கரியவளே—ஓம் சக்தி என்பவளே.

---

118. (பிளேட் பின் பக்கம்)

ராகம் : மோகனம். தாளம் : ஆதி.

பல்லவி

பாலி கருணை நிலவு பொழிவதன மதியானொரு (கபா)

அனுபல்லவி.

ஆபால கோபாலம்—ஆழிசூழ் தலத்தவரும்
பூபாலரும் அஷ்டத்திக்கு பாலரும் போற்றும் அற்புத (கபா)

சரணங்கள்.

1. மதிபுனல் அறவுகொன்றை தும்பை அருகுன்
மத்தைபுனே மாசடையான்
விதிதலைமாலை மார்பன் உரித்த கரியின்
வெம்புலியின் தோலுடையான் (கபா)

2. அதிர முழங்கும் உடுக்கையும் திரிசூலமும்
அங்கியும் குரங்கமும் இலங்கிடு கையான்
த்யுதிமி குதிருமேனி முழுதும் சாம்பல்
துலங்க எதிர்மங்கையர் மனங்கவர்சு ஜதன்மோஹன
(கபாலி)

---

119. (கொலம்பியா புதிய பிளேட்)

மிஸ் D. K. பட்டம்மாள்.

(ராகமாலிகா)

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தம்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன
சேயர்க ளிருந்தென்ன குருவாய் இருந்தென்ன
சீடர்க ளிருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனேலே
ஒன்றைக் கண்டுதடுக்க
உதவுமோ இதுவெல்லாம் சந்தையுற வென்றுதாம்
உன்னிரு பதம் பிடித்தேன்

யார்மீது வுன்மன மிருந்தாலு முன்கடைக்
கண்பார்வை யதுபோதுமே
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

---

120. (ஓடியன் புதிய பிளேட் & டாக்கீஸ்)

வி. ஏ. செல்லப்பா, (வாசுதேவநல்லூர்)

ராகம்-சிந்து சிந்து பைரவி. தாளம்-ஆதி.

பல்லவி.

அனித்ய சரீரம் மிதாதரவா
மிதாதரவாய் இதாதரவா. (அனித்ய)

அனுபல்லவி.

பனித்துளி போல்விந்து நாதம் திமிர்ந்தது
பகரும் ச்ரோணித மீது கலந்தது
கனிந்துவரும் தாய் கருவாய் யுருகொண்டது
கருமவினையால் புவிகாண பிறந்தது. (அனித்ய)

சரணம்.

அலைகள் போலும் ஜனன மரணமானது
அளவிளாத பிணிகள் மேவும் ஊனிது
நினையில்லாத நினைவில் ஓடிநோவது
நிலரும் மாயவாழ்வில் ஓய்வில்லாதது. (அனித்ய)

---

121 (பிளேட் பின் பக்கம்)

ராகம்—காம்போஜி.

விருத்தம்,

ஆலோலமென்று குரல்காட்டி இந்த அரும்புனத்தே
சேலோடுகண்ணை தினமீதுவைக்கும் இந்த சிங்காரி தன்னை
மாலோடு காதல் மனையாளாகக்கொண்டு மகிழ்ந்திருந்தால்
பாலோடுசேர்ந்த பழம்போல் இனித்திடும் பண்புரவே,

122 (ஓடியன் புதிய பிளேட்)

சங்கீத வித்வான்

T. ராமாநுஜ அய்யங்கார்,

(அரியக்குடி)

தாயுமான ஸ்வாமிகள் பாடல்.

அமீர்கல்யாணி.

அவனன்றி யோரணுவும் அசையாதெனும் பெரிய
ஆப்தமொழி யொன்று கண்டால்
அரிவாவதேது சில அரியாமை எது இவை
அரிந்தார்கள் அரியார்களார்

சஹானு.

மௌனமோ டிருந்ததார் என்போ லுடம்பெலாம்
வாயார் பிதற்றுமவரார்
மனதெனவு ஒருமாயை எங்கே இருந்துவரும்
வன்மையோ டிரக்கமெங்கே

தன்யாசி.

புவனம் படைப்பதென் கர்த்தவ்ய மெவ்விடம்
பூதபேதங்க ளெவ்விடம்
பொய்மெய்த மகிதமேல் வருநன்மை தீமையொடு
யொரு பொராமையு மெவ்விடம்

சாவேரி.

எவர் சிரியர் யெவர் பெரியர் எவர் உரவர் எவர் பகைஞர்
யாது முனை யன்றியுண்டோ
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும் நிறைந்த பொருளே.

123 (ஓடியன் புதிய பிளேட்)

மாஸ்டர் சங்கரலிங்கம், கள்ளிடக்குரிச்சி.

ராகம்—காம்போஜி தாளம்—ஆதி.

பல்லவி.

தாஸி வீட்டிற்கு வந்தால் காசு வேணுமென்பதை
யோஜியாமல் என் வந்ீரய்யா. (தாஸி)

அநுபல்லவி.

வாஸவன் பணி முருகேசனே விசுவாஸம் வாாமல் பேசுறீர்
இதுநடவாது இலவசமேது அதுபலியாது வாமுடியாது. (தாஸி)

சாணம்.

வந்தாலென் செலவுக்கு இந்தா வென்றுங்கள் கையால்
தந்தால் தான் ஸ்நேகிதம் எங்களுக்குள்ளது
கந்தா எங்கள் தொழில் ரொக்கந்தானறிந்து சும்மா தந்தால் தான்
வாச்சொல்லி நித்யம் அலட்டுகிறீர் காரியம் வசமல்லபோம்
உமது சமாசார முழுதும் யாருமறிவார்கள். (தாஸி)

கட்டும் உங்கள் திலகப் பொட்டும் தேவரீர் வாய்
மிரட்டும் கண்டாலெங்கள் பெட்டிப் பணமாகுமா
செட்டுப் பண்ணலாமென்று ஒட்டு வித்தை காட்டுகிறீர்
கிட்டுமோ உமக்கிந்தக் கொட்டுக்கும் பேயங்கடாது
சிக்கு நகைப்பு முடிப்பை அவிழ்த்திட எத்தனை அக்குசை
வித்தை படிக்கிறீர். (தாஸி)

---

124 (பிளேட் பின் பக்கம்)

ராகம்—அமீர் கல்யாணி. தாளம்—ஆதி.

பல்லவி.

நமக்கினி யமபயமேது இல்லை
நடராஜனிருக்கும்போது (நமக்)

அனுபல்லவி.

மார்க்கண்டர்க்காக மறலியை யுதைத்திட்ட
மான் வழுவேந்தும் மஹா தேவனிருக்க. (நமக்)

சரணம்.

இரணியனால் வெறிகொண்ட நரஸிம்மனைத்
தரணியில் ரக்ஷித்த சங்கரனிருக்க. (நமக்)

---

125. (கொலம்பியா புதிய ரிக்கார்டு)

ஸ்ரீமான் S. G. கிட்டப்பா,

இராக மாலிகை

பல்லவி,

எனக்கேதாரமா வாயடி
இனியேதுணை லேசில் விடேனடி (என)

அநுபல்லவி.

உனக்கேயெந்தன் மனமுருகுதடி
உள்ளத்தில்காம வெள்ளம்பெருகுது (என)

சரணம்.

நினைத்தோடி வந்த என்னை
நீ வெறுக்க லாமோதானே
மனத்தினிலின்னம் வர்மமுமேனோ
வஞ்சி நீ செய்வது வஞ்சகந்தானே (என)

(பிளேட் பின் பக்கம்.)

காந்தர்வக் கல்யாணமே
கைக்கொள்ள ப்ரமாதமே
கன்னல்பரவும்மொழி சாந்தகுணகரி நீ
சஞ்சல விஞ்சித நெஞ்சக (என)

ரஞ்சித மோகன லாவண்யமாதே
ரமிக்கத்தகுந்த சமயமுமீதே
அஞ்சுகபாஸ்கரன் தண்டமிழ்ப்போதே (என)

(ஷை யார் பாடியது)

இராகம்-கல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி.

சரவணபவா தமியேனையாள் (சா)

அநுபல்லவி

பரமகருணை கானுனையலால்
பாரிற்பாரியான பரமனுதலால் (சா)

சரணம்.

இகபரசுகம் தனை விரும்பினேன்
இதனால் எதுவும் பெருது வெம்பினேன்
ஜெகம்புகழும் நின் சேவடி நம்பினேன்
செய்வதுஒன்றும் தேங் கிடாதியம்பினேன் (சா)

126. (கொலம்பியா புதிய பிளேட்)

மிஸ் K. B. சுந்தராம்பாள்

கொடுமுடி.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

செந்தூர் வேலாண்டி ஆண்டி திருச் (செ)
சேவை க்ஷேமந்தாண்டி ஆண்டி திருச் (செ)

அநுபல்லவி.

பந்த பாசங் கடந்த
பாவலர் முன்னும் வந்த
பரமகுருபரன் அறுமுகசரவணன்
திருமலை முருகனும் முறையொடுயெதிர்வரும் (செ)

சரணங்கள்.

கந்தன் கடன்பன் குகனை
கன்னி வள்ளியின் லோலன்
கற்பனை கற்பக சாமிசொல் லற்புத
பொற்புய முற்றிடு சாமிதமிழ்ப்பதி (செ)

---

127. (கொலம்பியா பிளேட்)

மிஸ் K. B. சுந்தராம்பாள்.

இராகம்-இந்துஸ்தான் தோடி—தாளம்-ஆதி.

பல்லவி.

பண்டித மோதிலால் நேரை பரிகொடுத்தோமே

அநுபல்லவி,

பரிகொடுத்தோமே நெஞ்சம் பாதவித்தோமே (பண்)

சரணம்.

எண்டிசை யெல்லாம் புகழ்ந்த
ஏழைகளுக் கன்புதந்த
பண்டிதரே உமது தேகம் பரகதியாச்சே
பரகதியாச்சே எங்கள் பலமெல்லாம் போச்சே

தொகையரு.

ஆயிரத்தி யெண்ணூற்றி அறுபத்து ஓராண்டு
மேமாதம் அவதரித்து
தூயகுண க்ஷத்திரிய துரைராஜ சிங்கமெங்கும்
துணையாய் நின்று
தாயகத்தில் அன்புருகும் தவயோகிகாந்திமகான்
தான் தவிக்க
மாயஉடல் மறந்ததையோ மகனுன ஜவகர்லால்
மனங்கொதிக் – கொதிக்க

பாட்டு.

தேவர்களும் உமையழைத்து
சிங்காதனத்தில் வைத்து
பூவுலகம் வாழ்வை வென்ற புண்ணியமூர்த்தி
புண்ணியமூர்த்தி எங்கும் புகழுதே கீர்த்தி (ப)
பிப்ரவரி தேதி யாறில்
பிரபுமோகா உமது திரேகம்
எப்படிலக்ஷ்மண புரியில் இறந்த மாயமோ
இறந்த மாயமோ தர்மம் தீர்த்த தியாகமோ (ப)

---

128. (கொலம்பியா புதிய பிளேட்)

S. V. சுப்பையா பாகவதர்.

இராகம்-அமீர்கல்யாணி—தாளம்.

பல்லவி.

மலர் சூடி விளையாட வருவாயே (மல)

அனுபல்லவி.

பலவித லீலைசெய்து பருவகாலத்தில் கூடி
பாங்கு பெருகவே கொண்டாடும் (மல)

சரணம்.

நலமிகும் தென்றலாளே
நண்புகழ் மன்றலாளே
நம்பும் பாஸ்கரன் தமிழ் நாமே இனி (மல)

129. (கொலம்பியா புதிய பிளேட்)

ஷியார் பாடியது

பல்லவி.

ஸன்யாசம் ஸன்மார்க்கம்
ஸமரஸ மொடு பலவித புகழே (சன்)

அநுபல்லவி.

பொன்னூர் பயன்பெறு என்னூர் தவயோகம்
பொன்னூர் தவநிலே தன்னுலறியுஞ் (சன்)

சரணங்கள்.

பொன்னெளிர் பூஷண பொக்கிஷ வாழ்க்கை
பொருந்துமிவையெலாம் நிலையிலா ஆக்கை
சொன்னலடியவர் பெரும்புகழ் வாக்கை
சுதந்திரமெனக் கொளுஞ்சித்தர்கள் சேர்க்கை (சன்)

அகஸ்தியர் ஞானமென்னும் நூலனுசாரம்
அதையறிந்தாலல்ல ஜென்மவிசாரம்
இகத்தினிலானந்தம் தருமுபகாரம்
இதையறிந்தான் மஸ்தான் சாயபுகீதம் (சன்)

130. (கொலம்பியா புதிய பிளேட்)

மாஸ்டர் S. G. கிட்டப்பா,

செங்கோட்டை.

பல்லவி.

காமி ஸத்யபாமா கதவைத்திறவாய்
திறவாய்
திறவாய் யெந்தன்காமி (சத்)

அநுபல்லவி.

பூமி புகழ் மேயன் புழுதி யடைந்த வாயன்
நேமி வசந்தன் நானடி
நானடி
நானடி யெந்தன்காமி (சத்)

அக்ரமங்கள் செய்திடும் அசுரரை யழித்திடும்
சக்ரதானும் நானடி
நானடி
நானடி யெந்தன் காமி (சத்)

(ஷை பிளேட் பின்புறம்.)

தாமதமேன் தாளை நீ திறவாய்
ததி நீ தயவாய் (தாம)

கோமள மயிலினமே கொஞ்சிடுமடவனமே
கூறுஞாயமோ தினமேகுணவதி
கோதையழகி அதிவினய கோ
லமதிசய கோ மதிகுண கோ
தையழகியே தாம

131. (கொலம்பியா பிளேட்)

S. G. கிட்டப்பா செங்கோட்டை.

இராகம்-காபி தாளம் ஆதி.

பல்லவி:

தசரத ராஜ குமாரா அலங்காரா
அதிதீரா சுகுமாரா
இசை பெருகிய ரகுவம்ச சிலாக்யம்
எழில்பிதுர்வாக்ய பரி பாலன யோக்யம்
வசை தவிர் அதனுல் வரும் பெரும் பாக்யம்
உன் மனதினில் உணர் தம்பி பரதா
சுகபுனிதா சத்யவிரதா அதிதீரா (தச)

கோசலைமகிழும் விநோதா குணசீதாரகுநாதாஅதிதீரா
தாய்செய்த வினையினுல் தமியன் நொந்தேனே
தாரணியிகழும் தன்மை யடைந்தேனே
நேயமோ டுமதடி தனைப்பனிந்தேனே
நிச்சயமிது ததி வாரும்
துயர்தீரும் அருள்தாரும் காரும் (கோ)

132 (கொலம்பியா புதிய பிளேட்)

K. B. சுந்தராம்பாள் பாடியது

இராகம் கல்யாணி, தாளம் ஆதி.

பல்லவி.

ஆயலோட்டும் பெண்ணே பெண்ணே
ஆயலோட்டும்பெண்ணே

அனுபல்லவி.

ஆவியே ஆருயிர் சஞ்சீவியே மன்மதனெனும்
பாவியே மலர்க்கணையைத் தூவியேவாட்டுரான் கண்ணே (ஆ)

சரணங்கள்.

பாயுந் தென்றலாலே அடி பாயுந்தென்றலாலே
பாயுந் தென்றலாலே பாங்கியே
மெத்தவும் மணம் சோங்கியே
பங்கய மோகனுங்கியே மனத்துயர மோங்கியே
மலர்க்கணையை தூவியே வாட்டுரான் கண்ணே (ஆ)

---

133 (கொலம்பியா புதிய பிளேட்)

ஷையார் பாடியது

இராகம் பியாகடை தாளம் ஆதி.

பல்லவி.

வெட்டுண்ட கைகள் வேதனையாகி
மிகவுதிரம் வழிந்தோட வழிதோனேனே (வெ)

அநுபல்லவி.

தண்டுண்ட காட்டில் தவிக்கிறேனையோ
தலை விதியோ தெய்வமே (வெ)

ஆதரிப்பாரை யாரையுங் காணும்
அபலையாகினேன் தெய்வமே
விதிவழியல்லால் சிற்றன்னையாலே
ஜெனித்ததல்லோ தெய்வமே (வெ)

---

137 (ஷை பிளேட் பின்புறம்)

இராகம் பியாக்—தாளம் ஆதி

கண்ணிகள்

நாரதரே யம் மாதவள் தனைட்
யாதுரை செய்வீர் நீதனு காமல் (நா)
சுந்தரி யாளின் தந்தையும் யாரோ
அந்த நங்கைசெய்யுந் தொழில் யாதோ (நா)
சென்றிடிலேயான் கொண்டிடுமோகம்
கண்டறி வாளோ விண்டிடு வீரே (நா)

---

138. (கொலம்பியா பிளேட்)

S. V. சுப்பையா பாகவதர்

விருத்தம்

முன்னம் ஒரு சன்யாசி வடிவாக்கி
சுபத்திரையை மணம் முடித்து வைத்தாய்
பின்னுமொரு அல்லியெனும் பேராளைப் பேணித்தந்தாய்
என்னருமை மைத்துனனே மைத்துனனே.

(ஷை பிளேட் பின்புறம்)

கௌனமிசேயாரா—என்ற இந்துஸ்தான் மெட்டு

பல்லவி

பவளக்கொடியின் மீதிலாசை மறப்பேனோ நானே
அந்த பவளக்கொடி

தொகையறு

வானோர் புகழ்ந்திடும் மாமதுர வசனியே
என் வன்னமயிலே என் பருவப்பெண்ணே நீ
வாது செய்யாது என்னைப் பாதுகாப்பாய்
வன்னப்பருவ இன்ப மயிலே (தே)

---

140. (கொலம்பியா பிளேட்)

மாஸ்டர் S. G. கிட்டப்பா, செங்கோட்டை

பல்லவி

மாதரசே மயிலே ஆசை (மா)

அநுபல்லவி

மௌனமர்குமோ குயிலே மயிலே ஆசை (மா)

நீ தயவு புரிவாய் இனி
நீ தயவு புரிவாய் எந்தன்
நேரிலோயே வருவாயே ஆஹா (மா)

மா மலராளேனயே முனம்
மா மலராளேனயே பொல்லா
மா மலராளேனயே அம்
மதவேள் செயு
வேதனையே சகியேன் எந்தன்
கோமளமே மகிழ்வாய் எனைக்
குலவச் சமயம் வருவாயே ஆசை (மா)

---

141. (கொலம்பியா புதிய பிளேட்)

ஷையார் பாடியது.

இராகம் தாளம் ஆதி

பல்லவி

கோபிகள் கொஞ்சும் ரமணா
கோபால கிருஷ்ணா (கோ)

அநுபல்லவி

உபாய நீ பாடி புலம்ப வைத்தாலெப்படி.
பொறுப்பேனுன் திருப்பொன்னடி
உன் திருவடி போற்றுவேன் துயர் (கோ)

சரணம்

சரப்பளியாலே கட்டி தானேதன் தாளேயெட்டி
தரப்பிடித்தப் பாம்பைவிட்டு
கண்ணமூர்த்தி (கோ)

---

142. (கொலம்பியா பிளேட்)

மிஸ். K. B. சுந்தராம்பாள்.

பண்டித மோதிலால் நேரை' என்ற மெட்டு.

பல்லவி

தாயிடத்தில் அன்பிலாத ஜென்மமும்வீணே பெற்றத்
தாயிடத்தில் அன்பிலாத ஜென்மமும் வீணே உற்றத்
தாயிடத்தில் அன்பிலாத ஜென்மமும்வீணே
பத்துமாதஞ் சுமந்து பெற்ற தாயி

மகுடங்கள்

தாய்நாட்டிலன்பிலார்க்குத் தர்மமேது கர்மமேது
பேயாய்த்திரிபவர்க்குப் பெயரேது-சொந்த (தா)

மானிலத்துமக்க ளெல்லாம்
மகிழ்வுடனே யொன்றுகூடி
தானேயறிந்து தாயைப் போற்றுவீரே அருமைத் (தா)

ஒற்றுமை யில்லாத நீங்கள்
உலகத்தை யாளுவீரோ
கற்றுமறியாத மூடக் கசடர்களே பெருமைத் (தா)

தலைவர் வசனங்கேட்டு
சாந்தமுட னவர்க்குட்பட்டு
கலவரங்கள் செய்வதேனோ காரியம் விட்டு
ஜாதிமதத் தாலே சண்டை
தானேயிடும் பேதையரே
ஜாதியேது மதங்களேது சாற்றுவீரே! (தா)

---

143. (ஷை பிளேட் பின்புறம்)

இராகம்-காபி தாளம் ஆதி

கண்ணிகள்.

கன்னி வள்ளியே உந்தன்
காதலால் நானலைந்தேன்
கட்டியணைத்தொரு முத்தம் தருவாயானல்
கைதொழுவேன் நித்தம்

முத்தி தரும்பல சித்தர்க ளாயினும்
இத்தகியே இத முற்றிடு நீதகை (கன்)

---

144. S. V. சுப்பையா பாகவதர்

'சிவதீக்ஷாபாரு' என்ற மெட்டு

பல்லவி

யுவதி ஸ்ரீமதி மா ரதியே ஓ (யுவ)

அநுபல்லவி

பூஷணிபூண்ட பெண்மணி தருணி

சரணம்

புவன சிங்கார மகா
பூவையே நாயகியே
பூதகி பெற்ற புனித வனித யுவதி
அவனியில் பாஸ்கரனின்
ஆனந்த கீதம் பாடி
ஆசை கொண்டேனே அன்னமே மனமே

---

145. (டை பிளேட் பின்புறம்)

விருத்தம்.

பஞ்சத்தால் வடமதுரை பாழாக
தங்கை யேழு பாலரோடு

கொஞ்சத்தில் இல்லை அவள்படும்பாடு
கோலமதாய்
நெஞ்சத்துக் கனவு கண்டேன்
கிளியே மானே

பாட்டு

இங்கு வந்த தங்கை எங்கே எங்கே
அவள் எங்கே
எங்கே
அவள் பஞ்சத்தால் மிகமெலிந்து
யேழு பாலரோடு இங்குவந்த
தங்கை எங்கே
அவள் எங்கே
எங்கே

---

146. (ஷையார் பாடியது)

இராகம்-நீலாம்ரி-தாளம்-ஆதி

பல்லவி

ச்ருங்கார லகரி ஸ்ரிதஜன ஸாகரி (ச்ரு)

அநுபல்லவி

ஸங்கீதாம் போஜா னந்த
மது மாதுரி மதமதகரி கங்களாங்கி
மதனரி மனோகரி மாமவ (ச்ரு)

சிட்டா ஸ்வரம்

ஸா ரிஸ நிப ஸநிபம கம பா
கமபஸ் நிப கமபநி
ஸரிஸ்நி ஸ்நிபம பநிபம பமகமரிகமரி கரி
பா மா காம பநி
ஸ்ஸநிப நிநிபம பபமக பநிதநி
மகபம நிபஸ்நி பமகப பநிதநி
பதப பமகஸ பமகஸ நிபமகஸ ஸ்நிபமகஸ
ரிஸ் நிபம காம பநி (ச்ரு)

சரணம்

அங்கஜாரி ஹ்ருத யங்கம தரஹ ஸிதே அகிலாகம ஸன்னுதே
ப்ருங்க சிகுரே சருணாரஸ பர பரிதே
துங்க ஜனக லஸிதே ஸாலஸிதே
லிங்க ராஜ ஸசனம்புஜ பூஜிதே

---

147. (கொலம்பியா புதிய பிளேட்)

மாஸ்டர். S. G. கிட்டப்பா.

இராகம்-ராகமாலிகா—தாளம்-ஆதி.

பல்லவி

மகா சுகிர்த ரூபசுந்தரி—மதி
வதனியே புனிதையே வினயமா
மனோகரியே மதனரதியே (மகா)

அநுபல்லவி

முக கோகில மிருது வசன சுபாஹித அலங்காரியே
சுரவனிதையர் தமையேசிகரும் சுமுகமோகனாங்கியே
பகரொணாத எழில்கிலவிய பாவையே கருணாகரி
பதும நேத்ரியே உல்லாச பாக்யவதி வசீகரி(மகா)

சரணம்

பருவகால தருணி கண்ய பாமினி மனோன்மணி—சௌ
பாக்ய விபவ சிலாக்ய நாயகி உனையல்லாது
தேருதல் வாய்மொழி புகல்பவர்
யாரோ தெரிகிலேனே இனி
ஆறுதலோடென்னை நீ அணைவாயெழில் சேர்மானே
மதனனுடல் மெலிந்தேனே இதமேயுரைசெய்தே
னறிகுவாய் (மகா)

சரணம் 2

ஆலோலமென்றே கூறும்கின் அமுதமான மொழியில்
எனதாசையு மீறுதுமட—அன்னமே அழகு சொர்னமே
எலாதினி மாதரசி சிறந்த யூகக்குணத்தரசி
இதத் தொழில் மனத்தினில் திகழ்த்திடும் (மகா)

---

148. (ஹிட்ஸன்ஸ் புதிய பிளேட்)

மிஸ்டர் K S தேவுடு அய்யர்

(ஆர்மோனியம், பின்பாட்டு.)

ராகமாலிகை. வள்ளி தெய்வானை.

வள்ளி தெய்வானை மகிழ் வேலா—தெய்வ
வானவர் கொண்டாடும் சக்திவேலா—நானு

ந்தனே புரிந்துதினம் உந்தனே வணங்குகிறேன்
வாராய் துயர் தீராய்.

கானரஸத் தேன்மொழி யுகந்தா
காருண்ய மெனக்கருள் வரந்தா—அந்தக்
கானமயிலேறிவரும் ஞான குருபரசிவ
கண்யா சுப்ர மண்யா
குன்றுதோறும் நின்றுலாவும் கோவே—உயர்
கும்பமுனிக் கன்புள்ள பிரானே—பொல்லாக்
கோரசூரரை மடித்த வீரசக்தி வேல் பிடித்த
குகனே வா ஷண்முகனே
முக்திதரும் வித்வ குணமூர்த்தி—உயர்
மோக்ஷகதி சூக்ஷ்மா உன்கீர்த்தி—சொல்ல
முன்வருக என் மனது நன்மை பெறவே உனது
மோஹம் தெய்வ த்யாகம்

149 (பிளேட் பின்புறம்)

ஹி. ராகம். வருவாய் நீ மயில்வாஹனு.

வருவாய் நீ மயில்வாஹனு வள்ளி மோகனு
தருவாய் நின் பாதசேவை தஞ்சமென்றிருந்தோம்
தணிக்காசல வாழ்முருகா ததி ஷண்முகா (வ)
இலவுகாத்த கிளியதுபோல் ஏங்கிநான் புலம்புகின்
ஈராறுகையனே ஏழை என்னை இரட்சித்தாட் [றேன்
கொள்வது இதுபெரிதோ எழில் மிகுந்துய்யனே
எத்தனைதரம் முறைத்தும் சித்தம் இறங்காத தேனே
இன்னம் என்மீதில் வர்மமா இது தர்மமா (வ)

ஈராறு செவியிருந்தும் நீ என் முறையைக்
கேளாதிருப்பது இது வஞ்சமோ
இக்காலக் கலிதனில் திக்கெல்லாம் புகழும்
என்னப்பனே எனது துயர்க் கொஞ்சமோ
குஞ்சரி மகிழும்காதா தஞ்சை மதுரை
ராஜன்கிதா கொண்டாடும் தொண்டர்
நேயனே குன்றில் வாசனே (வ)

---

150. (கொலம்பியா புதிய பிளேட்)

பல்லடம் சஞ்சீவிராவ்

பல்லடம் காபி

பல்லவி

நித்யரூப எவரிபாண்
டித்ய மேமி நடுசுரா.

அனுபல்லவி

ஸத்யமைந யாஜ்ரு மீர ஸாமர்த்யமுகலதா.

சரணம்

பாநு பகலு ரேயு ரத்க ஸாநுஜ ட்டா
பூநிசேஷ ட மிதபார பூமிமேயடா

---

100 பாகம் முற்றிற்று.

உ

ஸ்தாபிதம் 1900.

விளம்பரம்.

உயர்தரமான மிஷின் பட்டுக்கயர்கள் எங்கள் சொந்த பார்வையில் நேர்த்தியான வேலைப்பாடுள்ளதும் நல்ல பின்னல் முருக்குகளுள்ளதுமான பலரகம் பல வர்ணங்களுள்ள பட்டுக்கயர், காசிக்கயர், பித்தான்கயர், லேடீஸ் கமர்கள், சாயம் என்னாளும் மாறாது உத்தரவாதமுள்ளது எங்களிடம் கிடைக்கும்.

தேவையான தினுசுகளுக்கு ஆர்டர் கொடுத்தால் அப்பப்போதுள்ள பஜார் நிலைமைப்படி ஆர்டர்களை கவனித்து உடனுக்குடன் அனுப்பி வைப்போம்.

வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து டிலே இல்லாமல் அனுப்பக்கூடும்.

விலாசம்:—

ராஜா பிரைட் பாக்டரி,

புரோப்ரைட்டர்,

அ. ரா. ராஜாராம்,

பட்டுக்கயர் வியாபாரம்,

No. 138, புதுமண்டபம், மதுரை.

ய திவாகரம் பிரஸ், மதுரை:—34.

உ

முக்கிய கவனிப்பு.

இதில் ஓடியன், கோலம்பியா, டாசோபோன் மாஸ்டர் வாய்ஸ், டுவின், ஹட்ஸன்ஸ் பிராட்காஸ்ட் கம்பெனிகளில் பிரபல சங்கீத வித்வான்கள் பாடிய பாடல்களும் காமிக் ஆக்டர்களுடைய பாடல்களும் டாக்கி சினிமாவில் பாடும் பாடல்களும் அடங்கிய கிருமபோன்

புதிய பிளேட் சங்கீதம்

டாக்கீஸ் மிஸ். T.P. ராஜலெக்ஷிமி, டாக்கீஸ் & ஓடியன் பிளேட் V. A. செல்லப்பா, M. K. தியாகராஜ பாகவதர் M.G. தண்டபாணி, S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம் பாள், S.V. சுப்பையா பாகவதர், P.S. சிவபாக்கியம், ஸ்ரீவை S. D. சுப்புலக்ஷிமி, T. V. சுப்புத்தாயி, M. K. சீதாலக்ஷிமி, N. S. ரத்னம்பாள், V. M. பெரியசாமி, T. M. ஜெகதாம்பாள், C. சரஸ்வதிபாய், K. S. சுந்தரி, R. C. கோவிந்தசாமி, T. S. கமலம், K. P. ஜானகி, T. S. ரமாமணி D.A. ஆர்தர் பாகவதர் இன்னும் அநேக சங்கீத வித்வான் களுடைய பாடல்கள் அடங்கியிருக்கிறது.

விலாசம் :—

V. கருப்பண பிள்ளை,

புக்ஸெல்லர், புதுமண்டபம், மதுரை.

நமது சொந்தப் பிரசுரங்கள்.

கிராமபோன் புதிய பிளேட் சங்கீதம்

20 பாகம் (பூராவும் புதிய பாடல்கள் அடங்கியது)	0—6—
50 பாகம் ஷை	0–10—(
100 பாகம் ஷை	1—0—0
ஓடியன் பிளேட் கோவலன் டிராமா (..0 பாகம்)	0—6—0
ஷை தூக்குதூக்கி டிராமா (10 பாகம்)	0—4—0
T. P. ராஜலக்ஷிமி டாக்கீஸ் கட்டடம்	0—6—0
குணங்குடி மஸ்தான் வேதாந்த கீர்த்தனை	0—2—0
S. G. கிட்டப்பா அனுதாப கீதம் (சரித்திர சுருக்கத்துடன்)	0—2—0
மதுரைவீரசுவாமி வர்ணிப்பு	0—2—0
M. K. தியாகராஜபாகவதர் டாக்கீஸ் பவளக்கொடி	0—2—0
பத்மாசனி அனுசூயா சரித்திரக் கும்மி	0—3—0
ஷை சீதா கலியாண பாட்டு	0—4—0
ஷை ருக்மாங்கத சரித்திரக் கும்மி	0—8—0

இன்னும் அநேகவிதமான டாக்கீஸ் சினிமா புஸ்தகங்களும் புதிய கிராமபோன் பிளேட் பாடல்களும் எங்களிடம் மொத்தமாகவும் சில்லரையாகவும் நேரிலும் V. P. மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்:—

V. கருப்பண பிள்ளை,

புக்ஸெல்லர்,

புதுமண்டபம், மதுரை.

விளம்பரம்.

கிருமபோன் புதிய பிளேட் சங்கீதம் 20 பாகம் (பூருவும் புதிய பாடல் அடங்கியது)	விலை	0—6—0
ஷை 50 பாகம்		0-10—0
ஷை 100 பாகம்		1—0—0
ஓடியன் பிளேட் கோவலன் டிராமா (20 பாகம்)		0—6—0
ஷை தூக்கு தூக்கி டிராமா (10 பாகம்)		0—4—0
கிட்டப்பா அநுதாபகீதம் (சரித்திர சுருக்கத்துடன்)		0—2—0
T. P. ராஜலெக்ஷிமி டாக்கீஸ் கட்டடம்		0—6—0
குணங்குடி மஸ்தான் கீர்த்தனை		0—2—0
மதுரைவீரசுவாமி வர்ணிப்பு		0—2—0

இன்னும் அநேக டாக்கீஸ் சினிமா புஸ்தகங்களும் கிருமபோன் புதிய பிளேட் பாடல்களும் எங்களிடம் மொத்தமாகவும் சில்லரையாகவும் நேரிலும் V. P. மூலமும் பெற்றுக் கொள்ளலாம்

விலாசம்:—

V. KARUPPANA PILLAI,
BOOK SELLER, MADURA.